
# தங்கம் 60



## மணிவிழா சிறப்பு மலர்

05.11.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம் 60

## மணிவிழா சிறப்பு மலர்

வெளியீடு

**மணிவிழா ஏற்பாட்டுக்குழு**

**05.11.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு**


**- திருக்குறள் 299**

விளக்கம் :


புறத்திலுள்ள இருளை நீக்கும் விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல. சான்றோர்க்கு அகத்து இருள் நீக்கும் பொய்யாமையாகிய விளக்கே விளக்கு ஆகும்.

- மு.வரதராஜர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட் தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்களின்
வாழ்க்கை மலர்கள் - நாள் ஒரு நற்சிந்தனையிலிருந்து

# இறைநிலையுணர்ந்த அறிவு



பேரியக்க மண்டலத் தோற்றங்கள் அனைத்திலும் சிறந்ததோர் தெய்வீகக் கருவூலம் மனிதப் பிறப்பு. பிரம்மம் என்பதே தெய்வம் எனப் போற்றப்படுகிறது. அதுவே தான், இறைவெளியாக எங்கும் நீக்கமற நிறைந்துள்ள சுத்தவெளியாகும். இதுவே எல்லாம் வல்ல பேராற்றலாகும். இது எல்லையற்ற விரிவு நிலையுடையதாக இருப்பதால் புலன்களுக்கு எட்டாத ஒன்றாக உள்ளது.


இது விரைவு, பருமன், காலம், தூரம் எனும் நான்கு கணக்குகளுக்கும் உட்படாதது. இம்மாபெரும் ஆற்றலிலிருந்து தான் பரமாணுவெனும் நுண்ணி யக்கத் துகள் தோன்றியது. பரமாணுக்கள் பல இணைந்து அணுவாகவும், அணுக்கள் பல இணைந்து பேரணு, செல்கள், பல உருவத் தோற்றங்கள், வானுலவும் கோள்கள், உலகம் மீது வாழும் ஓரறிவுத் தாவரம் முதல் ஆறறிவு மனிதன் வரையில் தொடரியக்கமான பரிணாமம் தான், 'பிரம்மம்' எனும் தெய்வீகப் பேராற்றலின் சரித்திரம்.

மனிதன் என்ற தோற்றமே, பிரம்மத்தின் ஆதி நிலையாகவுள்ள இறைவெளி முதற் பொருளாகவும், ஆறறிவு கொண்ட மனித மனமே இறுதியாகவும் உள்ளன. ஆதி முதல் அந்தம் வரையில் அனைத்தையும் இணைத்து ஒரே அகக்காட்சியாகக் காணக்கூடிய பேரறிவுதான் பிரம்மஞானம் ஆகும். இத்தகைய அறிவு தான் இறைநிலையுணர்ந்த அறிவு. அதுவே தான், முடிவு நிலையான மனத்தின் ஊடுள்ள உட்பொருளான அறிவாகவும், அவ்வறிவுதான் தானாகவும் இருக்கும் முழுமை நிலையுணர்ந்த தெளிவே பிரம்மஞானம் ஆகும்.

**- அருள் தந்தை -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதிக் கொண்டிருப்பதற்காக வேதம்
தோற்றுவிக்கப்பட வில்லை. அதன் உட்கருத்தை
உணர்ந்து ஒழுகுவதற்காகவே வகுக்கப்பட்டது



வேகம் என்பது மூன்று
மனவேகம், உயிர்வேகம், உடல்வேகம்
இந்த மூன்றுக்கும் ஓர் இணக்கம் வேண்டும்.
அவ்விணக்கம் இல்லை என்றால்
நோய் வரும். எண்ணங்களில்
குளறுபடி வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா ஏற்பாட்டுக் குழு

**தலைவர்**

திரு. கோ. பரமானந்தன்
தலைவர் வேலணை ம.க,பழைய மா.ச. கொழும்பு.

**உப தலைவர்**

திரு. சி. முருகானந்தவேல்
மன வளக்கலைப் பேராசிரியர்

**செயலாளர்**

திரு. காசுபதி நடராஜா
ஓய்வு நிலை சமூக சேவை உத்தியோகத்தர், மட்டக்களப்பு

**உப செயலாளர்**

திரு. பொன்.அருணகிரிநாதன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

**பொருளாளர்**

திரு.பொ. ஜெகதீஸ்வரன்
ஆத்திசூடி ஒன்றியம்.

**உறுப்பினர்கள்**

திரு. வ. பிரபாகரன்
அதிபர் கமு/வெஸ்லி உயர்தர பாடசாலை,
கல்முனை.

திரு. த. வரதன்ராஜ்
அதிபர், எகஸ்பிறஸ் கல்வி நிலையம்.
இருபாலை, கோப்பாய்.

ஜனாப். அப்துல் கையூம்
பிறை F.M
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திரு.தி. திருஞானசம்பந்தர்
வேலணை ம.க, பழைய மா.ச. கொழும்பு.

திருமதி. தர்மினி சேகர்
ஆசிரியை

திருமதி. விமலேஸ்வரி விஜயநாதன்
ஆசிரியை

திரு. சி. தயாபரன்
ஆத்திசூடி ஒன்றியம்.

திரு. சி. வரதலிங்கம்
ஆத்திசூடி ஒன்றியம்.

திரு. க. லோகேஸ்வரன்
முகாமைத்துவ உதவியாளர்,
மட். அரசினர் போதனா வைத்தியசாலை.

Dr. த. திவாகர்
தள வைத்தியசாலை, கந்தளாய்

திரு. G. சிறீதரன்
ஆசிரியர், வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

இழந்துவிட்டால் வலி
விட்டுக் கொடுத்தால் நிறைவு
ஓடிஒழிந்து கொண்டால் பயம்
விட்டுவிலகிச் சென்றால் தியாகம்
வாழ்த்தி நின்று பார்
தெரியும் அன்பு

அன்பு என்பது
மனிதனின் பலவீனம்
ஏமாற்றப்படும் அன்பு
மனிதனை மிருகமாக்கும்
ஏமாற்றமில்லா அன்பு
மிருகத்தை மனிதனாக்கும்

மரணத்தை நோக்கி
நகரும் வாழ்க்கையில்
வாழச் சொல்லி
வற்புறுத்துவது
காதலும் நட்பும் தான்
காதலை நேசிப்போம்
நட்பை சுவாசிப்போம்

சொந்தங்கள்
என்ன பேசினாலும் மௌனமாக
நிற்கிறேன் என்று
பார்க்கிறீர்களா ?
ஒரு நாள் உலகமே
என்னைப் புகழ்ந்து பேசும்
போது அவர்கள் ஊமையாய்
நிற்பதை பார்க்கத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவும் நானும்

ஈடு இணையற்ற, ஒப்புவமையற்ற இறை நிலையே பிரபஞ்சத்தின் அனைத்து வடிவங்களாகவும் தோற்றம் பெற்றுள்ளது. அனைத்து உயிரினங்களாளவும் அந்த இறைநிலை இருக்கின்ற உண்மைத் தெளிவு தான் "ஞானம்". அந்த உண்மையின் தத்துவமாக இருப்பது தான் அனைத்து உயிர்களுக்கும் தெய்வம் அன்னையாக வடிவெடுத்துள்ளமை. எனவே தெய்வத்திற்கு உவமை கூற முடியுமானால் அது அன்னையாக மட்டுமே இருக்க முடியும். எனக்கு அம்மா தான் தெய்வம், தெய்வம் தான் அம்மா. என்னை ஆளாக்கி அகவை அறுபது காண மூலமாக இருந்த என் அன்னையை வணங்குகிறேன் வாழ்த்துகின்றேன்.

தெய்வத்தின் குழந்தை

"தங்கன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Vazhga Vaiyagam



Founder Father
Thathuvagnani Vethathiri Maharishi

SKM. MAEILANANDHAN
PADMASHRI AWARDEE
PRESIDENT

# The World Community Service Centre

( Estd.1958 Regd.Under Tamil Nadu Societies Registration Act. )

26, Second Seaward Street, Valmiki Nagar, Thiruvanmiyur,
Chennai - 600 041. Tamilnadu, India
Tel : 044 - 24571153, 24571264, Mobile : 94451 79431
E-Mail : chennai.wcsc@vethathiri.edu.in
web : www.vethathiri.edu.in

Vazhga Valamudan

R.VARADHARAJAN
GENERAL SECRETARY



## வாழ்த்துரை

மனவளக்கலை பேராசிரியர் பேரன்புமிகு திரு. ஆறுமுகம் தங்கராஜா அவர்களுக்கு மணிவிழா நடைபெறுவது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அவரது துணைவியாரும் மனவளக்கலை துணைப் பேராசிரியராக தொண்டாற்றி வருவது குறித்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி.

30 ஆண்டுகாலம் ஆசிரியர் பணியைச் சிறப்பாக செய்து ஓய்வு பெற்ற பின் மனவளக்கலை ஆசிரியர் பணியை ஏற்று, துணைவியாருடன் சமுதாய தொண்டாற்ற முனைந்திருப்பது அவரின் தனிச்சிறப்பாகும்.

இல்லற வாழ்விலும் வெற்றி பெற்று 3 மகன்களையும் நல்ல நிலைக்கு உயர்த்தி இன்று 60-வது ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. இம்மணிவிழா தம்பதியினர் எல்லாம் வல்ல இறையருளையும் குருவருளையும் பெற்று நல்ல உடல்நலத்தோடு நீண்ட நாள் வாழ்ந்து இறைப்பணி செய்ய இறைவனை வேண்டுகிறேன்.

மணிவிழா சிறப்புடன் நடைபெற எனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

நன்றி,

குருவின் சேவையில்,

(SKM. மயிலானந்தன்)
தலைவர்,
உலக சமுதாய சேவா சங்கம்.

WCSC President's Office : 101, Iranian Street, Opp. to Manickavasagar Colony, Karur By - Pass Road, Erode - 638 002 Tel : 0424 - 2258212, 13, 16. E-mail: president.wcsc@vethathiri.edu.in

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து குருமார் அமைப்பு
HINDU PRIEST'S ASSOCIATION
(Reg No : HA / 04 / CBO / 40)
10/2, Bhathiya Mawatha, Kalubowila, Dehiwala, Sri Lanka.

05.10.2015



# ஆசிச் செய்தி

அன்பே உருவாக பரம்பொருளின் பாதம் பணிந்து எமது மதிப்பார்ந்த ஆசிரியர் திரு. ஆ. தங்கராஜா அவர்களின் மணிவிழாச் செய்தி கிடைத்து மிகவும் மகிழ்வடைந்தோம்.

எமது தர்ம சாஸ்திரங்களிலே ஒரு மனிதனாகப் பிறந்தவன் எவ்வாறான செயற்பாட்டினை எக்காலத்தில் செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு தனது கடமையினை செவ்வனே நிறைவு செய்த ஒருவருக்கு உரிய காலாத்தில் இவ்விழா எடுக்கப்படுகின்றமையினை அறிந்து மனம் மகிழ்வு அடைகின்றோம்.

மேலும்
25வது ஆண்டு நிறைவில் - வெள்ளிவிழா
50வது ஆண்டு நிறைவில் - பொன்விழா
60வது ஆண்டு நிறைவில் - மணிவிழா
75வது ஆண்டு நிறைவில் - பவளவிழா
80வது ஆண்டு நிறைவில் - முத்துவிழா
100வது ஆண்டு நிறைவில் - நூற்றாண்டு விழா
செய்யப்படலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இது தனிநபருக்கோ அல்லது நிறுவனத்துக்கோ பொருத்தமுடையது ஆகும். இன்னுமொரு வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கினால் தமிழ் வருடங்கள் அறுபதாகும். ஆகவே ஓர் பூரணமான சுற்றினை பூர்த்தி செய்து மறு சுற்றில் காலடி வைக்கின்றார் எமது மனவளக்கலை பேராசிரியர்.

ஆசிரியர் அவர்களது மணிவிழாவின் நோக்கம் அவரது சேவையினை, பெருமையினைப் பாராட்டி வாழ்த்துவதுடன் ஏனையோருக்கும் எத்தி வைப்பது மாகும். அதாவது இவரது பூரணமான செயற்பட்டினை இளையோர் உற்பட அனைவரும் அறிந்து அவர்களும் இவரின் செயற்பாட்டினை அடியொற்றி நடக்க வேண்டும் என்பதாகும்.

ஆகவே இவ்வாறான விழா ஒருவருக்காக எடுப்பது சமூகத்தின் சமூக பொறுப்பும் கடமையுமாகும். ஆசிரியர் அவர்கள் தனது குழந்தைகளுக்கும் உரிய வகையில் செம்மையான பாதையினைக் காட்டி நிலைப்படுத்தியுள்ளார். அவருக்கும், அவர் தம் துணைவியாருக்கும் எமது பாராட்டுக்களும் ஆசியுரைகளும் உரித்தாகட்டும். மேலும் மேலே குறிப்பிட்டது போல் வரிசைக் கிரமமாக அனைத்து விழாக்களையும் தங்கராஜா தம்பதியினர் காண வேண்டும் என பரம்பொருளினைப் பிரார்த்தித்து பாராட்டி வாழ்த்தி ஆசிவழங்கி மிக நிறைவான மனமகிழ்வு அடைகின்றோம்.

அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் ஊன்றிய தூண்

சுபம்


PRIEST'S ASSOCIATION

தலைவர்: சிவஸ்ரீ கு. வை. க. வைத்தீஸ்வரக் குருக்கள்
President: Siva Sri K. V. K. Vytheeswara Kurukkal
Tel: (+94) 11 2721671, 0777 349123.
E-mail: rishivikash212@yahoo.com

செயலாளர்: பிரம்மஸ்ரீ நா. கிருஷ்ணமோகன் சர்மா
Secretary: Brahma Sri N. Krishnamohan Sarma
Tel: (+94) 071 2670280



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Principal, St. John's College Jaffna

I'm indeed pleased to forward this message of greetings and best wishes to the souvenir being published to celebrate the Diamond Jubilee of Mr A. Thangarajah.

First and foremost, I wish Mr Thangarajah a very happy Diamond Jubilee and many more years of dedicated service to the society.

Mr Thangarajah taught at St John's College from 2011 to 2012 in the Advanced Level classes. He taught Biology for the English Medium students, who benefited immensely from him. As he has served as Additional Examiner (Biology) for the Advanced Level examinations, his knowledge and experience helped him to render proper guidance and direction to students and teachers.

His encouragement and guidance to students participating in the competitions organized by the Jaffna Science Association were remarkable.

I pray that God will give him strength and good health to continue to render valuable services to the community.

***Rev N J Gnanaponrajah***
Principal
St John's College Jaffna
7th Oct 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

அகவை அறுபதில் மணிவிழாக்காணும் ஆசிரியர். ஆ.தங்கராஜா அவர்களுக்கான மணிவிழாவையொட்டி மலரும் 'தங்கம் 60' மணிவிழா மலருக்கான ஆசிச் செய்தியினை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சிய டைகின்றேன். இவ்வாசானின் வாழ்வியல் வசந்தங்களையும் வரலாற்றில் பதித்த தடங்களையும் இன்றைய சந்ததியினர் அறிந்து கொள்வதற்கும் இச்சிறப்பு மலர் உதவும் என்பது என் நம்பிக்கையாகும்.

மணிவிழாக் காணும் மனதில் இடம் பிடித்த ஆசிரியர் அவர்கள் 05.11.1955ம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள, தீவுப் பகுதி சப்த தீவுகளில் வேலணை எனும் இடத்திலே இ.ஆறுமுகம், ஆ.சொர்ணம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்கள். இவர்களது பிறப்பு கல்வியில் ஒரு விடியல் எனக் கருதுகின்றேன்.

1982ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானிப் பட்டம் பெற்ற இவர் விலங்கியல் உயிரியல் ஆசிரியராக 16.04.1984ல் முதல் நியமனத்தை ஸம்ஸுல் இல்ம் ம.வி இல் பெற்றுக் கொண்டார்கள். இதன் மூலம் தன் சேவையை ஆரம்பித்த ஆசிரியர் அவர்கள் கல்வித் துறையில் பல அளப்பரிய சேவைகளைச் செய்துள்ளார்கள் எனக் கூறமுடியும்.

1979 – 2010ம் ஆண்டு வரை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கல்முனை, கொழும்பு, ஆகிய மாவட்டங்களில் தனியார் கல்வி நிறுவனங்களில் விலங்கியல், உயிரியல் ஆசிரியராக பணியாற்றினார்கள்.

10.09.1983ல் ஆரையம்பதி எனும் ஊரைச் சேர்ந்த அன்னம்மா கணபதிப்பிள்ளை என்பவரை கரம் பிடித்தார்கள். அவரும் ஒரு ஆசிரியை ஆவார்கள். இவர்களுக்கு 3 ஆண்பிள்ளைகள் உள்ளனர். அவர்களும் பல்வேறு துறைகளிலும் பதவி வகிக்கின்றனர் என்றால் பெருமைக்குரிய விடயமே.

தனது இந்த வயதிலும் கூட சமூக சேவை நோக்கோடு 'மனவளக்கலை யோகா' எனும் ஆன்மீகத்துறையில் செயலாற்றுகின்றார்கள் என்றால் இது பெரும் மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

இவ்வாறு ஆசிரியர் சேவையில் விடியல் தந்த ஆசான் அவர்கள் 05.11.2010ல் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்கள். அவர்கள் ஓய்வு பெற்றாலும் கூட அவர்களது பணிகளும் சேவைகளும் அகல் விளக்காய் சுடர் விட்டு ஒளிர்கின்றது. இன்னும் பல ஆண்டுகாலம் அணையாமல் ஒளிரட்டம் என மனமாற வாழ்த்துகின்றேன்.

**அல்ஹாஜ் ஏ.ஆர்.செயினுலாப்தீன்** (மௌலவி)

48 D/3, எஸ்.எம் வீதி, மருதமுனை - 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்

# ஆசிச் செய்தி



அகவை அறுபதைக் கொண்டாடும் மனவளக்கலைப் பேராசிரியரும் இலங்கை மனவளக்கலை மன்ற அறங்காவலரும், பள்ளிக்கல்விக்கு பொறுப்பாக இருந்து செயலாற்றும் திரு.ஆறுமுகம் தங்கராஜா அவர்களை எனது குடும்பத்தின் சார்பிலும் மன்றத்தின் சார்பிலும் பல்லாண்டு நீடூழிவாழ வாழ்த்துகின்றேன். ஆறுமுகம் தங்கராஜா அவர்களை நாங்கள் தங்கராஜா மாஸ்டர் என்றுதான் செல்லமாக அழைப்போம். இவரை கடந்த எட்டு வருடங்களாக மனவளக்கலை மன்றத்தின் மூலம் அறிமுகமானோம். நல்ல பண்பு மிக்க உயர்ந்த குணத்தைக் கொண்டவர். எத்தனையோ முறை சிறு சிறு வாக்கு வாதங்கள் ஏற்பட்டு இருந்தாலும் மிகவும் நாசுக்காக கண்ணியமான முறையில் மனவளக்கலையில் எதைகற்றோமோ அதை அவரது ஒவ்வொரு செயல்களிலும் நான் அவதானித்து வருகின்றேன்.

நல்ல குடும்பம், நல்ல துணைவியார், மூன்று நன் மக்களும் நல்ல நிலையில் கல்வி கற்று உயர்ந்த பதவிகளையும் தொழில்களையும் செய்து வருகின்றார்கள். அந்த வகையில் அவரையும் அவரது அன்புத் துணைவியாரையும் பாராட்டுகின்றேன். எந்த விதத்திலும் பெருமை கொள்ளாமலும், சினம் கொள்ளாமலும் சிரித்த முகத்துடன் தனது கடமைகளை செய்து வருவதையும் அவதானித்து வருகிறோம். மன்றத்தில் எந்த சேவையையும் அவரே முன்னின்று எடுத்து அதை சரிவரச் செய்வதில் அவருக்கு நிகர் அவரே! எந்த பிரதிபலனையும் பாராது தன்னலமற்ற தொண்டாற்றும் தங்கராஜா மாஸ்டரையும் அவரது குடும்பத்தையும் உடல் நலம்நீள் ஆயுள், நிறை செல்வம், உயர் புகழ் , மெய்ஞ்ஞானம் பெற்று ஓங்கி வாழ வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்
குருவின் சேவையில்
இலங்கை மனவளக்கலை
மன்ற தலைவர்

**அ. மதுரைவீரன்**

கொழும்பு மண்டலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும் மகரிஷி மைந்தன்



தீவக மண்ணில் வெற்றி வேலனின் மாட்சிமை பொருந்திய வேலணைந்த ஊராம் வேலணையை பிறப்பிடமாகவும் அன்பு, பண்பு, அடக்கம் இவற்றை அணிகலன்களாகவும் கொண்ட மணிவிழா நாயகன் திரு தங்கராஜா அவர்கள் ஈரறுபது கண்டு பூவோடு இணைந்த மணம் போல், கடலோடு இணைந்த நீலம் போல் என்றென்றும் நறுமணத்துடனும், களங்கம் இல்லாமலும் வாழ வளர என் இதய பூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பிறக்கும் போது ஏழையாய் பிறக்கலாம் ஆனால் வாழும் போது ஏழையாய் வாழக்கூடாது என்று எண்ணி தன் வாழ் நாளில் கல்விச் செல்வத்தை தேர்ந்தெடுத்தார். யாராலும் திருடப்படாததும் கொடுக்கக் கொடுக்க குறையாததுமான கல்வி செல்வமே அவரின் வாழ்வின் எழுச்சிக்கு வழி வகுத்தது. அதன் பயனாக மண்ணைத்துளைத்து விண்ணைத்தொடும் விஞ்ஞானத்தையும் மெஞ்ஞானத்தையும் ஒப்பீட்டளவில் கற்றுணந்தார். இதனால் எதிர் கால சந்ததிக்காக பல அறிவு சார் விஞ்ஞான கல்வி நூல்களை வெளியிட்டு ஆராய்ச்சி என்றும் ஆக்கம் என்றும் அறிவுச்சாணைக்கு பட்டை தீட்டி பட்டதாரியானார்.

அத்தோடு அருட்தந்தை வேதாத்ரி மகரிஷி அவர்களினால் வடிவமைக்கப்பட்ட மனவளக்கலை யோகா பயிற்சியில் இணைந்து நிறைவாக பயிற்றுவிக்கும் பேராசானாய் இருந்து வடக்கு கிழக்கு எங்கும் சென்று மக்களை நல்வழிப்படுத்தும் பணியில் இறங்கி யோகா பயிற்சிகளை வழங்கிவருகின்றார்.

உள்ளத்தில் உயரிய நோக்கமும் எண்ணத்தில் ஏற்றமும் கொண்ட திரு ஆ.தங்கராஜா அவர்கள் தன்னடக்கமும் பண்பும் அன்பிதயமும் கொண்டவர். இத்தனைக்கும் அவருக்கு எப்போதும் துணையாகவும் உதவியாகவும் அவரது துணைவியாரும் பிள்ளைகளும் இருந்திருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது அதற்கு எடுத்துக்காட்டாக அவரது புதல்வன் ரெனிஸ் பந்து விளையாட்டில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று இலங்கைக்கும், பெற்றோருக்கும், தாம் பிறந்த மண்ணிற்கும் பெருமை தேடி கொடுத்துள்ளார். தனது பிள்ளைகள் சிறப்போடு வாழ வழி வகுத்து கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வழிசமைத்தார். அதனை பிள்ளைகள் எட்டி நிற்க கண்டு கழிகூர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு ஆ.தங்கராஜா குடும்பம் சுற்றம் சூழ வானவரும் பூமாலை சொரிய மண்ணவரும் மகிழ்ந்து நிற்கும் இம் மணிவிழா நாளிலே சீர் மிக்க சிறப்போடு என்றென்றும் வாழ அகமகிழ்ந்து வாழ்த்தி நிற்கின்றோம்.

எல்லாம் வல்ல இறைநிலையுடன் இணைந்து நின்று அருட்பேராற்றல் கருணையினால் உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர் புகழ், மெய்ஞானம் பெற்று வாழ்க வளமுடன்.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

அன்புடன்
மனவளக்கலைப் பேராசிரியர்
அருள்நிதி **சி.முருகானந்தவேல்** குடும்பம்.

முடியாது என்று சொல்வது
மூடநம்பிக்கை
முடியுமா என்று கேட்பது
அவநம்பிக்கை
முடியும் என்று சொல்வதே
தன்னம்பிக்கை

விட்டுக் கொடுங்கள்
விருப்பங்கள் நிறைவேறும்
மன்னிப்புக் கொடுங்கள்
தவறுகள் குறையும்
மனம் விட்டுப் பேசுங்கள்
அன்பு அதிகமாகும்

விட்டுக் கொடுங்கள்
விருப்பங்கள் நிறைவேறும்
மன்னிப்புக் கொடுங்கள்
தவறுகள் குறையும்
மனம் விட்டுப் பேசுங்கள்
அன்பு அதிகமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව

*பாராளுமன்றம்*

**PARLIAMENT**

# வாழ்த்துரை



அகவை அறுபதில் கால் பதித்துள்ள திரு.ஆறுமுகம் தங்கராஜா (உயிரியல் ஆசிரியர்) அவர்களுக்கான மணிவிழாவையொட்டி மலரும் "தங்கம் 60" மணிவிழா மலருக்கான வாழ்த்துரை வழங்குவதையிட்டு, மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் மகிழ்ச்சிய டைகின்றேன்.

நானும் கடந்த 30 ஆண்டுகளாகக் கல்விப்புலத்தில் பணியாற்றியவன் என்ற வகையில் மேற்படி ஆசிரியர் அவர்களின் அறிவு, ஆற்றல், ஆளுமை, அஞ்சாமை பற்றி நன்கு அறிவேன் உயிரியல் ஆசிரியனாக இருந்து வின்சன் தேசிய பாடசாலைக்குப் பெருமை சேர்த்தவர்களில் இவரும் ஒருவராவர். பல மாணவர்கள் உயிரியல் துறையினூடாக உயர்ந்து, நிமிர்ந்து நிற்பதற்குரிய ஆற்றுப்படுத் தலையும்,அறிவூட்டலையும் இவர் வழங்கியுள்ளார்.

வாழ்வியல் ஊடாக வடபுலத்தினையும் கிழக்குப்புலத்தினையும் இணைத்துக் காட்டிய பெருமையும் இவருக்குண்டு. தனது மூன்று ஆண் பிள்ளை களையும் மருத்துவம், பொறியியல், விளையாட்டுத்துறைகளுக் கூடாக வளர்த்தெடுத்த மாண்பும் இவருக்குண்டு.

மேற்படி பண்புகளைக் கொண்ட ஆசிரியர் ஆ. தங்கராஜா அவர்கள், அறிவியற்துறையுடன் நின்றுவிடாமல் ஆன்மீகத் துறையுடன் இணைந்து வழிகாட்ட முற்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது. இவரது பணிகள் சிறக்க இறைவன் துணை நிற்பானாக.

**Mr. G. Srineshan, MA.M.Ed,PGDE,SLEAS.**
**Member of Parliament,**
**Batticaloa District.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தங்கம்" 60 க்கான வாழ்த்துச் செய்தி



இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு கிடைத்த நட்பு எனக்கும் தங்கத்துக்குமானது. ஆம் நான் மட்டக்களப்பு வின்சன் மகளிர் கல்லூரியிலே ஆசிரியராக கடமைபுரிந்து கொண்டிருந்த வேளையில்தான் தங்கராஜா சேர் அவர்களும் எங்கள் குளாத்தில் இணைந்து கொண்டார் அன்றிலிருந்து இன்றுவரை எங்கள் நட்பு தொடர்கிறது

இருபது வயது இளமைத் தோற்றம் கொண்ட தங்கத்துக்கு அறுவது வயதா? ஆச்சரியமாவிருக்கிறது ஆனால் ஆச்சரியப் படுவதற்கு என்னவிருக்கிறது எனும் கேள்வியும் என்னுள் எழுகிறது. ஓயாத உழைப்புடனும் தளராத செயற்பாட்டுடன் எண்ணங்களும் இளமையாகவிருந்தால் எப்போதும் இளமைத் தோற்றத்துடன் இருக்கலாம் என்பதை நிரூபித்திருப்பவர் "தங்கம்"

எனது நண்பர் தங்கராஜா சேர் அவர்களது அகவை அறுபது பூர்த்தியாவதையிட்டு வெளிவரும் சிறப்புமலர் "தங்கம் 60" க்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன், வாய்ப்புத் தந்தமைக்காக நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன் இது ஒரு வாழ்த்தச்செய்தி என்பதைவிட அவருடனான எனது அனுபவங்களை ஞாபகப்படுத்தும் அவர் பற்றிய எனது எண்ணங்களை பதிவதற்கான வாய்ப்பாகவே நான் கருதுகின்றேன்.

தங்கத்தை எப்படிப்பார்ப்பது நல்ல எண்ணங்கொண்ட நண்பனாகவா.. சமூக அக்கறை கொண்ட நல்லாசானாக.. இலட்சியத் தந்தையாகவா.. எப்படிப்பார்த்தாலும் எல்லாவற்றிலும் தனித்து தெரிபவர் தான் "தங்கம்" எனும் ஆறுமுகம் தங்கராஜா.

**நல்ல எண்ணங்கொண்ட நண்பனாக..**

அவர் என்னைப்போன்ற நண்பர்களுடன் பழகும் விதமே தனி. எந்தவித தற்பெருமையும் இல்லாமல் குரோத மனப்பான்மையில்லாமல் நட்பை மதித்து நடப்பவர் தான் தங்கராஜா. அவருக்கும் எனக்கும் வயது வித்தியாசம் இருந்தாலும் நாங்கள் இருவரும் பழகும் போதும், அளவளாவும் போதும் எந்தவித வித்தியாசமும் எமக்குத் தெரிவதில்லை. எந்தவொரு இக்கட்டான சந்தற்ப்பத்திலும் தீர்க்கமான ஆலோசனை வழங்கக்கூடிய நல்ல திறன் படைத்த நண்பன். என்னுயை குடும்பவாழ்விற்கு நேரத்துக்குகந்த நல்ல ஆலோசனை வழங்கி வழிகாட்டியாகவிருந்தவர். நான் அவரை ஒருபோதும் மறப் பதற்கில்லை. இவ்வாறுதான் இவரது மற்றைய நண்பர்களும் உணர்வார்களென நினைக்கின்றேன். நான் ஆசிரியனாகவிருந்த காலத்திலே பாடசாலை மட்டத்திலே இரண்டு நாடகங்களைப் பழக்கி தேசியமட்ட விருதை வின்சன் மகளிர் பாடசாலைக்காக பெற்றுக் கொடுத்தேன். இச்செயற்பாட்டிலே எனது வலது கரமாகவிருந்தவர்களில் ஒருவர் தங்கராஜா. இவருடன் இணைந்து மதிவண்ணண் சேர், மாலா ரீச்சர், சாந்தி ரீச்சர், சிறி சேர், ஜெயச்சந்திரனென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் எனக்கு உதவியாயிருந்தார்கள். அப்போது எங்களுக்குள் குழுச்செயற் பாடேயிருந்தது. அது ஒருபொற்காலம். அந்தக்காலம் பற்றி எழுதப்போனால் தனியொரு புத்தகமே எழுதிவிடலாம் தற்போதைக்கு தவிர்த்துக் கொள்கின்றேன் இன்னுமொரு சந்தற்ப்பம் கிடைத்தால் கட்டாயம் பதிவு செய்தே ஆகவேண்டும் அந்த இனிய நினைவுகளை.

**சமூக அக்கறை கொண்ட நல்லாசானக ...**

மாணவப்பருவ அபிவிருத்தியிலே ஆசிரியரின் வகிபாகம் மிகமுக்கிய மானது. பெற்றோர்களுக்கு சமமாக ஆசிரியர்களும் பொறுப்பேற்கும் போதே மாணவப்பருவம் நல்ல முறையில் அபிவிருத்தியடையும். இதையுணர்ந்து செயற்பட்ட ஆசிரியர்களது வரிசையிலே முக்கியமான ஆசிரியராக நான் இவரைப் பார்க்கின்றேன். பல்கலைக்கழகத்திலே பட்டதாரி மாணவனாக விருந்த போதே அதே பல்கலைக்கழகத்தக்கு மாணவர் குழாத்தை அனுப்பிய ஆசிரியர் இவர். மட்டக்களப்பு வின்சன் மகளிர் பாடசாலையிலே நானும் தங்கராஜா சேரும் கற்பித்துக் கொண்டிருந்த வேளையிலே மாணவர்களது கல்வியிலும், பிற அபிவிருத்தியிலும் அவர் காட்டிய அக்கறையை நேரிலே பார்த்தவன் நான். அவரது சமூக அக்கறை மிக மிக மேலானது.

**இலட்சியத் தந்தையாக ...**

ஒரு ஆண்மகன் பெற்றோருக்கு நல்ல மகனாகவிருப்பது இலகு அதேபோல ஒரு நல்ல நண்பனாக விருப்பதும் இலகு. ஏன் ஒரு பெண்ணுக்கு நல்ல காதலனாகவிருப்பதும் கணவனாகவிருப்துவும் கூட இலகுதான். ஆனால் பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாக விருப்பது கடினம். இது ஒரு தவம் வாழ்வின் தியாகம். இந்த முயற்சியிலே தோற்றுப் போனவர்களே அதிகம். ஆனால் இம்முயற்சியில் வெற்றிகண்டு ஒரு இலட்சியத் தந்தையாக இருப்பவர்தான் தங்கராஜா சேர். இவர்களது பிள்ளைகள் கொடுத்து வைத்தவர்கள் தங்கராஜா சேர் போல ஒரு தந்தையை பெற இவர்கள் தான் தவம் செய்திருக்க வேண்டும். இதனை அவரது பிள்ளைகள் உணர்வர். நீண்டகாலமாக இவரது குடும்பத் தாருடன் தொடர்புடையவன் எனும் ரீதியிலே நானும் நன்குணர்ந்தவன் இவரது பிள்ளைகள் கொடுத்துவைத்தவர்கள்.

தங்கராஜாசேர் பற்றி எழுதிக் கொண்டேயிருக்கலாம் இருந்தாலும் இதனை வாழ்த்துச் செய்தியாக கருதுவதனால் இத்துடன் நிறைவு செய்கின்றேன்.

வாழ்த்துக்களுடன்

திரு. **வெ.தவராஜா**.எஸ்.எல்.ஏ.எஸ்
பிரதேச செயலாளர்
மண்முனை வடக்கு
மட்டக்களப்பு

Mr.V.Thavarajah S.L.A.S
Divisional Secretary
Manmunai North,
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மணிவிழா நாயகன் திரு.ஆ.தங்கராஜாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எனது இனிய நண்பரான இவர் மட்டக்களப்பு வின்சன்ற் உயர்தர பாடசாலையில் விலங்கியல் கற்பிக்கும் சிறந்த ஆசிரியராகக் காணப்பட்டார். மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலைச் சமூகத்தினால் நேசிக்கப்பட்ட ஒரு சிறந்த ஆசிரியராவார். பிறபாடசாலை மாணவர்களும் இவரைத் தேடி கற்றலை மேற்கொண்டனர்.

கல்லடியில் வசித்துக்கொண்டு தனது மூன்று மகன்களையும் புனித மிக்கேல் கல்லூரியல் சேர்த்துக் கல்வியூட்டினார். மனைவி தாவரவியலில் சிறப்புப்பட்டம் பெற்ற ஆசிரியராக மட்/இந்துக்கல்லூரியில் தனது கடமையை மேற்கொண்டிருந்தார். இவ்வேளையில் புனித மிக்கேல் கல்லூரியில் ரெனிஸ் விளையாட்டு (Tennis) அறிமுகப்படுத்தப்பட்டு மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இவ்வேளையில் தனது மகன்களில் ஒருவரையும் அதில் சேர்த்து பயிற்சிகளை வழங்கினார். இதில் விஷேடம் என்னவென்றால் ஒவ்வொரு நாளும் அதிகாலை வேளையில் தங்கராஜா சேரும் மகனுடன் சேர்ந்து வீதியில் ஓடி பயிற்சி பெற்றதுதான். இவ்வாறு மகனுக்காக தானும் அவரோடு சேர்ந்து பயிற்சியில் ஈடுபட்டு இன்று அவர் ஆசியாவிலே சிறந்த வீரராகவும் உலகம் போற்றுபவராகவும் காணப்படுகின்றார். இங்கே இவர் காட்டிய அக்கறை மகனை உயர்த்திவிட்டது. இதுபோல் ஏனைய இருவரையும் ஒருவர் வைத்தியராகவும் மற்றயவர் பொறியியலாளராகவும் உயர்வு பெற உறுதுணையாக இருந்தார் என்றால் மிகையாகாது. இவ்வளவிற்கும் இவர் கொழும்பிற்குச் சென்று குடியேறியமையே இந்த உயர்ச்சிக்கு காரணமாகியது என்ற உண்மையையும் சொல்லித்தான் ஆகவேண்டும்.

இவர் கொழும்பில் கடமையாற்றிய காலத்தில் தன்னை ஒரு சிறந்த க.பொ.த உ/தர விஞ்ஞானத்துறை சார்ந்த ஆசிரியராகவும், அதனோடு ஆன்மீகத் துறையிலும் கால்பதித்து மனவளக்கலை நிபுணராகவும் ஆக்கிக்கொண்டமை என்னை வியக்கவைக்கின்றது. அதுமட்டுமல்ல அவர் எந்தத்துறையில் கால்வைத்தாலும் அதிலே மிகவும் ஆழமாக இறங்கிவிடுவார்.இது அவரது இயல்பு. மேலும் அண்மைக் காலத்தில் கண்டறியப்பட்ட விஞ்ஞான உண்மைகள் எல்லாம் எமது முன்னோர்கள் மெஞ்ஞானத்தின் மூலம் அறியப்பட்டவை என்பதனை தனது விஞ்ஞான, மெஞ்ஞான ஆழ்ந்த அனுபவத்தினூடாக சமூகத்துக்கு எடுத்தியம்புவதைக் காணும்போது அவரது திறமையை என்னவென்பது.

இவ்வாறு திறமைகள், அனுபவங்கள் பொருந்திய நண்பர் தங்கராசா மணிவிழாக் கொண்டாடுகின்றார் என்றால் அது மிக்க மகிழ்ச்சியே. இவரது வாழ்வு சிறக்க வாழ்த்துவதுடன் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து சமூகத்துக்கு சேவையாற்ற இறைவன் அருள்புரிவாராக.

க.பாஸ்கரன்,
வலயக் கல்விப் பணிப்பாளர், மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தங்கம் 60"



அகவை அறுபது காணும் அன்புத் "தங்கம்" தங்கராஜா அவர்களை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன். கடந்த 35 வருடங்களாக அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தமை நான் பெற்ற பாக்கியம் என்றே கருதுகின்றேன். நான் அவரிடம் கற்ற மாணவனில்லை ஆனால் அவரிடமிருந்து நிறையவே கற்றிருக்கிறேன். அன்பு, பொறுமை, தன்னடக்கம், விட்டுக்கொடுப்பு, மனத்திடம், மற்றவருக்கு உதவுதல், தன்மீதும் தனது குடும்பத்தின் மீதும் தான்சார்ந்த சமூகத்தின் மீதும் கொண்டுள்ள அபரிமிதமான காதல், பிழையெனக் கண்டால் அங்கேயே அப்போதே சுட்டிக் காட்டி சரியை அல்லது உண்மையை நிலைநிறுத்த அவர் காட்டும் அக்கறை என அவரிடம் காணும் பல நல்ல குணங்களை என்னால் அடுக்கிக் கொண்டே போக முடியும். சரியைச் சரியெனவும் பிழையைப் பிழையெனவும் சுட்டிக்காட்டுவதால் இவருக்கு சில அதிகார மட்டத்தில் எழுந்த எதிர்ப்பினையும் நானறிவேன். ஆனால் அந்த எதிர்ப்பினை அவர் தனக்கு சாதகமாக பயன்படுத்தி தன்னையும் தன் குடும்பத்தினையும் வளர்த்துக் கொண்ட சாதனை அல்லது சாதுரியம் நிச்சயம் பாராட்டுக்குரியது.

அன்பு அபரிமிதமாக உள்ளவர்களிடமே காதலும் கனதியாக இருக்கும் என்பர் நவீன உளவியலாளர்கள். அந்தவகையில் தன்குணமறிந்த குணவதியாம் அன்னம்மாவை காதல் மணம் புரிந்து நிஜமான வடகிழக்கு இணைப்பை தன் வாழ்க்கையிலேயே நடாத்திக் காட்டியவர். இவர்களின் நண்பர் பரமேஸ்வரன் பல்கலைக்கழகக் காலத்தில் இவர்களைப் பற்றி எழுதிய கவிதையின் ஒரு வரி இன்னும் என் ஞாபகத் திரையில் வந்து செல்கிறது..... "ஆரைப்பற்றையில் இருந்து இங்கு ஆரைப்பற்ற வந்தாயோ? உன்மனதில் தங்கம்..." என்று செல்கிறது அந்த வரிகள். உண்மையில் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மனமாரப் பற்றிக் கொண்டார்கள் அதனால்தான் இன்றுவரை அவர்கள் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியானவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள்.

மனமொத்த மணவாழ்க்கையின் வெளிப்பாடே பிள்ளைச் செல்வங்கள் தான். இக்காலத்தில் பிள்ளைகளின் நலனில், அவர்களின் முன்னேற்றத்தில் பெற்றோர்கள் அதிகளவு அக்கறை எடுப்பது நாம் காணும் ஒன்றெனிலும் இவர்களின் அக்கறை தனித்துவமானது. பிள்ளைகளின் விருப்பு மற்றும் அவர்களின் தகை நிலையறிந்து அவர்களை வளர்த்தெடுத்ததில் இவர்களின் பணி உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியது.

தனித்துவமும் முன்மாதிரியும் கொண்ட எங்கள் அன்புத் தங்கம் தங்கராஜா அவர்களின் மணிவிழா சிறப்புற அமைய வேண்டுமென நானும் எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தாரும் மனமார வாழ்த்துகின்றோம். அவர் தனது நூற்றாண்டு விழாவையும் கொண்டாட வேண்டும், அதற்கும் எனது பாராட்டுப் பதிவை நான் அனுப்பிவைக்க வேண்டும்.

"வாழ்க பல்லாண்டு"

நன்றிகளுடன்

Mr.S.Navaneethan (SLAS)
Municipal Commissioner,
Baticalo
1996-2006

75 – 509, Silver Springs Blvd.
Scarborough. ON
Canada

தன்மீது வீழும்
ஒவ்வொரு அடியும்
தன்னை அழகிய
சிற்பமாக ஆக்குகிறது
என்பது
கல்லுக்குத் தெரியாது

நீதிக்கும் அநீதிக்கும்
சம்பந்தம் ஏது ?

பொய் பேசுபவனுக்கு கிடைக்கும்
மிகப்பெரிய தண்டனை
"அவன் உண்மையைப் பேசும்
போது யாரும்
நம்புவதில்லை"

எந்த ஊரிலும்
வசதியாக வாழ்ந்து விடலாம்
ஆனால்
சொந்த ஊரில் மட்டுமே
நிம்மதியாக வாழ முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



எனது ஆசான் தங்கராஜாவின் "தங்கம் 60" மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி எழுதக் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

1986-1987 ஆண்டுகாலப் பகுதிகளில் தமிழ் முஸ்லிம் உறவுகளில் விரிசல் ஏற்பட்ட காலங்களில் தங்கராஜா ஆசிரியர் நூற்றுக்கு நூறு வீதம் முஸ்லிம் மக்களைக் கொண்ட மருதமுனைக் கிராமத்தில் உள்ள ஷம்ஸ் மத்திய கல்லூரியில் தங்கி முஸ்லிம் மாணவர்களின் கல்வி எழுச்சியில் இரவு பகலாக தன்னை அர்ப்பணித்த ஆசான். பாடசாலை நேரங்களைத் தாண்டி மேலதிக வகுப்புக்களை இலவசமாக இரவு நேரங்களில் நடாத்தி எம்மை பயிற்றுவித்த ஆசான். இவர் மாத்திரமல்லாது இவரது மனைவி அன்னம்மா ஆசிரியையும் தாவரவியல் பாடத்தை எமக்கு அர்ப்பணிப்புடன் கற்பித்தவர். இவர்கள் இருவரின் அயராத முயற்சியின் காரணமாகவே ஷம்ஸ் மத்திய கல்லூரி தனது வரலாற்றுச் சாதனையாக அதிகளவான மாணவர்களை 1986 ம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியது. இச்சாதனை இன்றுவரை முறியடிக்கப்படாமல் இருப்பது சகலரும் அறிந்த உண்மையே. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாக வளரும் என்பார்கள். இதற்கு எடுத்துக் காட்டாகவே இவர் சுயநலம் பாராது என்னைப் போன்ற பல மாணவர்களின் உயர்ச்சிக்காய் பாடுபட்டதன் விளைவு இறைவன் அவரது மூன்று பிள்ளைகளையும் கல்வியில் உன்னத இடத்தை அடைய வைத்திருக்கின்றார். திவாகர், கிஷாந்தன், டினேஸ்காந்தன் முறையே மருத்துவர், பொறியியலாளர், கணக்காளர். இவர் கல்வித்துறைக்கு ஆற்றிய அறப்பணிக்கு இறைவன் கொடுத்த பரிசு. இது ஆசிரியத் துறைக்கு ஒரு படிப்பு.

இவர் எழுதிய உயிரியல் புத்தகங்கள் எதிர்கால சந்ததிக்கு உதவக் கூடிய நல்ல நூல்கள். பல வைத்தியர்களையும், பட்டதாரிகளையும் இவரது நூல் உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. கல்வி உலகிற்கு ஒரு கலங்கரை விளக்காகத் திகழும் இவர் "60"ற்கு முதல் கல்வித் துறையிலிருந்து இளைப்பாறி மனவளக்கலை "யோகா" எனும் ஆன்மீகத் துறையில் தனது ஆன்மீகத் தொண்டை ஆற்றி வருவது மனிதத்துவம் சிறப்படைய வழிவகுக்கும். கல்வித்துறைக்கு ஆற்றிய பணியைப் போல ஆன்மீகத் துறை மூலமும் மனிதம் இவ்வுலகில் சிறப்படைய இவரது சேவை வழி வகுக்கும். தங்கராஜா ஆசிரியர் என்றும் பளபளக்கும் ஒரு தங்கமே.

இவரும் இவரது குடும்பமும் சீரும் சிறப்புடனும் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றேன்.

**மு. சா. சஹறூதுல் நஜீம்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்விஅலுவலகம், சம்மாந்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதயம் முகிழ்க்கும் சில வார்த்தைகளை வாழ்த்துக்களாய்ப் பதிக்கின்றேன் ……



திரு.ஆ.தங்கராஜா ஆசிரியர் அவர்களின் மணிவிழா மலரில் என் இதயம் முகிழ்க்கும் சில வார்த்தைகளைப் பதிப்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

திரு.ஆ.தங்கராஜா ஆசிரியர் அவர்களை வாழும்போதே வாழ்த்துரைக்க வாய்ப்பளிக்கும் நிகழ்வாக இம் மணிவிழா நிகழ்வு அமைகின்றது.. இந் நிகழ்வை நடாத்த தீர்மானித்தமை காலம் அறிந்து ஆற்றும் கருமமாகக் கருதுகின்றேன். இந் நிகழ்வில் "தங்கம் 60" மணிவிழா மலரை வெளியிடுகின்றமை, அர்ப்பணிப்புமிக்க சேவையாளர் திரு.ஆ.தங்கராஜா ஆசிரியருக்கு வாழும்போதே வழங்கப்படும் காலத்திற்குரிய கௌரவமாகும். இக் கௌவரவிப்புக்கு மிகப்பொருத்தமான ஆசிரியருக்கு எனது வாழ்த்துக்களை மனமுவந்து முன்வைக்கின்றேன்.

கடந்த பல நூற்றாண்டுகளாக யாழ் மண்ணின் ஆசான்கள் எங்கள் தேனாட்டின் கல்வி அபிவிருத்திக்கு ஆற்றிவரும் சேவைகள் என்றென்றும் நன்றியுடன் நினைவுகூரத்தக்கவை. இவ்வழியில் திரு.ஆ.தங்கராஜா ஆசிரியர் கடந்த ஐந்து தசாப்தங்களாக மட்டுமண்ணில் ஆற்றிவரும் கல்விப்பணியை நினைவு கூர்ந்து வாழ்த்துரைக்க கிடைத்த வாய்ப்பையிட்டு பெருமித மடைகின்றேன்.

சின்ன யாழ்ப்பாணம் என செல்லமாக அழைக்கப்படும் ஆரையம்பதி ஊரில் மட்டு வாவியின் தென்றல் ஊசலாடும் மாவிலங்கத்துறை கிராமத்தில் தன் இல்லற வாழ்க்கையை அமைத்துக்கொண்ட ஆசிரியர், அன்றுதொட்டு இன்றுவரை மட்டுமண்ணில் மட்டற்ற பற்றுடன் நேசித்து சேவையாற்றி வருகின்றார். தனது துறைசார் நிபுணத்துவத்தை தன் மூன்று புதல்வர்களுக்கூடாக மிளிரச் செய்து மட்டு மண்ணுக்கும் தான் மணங்கொண்ட மனைக்கும் மருத்துவரையும், பொறியியலாளரையும், கணக்காளரையும் பெற்றுத்தந்த பெருமைக்குரியவராக நினைத்து ஆசிரியரை வாழ்த்துகின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான மட்/வின்சன்ட் மகளீர் உயர்தரப் பாடசாலையில் விலங்கியல் பாடஆசிரியராக 1991-1998 காலப்பகுதியில் வழங்கிய சேவை மகத்தானது. அத்தோடு தனியார் கல்வி நிலையங்களிலும் இவரது பணி மாணவர்களுக்கு கிடைத்த பெரும் கொடையாகும். இக் காலப்பகுதியில் பாடசாலை மாணவியாக நான் ஆசிரியரை நன்கு அறிந்துள்ளேன். நான் மட்/வின்சன்ட் மகளீர் உயர்தரப் பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய காலப்பகுதியில் திரு.ஆ.தங்கராஜா ஆசிரியர் ஓய்வுபெற்ற நிலையிலும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக உயிரியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட நூல்களை வெளியிட்டுள்ளார். கல்விக்காக அயராது ஒத்துழைப்புக்களை வழங்கும் இவரது சேவைகள் என்றென்றும் வாழ்த்துக்குரியவை.

உலகில் வாண்மைத்தொழில் வரிசையில் ஆசிரியத்துவம் மகத்தானது. அதிலும் மாணவ சமூகத்தின் மனதில் மறக்கமுடியாத இடத்தைப் பெறும் ஆசிரியர்கள் என்றென்றும் மேன்மையானவர்கள் போற்றத்தக்கவர்கள், இவ் வரிசையில் மேன்மைமிக்கவராக திரு.ஆ.தங்கராஜா ஆசிரியர் மட்டக்களப்பு கல்விப்புலத்தில் கடமையாற்றியுள்ளார். இவரது கல்விப் பணியை என்றென்றும் கற்ற சமூகம் நினைவுகூர்ந்து நிற்கும்.

ஒரு ஆசிரியராக வகுப்பறைகளுக்குள் தனது ஆற்றலை மட்டுப்படுத்திக்கொள்ளாத, பரந்துபட்ட சேவையாளராக திரு.ஆ.தங்கராஜா ஆசிரியர் கடமையாற்றினார். ஆன்மீகத்துறையில் மனவளக்கலை பேராசிரியராக திகழ்கின்றார். ஆன்மீக ஈடுபாட்டுடன் ஒரு சமுக சேவையாளராக, எப்போதும் எளிமையானவராக கல்விச் சமூகத்தால் விரும்பப்பட்ட நபராக திரு.ஆ.தங்கராஜா ஆசிரியர் மட்டு மண்ணில் வலம்வந்து கொண்டிருக்கின்றார். கல்வித்துறையில் சுற்றுநிருபங்கள் அவருக்கு ஓய்வு கொடுத்தாலும் அவரது அயராத உழைப்பும், அர்ப்பணிப்புமிக்க சேவையும் மேலும் பல தசாப்தங்கள் தொடரும். இவரது பணிகள் என்றென்றும் மேலோங்க எனது வாழ்த்துக்கள்.

ஆசிரியர் திரு.ஆ.தங்கராஜா அவர்களின் ஆசிரியத்துவத்தின் மகத்துவத்தை உணர்ந்து போற்றி, வாழ்த்துவதுடன் அவரது 'அறுபது அகவையில்' மணிவிழாக்காண விளைந்த மணிவிழாச்சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

திருமதி. **சுஜாத்தா குலேந்திரகுமார்,**
B.Sc., Sp.Trd. in Mathematics,
PGDE (Merit), M.Ed., SLEAS II.
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்)
கல்குடா வலயக்கல்வி அலுவலகம்
வாழைச்சேனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்த ஊர் – யாழ்ப்பாணத்தின் சில பதிவுகள்







பிறந்த வீட்டின் தற்போதய தோற்றம்



## புகுந்த ஊர் – மட்டக்களப்பின் சில பதிவுகள்









புகுந்த வீட்டின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மட்டக்களப்பின் அழகிய தோற்றங்கள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளித்தோழன் தங்கனுக்கு மணிவிழா வாழ்த்து!



கல்வி என்ற இனிமையான பாதையில் பயணப்படும் போதுதான் மனிதர்கள் முழுமையாக மலர்கிறார்கள். கல்வி விழிகளின் ஒளியை நியாயப்படுத்துகின்றது, எண்ணங்களை கணை தீட்டுகின்றது, இதயத்தை குளிர்விக்கின்றது. அனைவரும் கல்வி பெற்று உயரிய பண்புகளுடன் விளங்கினால் சமுதாயம் ஒரு அழகான பூந்தோட்டமாக மாறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

கல்வித் தடங்களில் பல ஆயிரக்கணக்கான மாணவர்களின் மேம்பாட்டுக்கு அர்ப்பணிப்புடனும், ஈடுபாட்டுடனும் விருப்பத்துடனும் பணியாற்றி அகவை 60ல் மணிவிழாக்காணும் எனது பள்ளித் தோழன் 'தங்கன்' அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

'விலங்கியல் தங்கராஜா' (Zoology Thangarajah) என்றால் பல மாணவர்களின் மனதில் நீக்கமற நிறைந்த ஒரு பெயர் பள்ளிக் கல்வி ஆசிரியராகவும், சமநேரத்தில் தனியார் கல்வி நிறுவனங்களின் கல்விச் செயற்பாடுகளிலும் இரு தடங்களில் தனது கல்விப்பயணத்தை மேற்கொண்டவர் இவர்.

வேலணை மத்திய கல்லூரி C.W.W கன்னங்கரா அவர்களின் சிந்தனையில் தோற்றம் பெற்ற 54 மத்திய மகா வித்தியாலங்களில் ஒன்றாகும். கிராமப்புற மாணவர்கள் பல்கலைக்கழக கல்வியை பெறுவதற்கு இத்தகைய கல்லூரிகள் பெரும் பங்களிப்பை வழங்கின. தீவக மாணவர்களின் கலங்கரை விளக்காக இக்கல்லூரி திகழ்ந்தது. அக்கல்லூரித் தாயின் அரவணைப்பிலும், வளர்ப்பிலும் நாங்கள் வளர்ந்தவர்கள் இன்று சமூகத் தளத்தில் எமது முகவரிகளுக்கு இக்கல்லூரி அன்னையின் ஆசி எம் போன்றவர்களுக்கு கிடைத்த ஒரு பெரும் வரமாகவே நாம் கருதுகின்றோம்.

60, 70 களில் இக்கல்லூரியில் ஒன்றாக கற்கும் வாய்ப்பை நாம் பெற்றுக் கொண்டோம். கல்லூரி வாழ்க்கை என்பது ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் மிக இனிமையான காலமாகும். இக்கல்லூரியின் ஆசிரியர்கள் கண்டிப்புடனும், ஒழுக்கத்துடனும் கல்வியை எமக்கு வழங்கினார்கள்.

கல்லூரியில் நெறி முறையாக நாம் வளர்க்கப்பட்டோம். தன்னலமற்ற அவர்களின் அர்ப்பணிப்பு எங்களை நெறிப்படுத்தியது. இன்றும் அவர்களுடைய வழிகாட்டல்கள் பசுமையாக உள்ளன. தற்போது வாழ்கின்ற சிலர் இவர்கள் எங்களுடைய பிள்ளைகள் என பெருமையோடு பேசிப் பெருமைப்பட்டு மகிழ்ச்சியடைகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கராஜா அவர்கள் க.பொ.த (உ/த) வகுப்பிற்காக யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரிக்கு சென்றார். நான் மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தேன். 1978ல் நாம் மீளவும் பல்கலைக்கழக கல்வியில் ஒன்றாக சேர்ந்து கொண்டோம். யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம் பல்கலைக் கழகமாக தனித்துவம் பெற்ற போது அதன் முதலாவது அணியாக நாம் மாணவர்களாக இணைந்து கொண்டோம்.

பல்கலைக்கழக வாழ்க்கை நிறைவடைய கல்வித்துறையில் ஆசிரியர் களாக இணைந்து கொண்டோம். 60 வயதை அடைவதற்கு முன்னதாகவே தங்கராஜா அவர்கள் ஆசிரிய பணிக்கு ஓய்வு கொடுத்துவிட்டார்.

வேலணை மத்திய கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தில் இணைந்து கல்லூரி மேம்பாட்டிற்காகவும் இவர் உழைத்து வருகிறார். எமது கல்வித்தாயின் வளர்ச்சியில் சிறிது காலம் அதிபராக பணியாற்ற கிடைத்தற்கரிய வரம் எனக்கு கிடைத்த காலத்தில் ஒரு தடவை தங்கராஜா அவர்கள் கல்லூரிக்கு வருகை தந்து மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார் இன்றும் அவரது உரை மனதில் பசுமையாக உள்ளது.

வடக்கும் - கிழக்கும் இணைந்திருந்ததும் பிரிந்ததும் அரசியல் தடத்தில் மட்டுமே பல்கலைக்கழக வாழ்க்கை வடக்கையும் கிழக்கையும் பலமாக இணைத்து இன்று வரை இணையாகவே உள்ளது. இவரது துணைவியார் கிழக்கிலங்கையைச் சார்ந்தவர். எல்லைகள் மனித இதயங்களுக்கு இல்லைத் தானே.

நண்பர்களாக பழகிய உறவுகள் காலப்போக்கில் உறவு நிலையில் குடும்பங்களாகவும் மாற்றமடைந்தது. குடும்ப உறவுகளுடன் மகிழ்வடையும் நிலையில் இன்று இறுக்கமடைந்துள்ளோம்.

தமிழ் பஞ்சாங்க வருடத்தில் 60 வருடங்கள் உண்டு இவை மாறிவந்து கொண்டேயிருக்கும். ஒருவர் பிறந்த வருடம் அவரது 60 வயதில் திரும்பவும் வரும். தங்கராஜா அவர்கள் மன்மத வருடத்தில் பிறந்திருப்பதனால் அவருடைய 60வது வயது மன்மத வருடத்தில் வந்துள்ளது இது மணிவிழா என கொண்டாடப்படுகிறது.

இவ்வாறான விழாக்கள் ஒருவருடைய பண்பு நலன்களை ஏனையோர் பாராட்டவும் அவர்கள் செய்த பணியை பாராட்டுவதும் கௌரவிப்பதும் மட்டுமல்லாது எதிர்காலத்தில் அவர்கள் மேலும் உற்சாகத்துடன் சமய, சமுக, ஆன்மீகப் பணிகளில் ஈடுபடவும் ஒரு உந்து சக்தியைக் கொடுப்பதாய் அமையும்.

தங்கராஜா அவர்கள் தற்போது ஆன்மீகம், யோகா, இலக்கியம் ஆகிய துறைகளில் முதிர்ச்சியும் அனுபவமும் கொண்டுள்ளதை அறியமுடிகிறது. புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தடத்தில் பயணித்து எமது சமூகத்திற்கு மேலும் உழைக்க வேண்டும் என்பது பலரது விருப்பமாகும்.

இவரது சமூக, ஆன்மீக, கல்விப் பணிகள் தொடர இவருக்கு இறைவன் நீண்ட ஆயுளையும், மகிழ்ச்சியையும் வழங்க வேண்டும் எதிர்காலம் வளமோடு, நலமாக, மகிழ்வாக வாழ வாழ்த்துகிறேன்.

தோழமையுடன்

**பொன்னம்பலம் அருணகிரிநாதன்,**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணக்கல்வி வலயம்,
யாழ்ப்பாணம்

இன்பத்திலும் துன்பத்திலும்
நாம் நினைவில் கொள்ள
வேண்டியது
ஒன்றே ஒன்று மட்டும் தான்
"இந்த நிமிடம் நிரந்தரமில்லை
இதுவும் கடந்து போகும்"

உருவங்கள் கோடான கோடி ...
அவை உள்ளும் புறமும்
அரூபமாய் ...
ஊடுருவி நிறைந்து
இயங்கும் ஒரு சக்தி ...
உயிராகும் ...
இயற்கையாகும் ...
கடவுளாகும் ...
- வேதாத்திரி மகரிஷி

உயர்ந்த இடத்தில்
இருக்கும் போது
உலகம் உன்னை மதிக்கும்
நிலமை கொஞ்சம்
இறங்கி வந்தால்
உன் நிழலும் கூட மிதிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா ஏற்பாட்டுக் குழு தலைவரின் வாழ்த்துச்செய்தி



மணிவிழாக் காணும் திரு.ஆறுமுகம் தங்கராஜா ஒரே ஊரில் பிறந்து ஒரே காலத்தில் வளர்ந்து ஒரே கல்லூரி ஒரே பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற நண்பன் ஆறுமுகம் தங்கராஜா அவர்கட்கு 5.11.2015ல் மணிவிழாக் கொண்டாடப்படுவது அறிந்து பேருவகை அடைகின்றேன். இச்சந்தர்ப்பத்தில் அவரைப் பாராட்டி வாழ்த்துவதற்கும் அவர் பற்றிய சில தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தமையை யிட்டு மகிழ்வுறுகின்றேன். யாழ் குடா நாட்டைச் சூழவுள்ள சப்ததீவுகளில் பெரிதெனத் திகழ்வது வேலணை சென்நெல் வளத்தாலும் பொன்செய்பவர் வளத்தாலும் கற்பகதரு வளத்தாலும் நிரம்பி நிற்பதுடன் சிவநெறி பெருக்கும் சான்றோராலும் செந்தமிழ் வளர்த்த கல்வியியலாளர்கள் மற்றும் புலவர்களாலும் ஏற்றம் பெற்றது. சைவமும் தமிழும் ஒன்றையொன்று தழுவி வளர்ந்த மாண்பினைக் கொண்டது இத்தகைய சிறப்பு மிக்க வேலணையின் வடபால் நாவலடிப்புலத்தைச் சேர்ந்த இளையதம்பி ஆறுமுகம் என்பவருக்கும் சொர்ணம்மா என்பவருக்கும் ஐந்தாவது மைந்தனாக உதித்தவர் தான் தங்கராஜா. இவருக்கு நான்கு ஆண் சகோதரர்களும் ஒரு பெண் சகோதரியும் உள்ளர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாசாலையில் ஆரம்பித்தார். விளையும் பயிரை முளையில் தெரியும் என்பதற்கிணங்க இளமை முதல் இன்று வரை சுறுசுறுப்பு, துடிப்பு விடாமுயற்சி, அயராத உழைப்பு என்பவற்றை அணிகலன்களாகக் கொண்டவர். இடைநிலைக் கல்வியை வேலணை மத்திய கல்லூரியில் பயின்றார். அங்கு கல்வி கற்ற காலத்தில் திறமையான மாணவனாக விளங்கி ஆசிரியர்களின் நன்மதிப்பையும் விருப்பையும் பெற்றுத் திகழ்ந்தார். அத்துடன் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் ஆர்வம் கொண்ட ஒருவராக விளங்கினார். இதனைத் தொடர்ந்து உயர்தரக் கல்வியில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவைத் தெரிவு செய்து யாழ் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் பயின்றதுடன் 1979 – 1983 காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிணைந்து விஞ்ஞான இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இக்காலப் பகுதியில் விலங்கியல் பாடத்தை பிரத்தியேக வகுப்புகளில் கற்பிக்கத் தொடங்கினார். இதன் காரணமாக குறுகிய காலத்திலே யாழ் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பிரபலமான ஆசிரியராக திகழ்ந்தார். இக்காலப் பகுதியிற்றான் மீன்பாடும் தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாம் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்னம்மா எனும் மங்கை நல்லாளுடன் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்.

பல்கலைக்கழகக் கல்வி முடிய 1984ல் அரச பாடசாலை ஆசிரியராக அம்பாறை மாவட்ட கல்முனைப் பிரதேசத்திலுள்ள ஸம்சுல் இல்ம் முஸ்லீம் மகாவித்தியாலயத்திற்கு முதல் நியமனம் பெற்றார். அங்கிருந்து ஐந்து வருட காலத்தில் மாணவர் கல்வி முன்னேற்றத்திற்கு முன்னின்றுழைத்தார். அதனைத் தொடர்ந்து 1989ல் யாழ் மத்திய கல்லூரிக்கு இடமாற்றலாகி இரண்டாண்டுகள் யாழ் மண்ணில் பணிபுரிந்தார். மீண்டும் மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று அங்கு எட்டாண்டுகள் பணிபுரிந்தார். இங்கு மாணவர்களின் கல்வி மேம்பாட்டுடன் மட்டுமல்லாது ஒழுக்க விழுமியங்கள் இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் ஆர்வம் காட்டினார். இக்காலப் பகுதியிற் தான் தனது தொழில் வண்மையை கருத்தில் கொண்டு தேசிய கல்வி நிறுவனத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியைப் பயின்று பட்டம் பெற்றார். அதனைத் தொடர்ந்து இரண்டாண்டுகள் வாழைச்சேனையில தனது பணியைத் தொடர்ந்தார். இறுதியாக 2001ல் இருந்து 2010 வரை கொழும்பு இசுபத்தான கல்லூரியீல் பணியாற்றியுள்ளார். பாடசாலையின் பணிக்கு மேலதிகமாக இவர் சென்ற இடமெலாம் பிரத்தியேக வகுப்புக்களை நடத்தி தனக்கென தனி முத்திரையைப் பதித்துக் கொண்டார். இன்று அவரது மாணவர்கள் பலர் பலதுறைகளிலும், பரிணமித்திருக்கிறார்களென்றால் மிகையில்லை.

இக்காலப் பகுதியில் கற்பித்தலை மேலும் பயனுறும் வகையில் மாணவர்களுக்கு வழங்க 1989 தொடக்கம் 2010 வரை தன்னை உயர்தர வகுப்பு புள்ளி மதிப்பிடல் பணியில் இணைத்து கொண்டார். இதன் அனுபவத்தினுடாக 1995 தொடக்கம் 2010 வரை மேலதிக பிரதம பரீட்சகராக பணியாற்றினார்.

இவரது அயராத உழைப்பு கடும் முயற்சி என்பவற்றினால் நல்லாசிரியராகி, நன் மாணாக்கரை உருவாக்கிய பெருமைக்குரிய இவர் தனது 55வது அகவையில் 2010ல் ஆசிரியர் பணியினின்றும் ஓய்வு பெற்றுக் கொண்டார். ஆன்மீகத் துறையில் இருந்த நாட்டம் காரணமாக 2006ல் மனவளக்கலைப் பயிற்சி பெற்றார். இக்கலையை தானும் முழுமையாக கற்றுக் கொண்டார். யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்பதற்கிணங்க இக் கலையை ஏனையோருக்கு போதித்து வந்தார். இதனால் இன்று இக்கலையைக் கற்று சுகதேகிகளாக வாழ மக்களை அறிவூட்டும் பேராசிரியராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரிநது வருகிறார்.

இதற்கு மேலாக சமூகப் பணிகளிலும் ஈடுபாடு கொண்டு வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தில் நிர்வாக சபை உறுப்பினராகவிருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கும் பல பயனுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனைகளை வழங்கி வருகின்றார். அத்தோடு தீவக அபிவிருத்திச் சங்கத்திலும் இணைந்து பணியாற்றுகின்றார்.

'தக்கார் தகவிலரென்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்' என்ற வள்ளுவன் வாய்மொழிக்கேற்ப அவரது தன்னலமற்றபணிகள் ஒரு புறம் தொடர மறுபுறம் அவரது எச்சங்களாகிய புதல்வர்கள் மூவரும் வைத்தியராக , பொறியியலாளராக கணக்காளரும் தேசிய விளையாட்டு வீரராகவும் மிளிர்கின்றனர்.

'கேடில் விழுச் செல்வம் கல்வி யொருவருக்கு மாடல்ல மற்றையவை' என்ற பொய்யாமொழி பொய்க்காது குற்றமற்ற கல்விச் செல்வத்தினால் ஏனைய செல்வங்களையும் பெற்று சிறப்பாக வாழுமவர் பிறந்த ஊருக்குப் பெருமையைத் தேடித் தந்ததுடன் புகுந்த ஊருக்கு பெருமை தேடி நிறைவான வாழ்வு பெற்று வாழ்கின்றார். அவருக்கு மணிவிழா எடுப்பது பொருத்தமுடையதே. இவ்வேளையில் மணிவிழா நாயகனை வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் அவருக்கு எல்லாவிதமான இஸ்ட சித்திகளை வழங்க வேண்டும்மென வேலணை இலந்தைவனத்து சித்தி விநாயகரை வேண்டி அமைகின்றேன்.


கோ. பரமானந்தன்<br>
ஆசிரிய ஆலேசாகர் ஓய்வுநிலை,<br>
தலைவர்,<br>
வேலணை மத்திய கல்லூரி<br>
பழைய மாணவர் சங்கம் - கொழும்பு.


காதல் என்பதை
யார் வேண்டுமானாலும்
கற்பனை பண்ண முடியும்
ஆனால்
அதன் வலியை
காதலித்தவர் மட்டுமே
உணர முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடச் சுடச் சுடரும் தங்கம்
நண்பர் ஆறுமுகம் தங்கராஜா பற்றிய

# நினைவுப் பரல்கள்.

- காசுபதி நடராசா,
செயலாளர், ஏற்பாட்டுக்குழு

**சுழலும் நினைவு ஒன்று**



"மாமா, யாழ்ப்பாண நகரத்தில் விலங்கியல் பாடத்தில் கொடி கட்டிப்பறந்த தங்கராஜா மாஸ்டரை உங்களுடன் பார்த்தேன். அவரைத் தெரியுமா? நானும் அவரிடம் படித்திருக்கிறேன். வலு கெட்டித்தனமும் சுறுசுறுப்புமுள்ள மாஸ்டர்" என்று எனது அண்ணன் மகன் ஜெயந்தன் என்பவன் 1990களின் பிற்பகுதியில் மட்டக்களப்பில் வைத்துக் கேட்டது இன்னும் நினைவிலுள்ளது. அப்போது இவர்களைப் பற்றி எனக்கு அதிகம் தெரிந்திருக்கவில்லை. ஆயினும் எனது மனைவி பௌதிகவியல் ஆசிரியையாக இருந்ததாலும் நாங்கள் வசித்த மட்டக்களப்பு கல்லடி வேலூரிலேயே அவர்களும் குடியிருந்ததாலும் பிணைப்பு அதிகரித்து விட்டது. கடந்த கால் நூற்றாண்டுகளுக்கும் மேலான அவர்களுடனான தொடர்புகளுக்கு அவருடைய துணைவியார் எனது உறவுக்காரியாக இருந்ததும் மற்றொரு காரணம் எனலாம்.

**ஆன்றோன் அமைவிடம் – வேலணை**

யாழ்தீப கற்பத்தில் புகழ் பரப்பும் திறனூர்களில் வேலணையைப் பதிய வேண்டும். ஆன்றோர்களையும், சான்றோர்களையும் தந்து சிறப்புற்ற திருவூர். மணி விழா நாயகனின் பின்புலத்தைப்பார்க்கும் போது அவர் பிறந்து வளர்ந்த வேலணையைப்பற்றிய வரலாற்றுத் தேடலையும் செய்யாமல் இருக்க முடியாது. இதற்கு 2006இல் வெளிவந்த "வேலணை ஒரு வரலாற்று அறிமுகம்" என்னும் நூல் பெரிதும் உதவியது.

இந்நூலில் வேலணை பற்றி எடுத்தாளப்பட்ட கூற்றுக்கள் அதன் மகிமையை விளக்கப் போதுமானவை அவைகளில் சிலவற்றை அவ்வாறே இங்கு பதிய விரும்புகின்றேன்.

* "தற்றாவிளையும் தக்காரும்
தாள்விலாச் செல்வரும் சேர்ந்து வாழ்ந்த
பழம் பெரும் பதி நமது வேலணை" (திரு ச. மாணிக்கவாசகர் - பக்கம் 5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* "எமது அருமந்த ஊர் வேலணை. எமது கிராமம் இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றை உடையதெனத்துணிந்து கூறலாம்" (முனைவர் கா. பொ. இரத்தினம் - பக்கம் 01)

* யாழ்ப்பாணத்தீவுப் பகுதியில் வேலணை நீண்ட வரலாற்றுப் பெருமையும் கொண்ட கிராமம் ஆகும். மக்கள் தம் கிராமத்து வளங்களைச் சிறந்த முறையில் விருத்தி செய்து ஒழுங்கான தற்காப்பு வாழ்வை மேற் கொண்டு வந்தனர். சிறந்த சமூக விழுமியங்களையும், செயற்பாடு களையும் கைக்கொண்டனர். சைவத்தையும், தமிழையும் தம் கண்களா கப் போற்றினர். (பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை - பக்கம் 18)

* கற்பகதருவின் அழகுறு காட்சியும், பெருங் குளத்தருகே பேரருள் பொழியும் அன்னை பராசக்தியின் கோயிலும் பண்பாட்டின் விழுதுகளாய் வாழ்ந்து வரும் சைவக் குடிமக்களும் கொண்ட யாழ்ப்பாணத்தின் மரபு வழிக்கிராமம் வேலணை. (மா. ஸ்ரீகாந்தன் பக்கம் 266)

* ஈழ மணித்திரு நாட்டின் வடபால் யாழ்ப்பாணத் தீபகற்பத்துக்குத் தென்மேற்கே சப்த தீவுகள் என்று கூறப்படும் புகழ் பெற்ற தீவுகள் காணப்படுகின்றன. இச் சப்ததீவுகளில் நடுநாயகமாகத் திகழ்வது "லைடன்" தீவு என்னும் வேலணை. இங்கே புகழ்புத்த சைவப் பெரியார்கள், கல்விமான்கள், கவிஞர்கள் எனப் பலர் வாழ்ந்தனர் வாழ்கின்றனர். (ஒரு பழைய மாணவன் சைவப்பிரகாசம் பக்கம் 284)

* வேலவனின் திருவருள் நிரம்பப் பெற்ற கிராமம் வேலணை. புலவர்களும் அறிஞர்களும் தக்கோராய் வாழ்ந்த மண் வேலணை. காலத்தின் தேவை கருதி சைவமும் தமிழும் புரக்கவந்த நல்லைநகர் நாவலர் பெருமானின் நன்மாணாக்கர் ஞான பரம்பரை வாழ்ந்த மண் வேலணை. (செல்வி சிவாஜினி கணேசலிங்கம் பக்கம் 216)

* ஊரால் பெருமை சிலருக்கும், சிலரால் பெருமை ஊருக்கும் கிடைக்கிறது. தன் பெருமையைத் தன் மக்கட்கும் தன் மக்கள் பெருமையைத் தானும் பெற்று விளங்கும் ஒரு சில ஊர்களில் வேலணையும் ஒன்று. செந்நெல் வளத்தாலும், பொன் செய் பயிர்கள் வளத்தாலும் நிரம்பி நிற்கும் வேலணை. சிவநெறி பெருக்கும் சான்றோராலும, செந்தமிழ்த் திறம் தெரிபுலவர் களாலும் ஏற்றம் பெற்றது. சைவமும் தமிழும் பாலொடு தேன் கலந்தது போல ஒன்றை ஒன்று தழுவி ஏற்றம் பெற்றது வேலணை மண்ணில் தான். (கலாநிதி க. சிவராமலிங்கம்பிள்ளை பக்கம் 245)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சைவமும் தமிழும் இரண்டறக்கலந்து சகல வளங்களுடன் தழைத் தோங்கி விளங்கும் வேலணைக் கிராமம் இதன் மையத்தில் அமைந்துள்ளது.

  - வேலன் என்பவர் சிறப்புற நிருவாகம் செய்தமையாலும்,
  - அழகன் முருகனின் வேல் இக்கிராமத்து எல்லைக் கடற்கரையில் அடைந்தமையாலும்,
  - இப் பகுதியில் பரவலாக வேல் வடிவிலான ஒருவகை மூலிகைச் செடி (கருவேலன்) வளர்ந்திருந்தமையாலும்,

  இக் கிராமத்துக்கு வேலணை என்னும் பெயர் வந்தது என நம் முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். (திருமதி சரோஜினிதேவி சிவனடியான் பக்கம் 352)

* இரசாயனவியலை மூலமாகக் கொண்டு பெரும் பதவிகளைப் பெற்று, கல்விச் செல்வத்துடன் பொருட்செல்வமும் நிரம்பப் பெற்று தீவகத்தைச் சேர்ந்த பலர் இன்று உலகின் பல நாடுகளிலும் வாழ்கிறார்கள். அமெரிக விண்வெளி ஆய்வு மைய விஞ்ஞானிகள், பிரபல பொறியியலாளர்கள், பிரித்தானிய மகாராணியின் விருதுகள் பெற்ற வைத்திய விற்பன்னர்கள, பேராசிரியர்கள் தொடக்கம் இன்று பல வைத்தியர்களையும், பொறியலாளர்கள் முதலானோர்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் உட்பட பலரும் இவர்களில் அடங்குவர். (திரு சுந்தரம் பிள்ளை கலாதரன் பக்கம் 362)

**வேலணையின் வித்து**

வேலணையைப் பற்றிய தேடலில் அதில் தோன்றிய வித்துக்கள் எத்தகைய வல்லமையும் பயனுறுதியும் கொண்டவைகளாக இருக்கும் என்பதை விபரிக்கத் தேவையில்லை. ஊரின் மகிமையை நண்பன் தங்கராஜாவில் கண்டு தெளியக்கூடியதாக உள்ளது.

விஞ்ஞானக் கல்வித்துறையில் விலங்கியல், உயிரியல் வல்லாசி ரியராகக் கோலோச்சி ஓய்வு பெற்றவர் ஒரு மாற்றுச் சிந்தனையாளர் இன்று தியானத்தையும், ஆன்மீகத்தையும் உடற்பயிற்சிகளையும் உள்ளடக்கிய மனவளக்கலை மன்றத்தில் பயிற்றல் பேராசிரியராகத் திகழ்கிறார். கல்விப்புலத்திலும் ஆன்மீகத்துறையிலும் இன்று அவருக்கு நிரந்தரமான மாணவர் பரம்பரையே உள்ளது.

முதிர்விலும் இளமை சுறுசுறுப்பு மிக்க வாழ்க்கைத்திறன். எடுத்த கருமத்தைச் சிறப்புடன் நிறை வேற்றி வெற்றியடையும் போர்த்திறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்தமுகம் இனிய சுபாவம் மூத்தோர் பால் கீழ்ப்படியும் பண்பியல் முன்னோக்கிய வீறுநடை என்று இவரது குணாதிசயச் செயல் திறன்களைப் பட்டியலிட முடியும். இது வேலணையின் நல் வித்துக்களில் ஒன்று.

## விருட்சமாகிய வித்து

வேலணை 5 ஆம் வட்டாரம் நாவலடிப்புலம் நாச்சியார் கோயிலடி இவர் பிறந்த இடம் அங்கு 1955 நவம்பர் 05 ஆம் நாள் ஆறுமுகம் சொர்ணம்மா தம்பதிகளின் மகனாகப்பிறந்தார்.

இவரது தந்தை குட்டி ஆறுமுகம் என அன்பாக அழைக்கப்பட்டவர். வயலும் தோட்டமும் சூழ்ந்திருந்த நாவலடிப்புலத்தில் புகையிலை வியாபாரம் மற்றும் அரச ஒப்பந்த வேலைகள் பெற்று மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் முதலான இடங்களிலும் வர்த்தகத்திலீடுபட்டுப் பொருள் ஈட்டியவராவார். அக்கால வழமை போல அம்மா வீட்டு வேலைகளைப்பார்த்து பிள்ளைகளையும் வளர்த்தெடுத்தவர். சராசரிக்குழந்தைகள் போல ஐந்து வயது வரை கிராமத்தின் வயல்களிலும் தோட்டங்களிலும் துள்ளித்திரிந்து நண்பர்களுடன் விளையாடி மகிழ்ந்தவர் இவர்.

## அறிவியல்

இவரது ஆரம்பக்கல்வி 1961 ஆம் ஆண்டில் ஆத்திசூடி வித்தியா லயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1965 வரை இங்கு திறமையான அத்திவாரம் ஒன்று சிறப்பாக இடப்பட்டது.

தொடர்ந்து இடைநிலைக்கல்வியை 1966 முதல் 1972 வரை வேலணை மத்திய கல்லூரியில் 6 ஆம் வகுப்பு தொடக்கம் க.பொ.த. சாதாரண தரம் வரையும் கற்றுத் தேறினார்.

இலங்கையில் நிறுவப்பட்ட 54 மத்திய கல்லூரிகளில் சேர். வைத்திலிங்கம் தரைசாமி அவர்கள் முயற்சியினால் இந்த மத்திய கல்லூரி தோற்றம் பெற்றது.

இவரது உயர் நிலைக்கல்வி 1973 சித்திரை தொடக்கம் 1976 வரை வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரமும் 1976/77 இல் யாழ் சென். ஜோன்ஸ் அக்கடமிக் கல்வி நிறுவனத்திலும் கல்வி கற்று யாழ் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானார்.

1978/82 வரையும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத் துறையில் கற்றுத் தேறி விஞ்ஞானமானிப் பட்டத்துடன் வெளியேறினார். இங்கு தான் இவர் தனது வாழ்க்கைத் துணைவியையும் தேடிக் கொண்டார் என்பது தனிக்கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தடைகள் தாண்டிய ஓட்டம்

பெற்றோரின் வியாபார நிலவரம் தளர்நிலை கண்டதால் இவரது கல்விச் செலவை ஈடுசெய்வதில் சிக்கலான நிலை தோன்றியது. எனினும் இவர் படிப்பில் காட்டிய ஆர்வமும், வகுப்புக்களில் பெற்ற புள்ளிகளும் உறவுகளை இவருக்கு உதவத்தூண்டின என அறிய முடிகிறது. ஆரம்பத்தில் அவர்களில் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர்களாக இவரது மச்சாள் முறையான ஆசிரியை யோகம்மா குமாரரெட்ணம், தாய் மாமன்மார்களான சரவணமுத்து கணேசலிங்கம் மற்றும் சரவணமுத்து சிதம்பரநாதன் ஆகியோரை இவர் அடிக்கடி நினைவு கூருவதை அறிவேன்.

வேலணையிலிருந்து உயர்கல்வியைத் தொடர யாழ் நகர் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட போது அதிகரித்த கல்விச் செலவுகளை இவரது சகோதரர்கள் ஏற்று உதவினர் என்றும் அதிலும் குறிப்பாக இவரது ஆசை அண்ணர் திரு. ஆறுமுகம் யோகராஜா அவர்களே ஏற்று உதவி செய்தார் என்பதையும் அவரது உரையாடல்களின் போது அறிய முடிந்தது.

### மாணவ ஆசிரியராய்....

முறைசார் கல்வித்தறையில் விளங்கியதால் தான் கல்விகற்கும் காலத்திலேயே கற்பித்தல் தொழிலிலும் ஈடுபட்டுவரலானார். இவருக்கு விலங்கியல் துறையில் அதீத ஈடுபாடும் கெட்டித்தனமும் இருந்தது. இதனால் 1979 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் யாழ்மாவட்டத்தல் பெரும்பாலான கல்வி நிறுவனங்களில் விலங்கியல் துறை ஆசிரியராக தனக்கெனத்தனியான ஒரு பேரிடத்தைத் தக்க வைத்துக் கொண்டார் என்பதையும் என்னால் மட்டக்களப்பிலிருந்தே அறியக்கூடியதாக இருந்தது.

### காதல் தேர்வு

பல்கலைக்கழக வாழ்வில் காதலிப்பது என்பது ஒன்றும் அதிசயிக்கத் தக்க செயலல்ல ஏனைனில் அது நின்று நிலைத்து நீடிப்பது என்பது எப்போதும் கேள்விக்குரியதே. அது கலியாணம் காண்பது என்பது தான் அதிசயமானது. அந்தவகையில் இவர்களது காதல் தேர்வு அதிசயமான ஒன்றேதான்.

இறுக்கமான யாழ்ப்பாணக் கட்டமைப்பிலிருந்து வெளிவருவதென்பது பெரும் பிரயத்தனமானது. இவர் மட்டக்களப்பிலிருந்து தேடிப் பெற்ற துணையைச் சென்றடையப்பலவிதமான விமர்சனங்கள் எழுந்த போதும் அவற்றையெல்லாம் தனது சாதுரியத்தால் வெற்றி கொண்டு 1983 செப்டம்பர் 10 ஆம் நாளில் பதிவுத்திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார் இவர் மீது அளப்பரிய அன்பு செலுத்தி உதவி செய்த குடும்பத்து உறவுகளும் இவர் மீதிருந்த பாசத்தால் அமைதியடைந்து அன்பு செலுத்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கி விட்டனர். அனைவரையும் அணைத்துச் செல்லும் பக்குவத்தை அவர் பெற்றிருந்தார்.

### குடும்ப வாழ்வு

வேலணையைப் போல் ஒரு மாபெரும் வரலாற்றுப் பிம்பத்தைப் போலன்றி இவரது காதல் மனையாளின் ஊர் மாவிலங்கத்துறை ஒரு சிறு விவசாயக் கிராமம் மட்டக்களப்பு மண்முனைச்சிற்றரசின் வாவிக்கரை நுழைவாயிலாக இவ்வூர்த் துறைமுகம் பேசப்பட்டு வரும் ஒரு வரலாற்றுச் செய்தியும் உள்ளது.

எவ்வாறாயினும் இங்குள்ள மக்களும் உழைப்பாளிகள் எனினும் உழைப்புக்கேற்ற ஊதியம் குறைவு ஆயினும் குழந்தைகளுக்கு கல்வியூட்டுவதில் ஆர்வமுள்ளவர்கள் இவர்களில் நுண்ணறிவாற்றல் மிக்க குடும்பங்களில் ஒன்றாக கணபதிப்பிள்ளை - தெய்வானை குடும்பம் இருந்தது அதில் பிறந்தவர் தான் அன்னம்மா. இவரது தாய் மாமன் இளையதம்பி என்னுடன் H.S.C வகுப்பில் மட்டக்களப்பு சிவாநந்தாவில் படிக்கவந்து இடையில் ஆசிரியத் தொழில் பெற்றுக் கொண்டு இறுதியில் அதிபராக ஓய்வு பெற்றவர். இவரே இக்குடும்பத்தின் வழிகாட்டியானவர் இவர்கள் எல்லோரும் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்ற நுண்ணறிவாளர்கள்.

தங்கராஜா - அன்னம்மா தம்பதியினர் ஒரு விஞ்ஞானத் துறை ஆசிரிய குடும்பம் என்பது குறிப்பிடத்தக்கது. அவ் வகையில் தனது மூன்று ஆண்மக்கட் செல்வங்களையும் வைத்தியராக, பொறியியலாளராக, தேசங்கடந்த விளையாட்டு வீரராக உருவாக்கிவிட்டார்கள். இவர்கள் இன்றைய நிலையை அடைய நண்பர் தங்கராஜா பட்ட துன்பங்கள் செய்த தியாகங்கள் கொஞ்சநஞ்சமல்ல இவைகளை அருகிலிருந்து பார்த்தவன் என்பதால் நன்கறிவேன்.

### அரசபணியில்

இவர் அரசபணியில்இணைந்து விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக 16.04.1984 இல் முதன் முதல் கல்முனையிலுள்ள மருதமுனை ஸம்சுல்இல்ம் மகாவித்தியாலயத்தில் (ஸம்ஸ் சென்றல்) கல்விப் பணியை ஆரம்பித்தார்.

இவர் தமிழ், முஸ்லிம், சிங்களப் பாடசாலைகளில் மட்டக்களப்பு, கல்முனை, வாழைச்சேனை மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் பணிபுரிந்தவர். இப் பாடசாலைகளில் இன, மத, மொழி, பேதமற்று பற்றுதியான மாணவர் குழாத்துக்களை உருவாக்கி விட்ட பெருமையாளர்.

இவரது கற்பித்தல் திறமையினால் அதிகளவு மாணவர்கள் மருத்துவத் துறையில் நுளைவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. மேலும் இவரது மாணவர்களில் அனேகமானவர்கள் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் மருத்துவராகப் பணியாற்றுகின்றனர். மேலும் பலர் புலம் பெயர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளில் மேனிலையடைந்து வாழ்கின்றனர். இன்று இவரது பதிவுகள் நல்ல விளைச்சலைக் கொடுத்து சிறப்படைந்து வருவதைப் பதிய வேண்டியதாயுள்ளது.

## நன்மக்கட்பேறு

இவர்களுக்கு மூன்று ஆண் மக்கட் செல்வங்கள் உள்ளனர். மூத்தவர் தங்கராஜா திவாகர் - ஒரு மருத்துவப் பட்டதாரி. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவராவர். இப்பொழுது திருகோணமலை கந்தளாய் ஆதார வைத்திய சாலையில் பொறுப்பதிகாரியாக உள்ளார். அண்மையில் திருமணம் செய்து கொண்டுள்ளார்.

இரண்டாமவர் தங்கராஜா கிஷாந்தன் ஒரு பொறியியலாளர் மெறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தின் கணனியியல் துறையில் பட்டப் படிப்பை நிறைவு செய்தவர். தனியார் துறை ஒன்றில் நிறைவேற்றுத் தரத்தில் பணிபுரிந்து வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று பயிற்சி பெற்றவர்.

மூன்றாவது மகன் தங்கராஜா டினேஸ்காந்தன் ஆங்கில மொழி மூலம் லண்டன் A/L முடித்து கணக்கியல் துறையில் CIMA பட்டப்படிப்பை நிறைவு செய்தவர் ஒரு கணக்காளர் இவர் சர்வதேசத் தரத்தில் ஒரு சிறந்த டெனிஸ் வீரர்.

இலங்கையின் முதல் தர டெனிஸ் வீரராக தொடர்ந்து நான்கு ஆண்டுகள் (Champion) பட்டத்தை பெற்று சாதனை படைத்த நிலையில் உள்ளார்.

அத்தடன் தனது எட்டாவது வயதில் டெனிஸ் விளையாட்டை ஆரம்பித்து இன்று வரை தொடர்ந்து விளையாடிக்கொண்டிருப்பவர். உலகில் முப்பதுக்கும் மேற்பட்ட பல்வேறு நாடுகளுக்கும் சென்று டெனிஸ் விளையாட்டில் பங்குபற்றிச் சாதனைகள் படைத்துள்ள துடிப்பான இளைஞன் தற்போது இலங்கையில் ஒரு சிறந்த டெனிஸ் பயிற்றுவிப்பாளராகத் திகழ்கின்றார். அத்துடன் D.T.S (Dineshkanthan Tennis School) என்ற பெயரில் டெனிஸ் அக்கடமி ஒன்றையும் தனியாக நடத்தி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சாதனைப் பதிவுகளாக

இவர் ஒரு சராசரி மனிதனுக்கு வாழ்க்கையில் ஏற்படக்கூடிய இன்ப துன்பங்கள் ஏற்ற இறக்கங்கள் மன அழுத்தங்கள் - என்று பல்வேறு நெருக்குதலுக்கும் உள்ளானவர். ஆயினும் அவைகள் அனைத்தையும் தன்னுடைய மனப்பலத்தினால் வெற்றி கொண்டவர்.

நண்பர்களுடன் பொழுது போக்கிற்காக தொடக்கப்பட்ட மதுப் பழக்கத்தில் இவர் தன் வாழ்நாளில் சில பொழுதை அவமாக்கி விட்டிருந்தார். ஆயினும் அதிசயிக்கத்தக்க வகையில் அதிலிருந்து மீண்டு புதிய வாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளார் இது இறை சித்தத்தின் நாட்டம் என்பதால் தான் இன்று இவர் ஆன்மீகத் தேடலுக்குள் நுளைந்து விட்ட வல்லாளர் ஆகியுள்ளார்.

இவர் ஓர் அறிவியல் துறை எழுத்தாற்றல் மிக்கவர் என்பதும் பதியப்பட வேண்டிய ஒன்று கடந்த 04.11.2010 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் “பதார்த்தங்களின் கொண்டு செல்லல்” என்னும் இவரால் எழுதப்பட்ட உயிரியல் நூல் ஒன்று எனது தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அது இவர் அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றதற்கான குறியீடாகவும் அமைந்தது.

இதற்கு முற்பட்ட காலங்களில் மட்டக்கப்பில் ஆசிரியர் பணியில் இருந்த போது “விலங்குப்பாகுபாட்டியல்”, “குருதிச் சுற்றோட்டம்” மற்றும் “பீடைகள்” அகிய நூல்களும் இவரால் வெளியிடப்பட்டு மாணவ சமூகத்தின் பெரு வரவேற்பைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

முறைசார் பரீட்சை முறைக் கல்விக்குப் புறம்பாக விளையாட்டுத் துறையிலும் இவர் பெரிதும் ஆர்வம் காட்டி வந்தார். தான் கற்பித்த பாடசாலைகளில் விளையாட்டுத்துறை ஆசிரியர்களுடன் இணைந்து மாணவர்களை ஊக்கப்படுத்தத் தவறவில்லை. அக்காலங்களில் இவர்கால மாணவர்கள் தேசிய மட்டப்பேட்டிகளிலும் பங்குபற்றிச் சிறப்படைந்ததை நினைவு கூர்ந்து மகிழ்ச்சியடைவதைக் கண்டிருக்கிறேன்.

தனது சாதனைப் பதிவுகளுக்கு வித்திட்ட பலரை அவர் என்னிடம் நினைவு கூர்வார். அதில் அவர் யாழ்ப்பாண நினைவுகளில் தனியார் கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழக பேராசிரியர்கள் நண்பர்கள் வேலணையிலிருந்த உறவுகள் எனப் பலரும் அடங்குவர். இவ்வாறே மட்டக்களப்பிலும் பலரை அவர் நினைவு கூருவார்.

அவருடைய சகோதரர்களான யாழ் நகரில் புடவைக்கடை நடத்தும் மூத்த சகோதரர் தியாகராஜா, தைத்த ஆடையகம் நடத்தும் அண்ணர் யோகராஜா, அகாலமரண மடைந்து விட்ட ஸ்ரீஸ்கந்தராஜா, பரமேஸ் அக்கா குடும்பம் சாரத்தியம் செய்யும் தம்பி மோகனராஜா என்போரைப் பற்றிய மறக்க முடியாத நினைவுகளை என்னுடன் பகிர்ந்து கொள்வார். தனது தந்தைக்குப் பின் தங்கள் குடும்பத்தையும் வழி நடத்தி தன்னையும் கல்வியில் கரை சேர்த்த பெருமையை அண்ணர் யோகராஜாவுக்கும் அவரது குடும்பத்துக்கும் வழங்கி கௌரவப்படுத்தி அடிக்கடி நினைவு கூர்வார். “நன்றி மறப்பது நன்றன்று“ என்பதை அவரது செயல்கள் நினைவூட்டியவ வண்ணம் இருந்தது.

இன்று “வாழ்க வளமுடன்“ சுலோகத்துடன் அனைவருடனும் மலர்ந்த முகத்துடன் அளவளாவிமகிழும் இவர், மனவளக்கலை மன்றத்தின் செயற்பாடுகளை கொழும்பிலும் மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணத்திலும் முன்னெடுத்துச் செல்லும் வழிகாட்டியாகத் திகழ்கின்றார். இதனால் மன அழுத்தங்களுக்கு உட்பட்ட பலரும் பெரும் நிவாரணங்களைப் பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலையடைந்து கொண்டிருப்பதையும் அறியமுடிகிறது. இவைகள் அனைத்துக்கும் பிள்ளைகள் Tennis விளையாட்டில் காட்டிய ஆர்வமும் திறமையும் தான் இவரை மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு நகர வைத்தது. இதுவே அவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட உயர்வின் திருப்பு மையம் என்பதில் ஐயமில்லை.

**மணி விழாவெடுக்க ….. நிறைவினில்,**

"ஊரால் பெருமை சிலருக்கும்
சிலரால் பெருமை ஊருக்கும் கிடைக்கிறது.
தன் பெருமையைத் தன் மக்கட்கும்
தன் மக்கட் பெருமையைத்தானும் பெற்று விளங்கும்….."

என்ற கலாநிதி க. சிவராமலிங்கம் பிள்ளை அவர்கள் எடுத்தாண்ட கூற்றைச்சற்று விரிவாக்கி மணிவிழாக்காணும் நண்பர் ஆறுமுகம் தங்கராஜா அவர்கள் கடந்த அறுபது ஆண்டுகளில் அர்ப்பணிப்போடு செய்த கல்விப் பணியையும், சமூகப்பணிகளையும் நிலை நிறுத்தும் குறியீடாக இம் மணிவிழாவைக் காண்கின்றேன். அவர் யார் யாருக்கெல்லாம் பெருமை சேர்த்துக் கொடுத்தாரோ அவர்கள் அனைவர் சார்பிலும் இவ்விழாவைக் காண்கின்றேன்.

"ஆல் போல் தழைத்து
அறுகுபோல் வேரூன்றி
மூங்கில் போல் ஓங்கி உயர்ந்து"

வாழ்க வளமுடன்

முன்னாள் பிராந்திய
உள்ளூராட்சி துணை ஆணையாளர்,
இலக்கிய வித்தகர், கலாபூஷணம்,
அகில இலங்கை சமாதான நீதவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும் ஆறுமுகம் தங்கராஜாவிற்கு வாழ்த்துச் செய்தி



அகவை அறுபதில் மணிவிழாக் காணும் நண்பர் ஆறுமுகம் தங்கராஜாவின் மணிவிழா மலர் "தங்கம் 60" இற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் 1978 இல் என்னுடன் கல்வி கற்றவர். அன்றைய காலத்தில் இவர் தனியார் கல்வி நிலையங்களில் பிரபல்யம் மிக்க சிறந்த விலங்கியல் ஆசிரியராக கடமையாற்றியவர். அக்கால கட்டத்தில் "தங்கராஜா மாஸ்ரர்" என்றால் யாழ். மாவட்டத்தில் தெரியாத விஞ்ஞான மாணவர்கள் யாரும் இருக்க முடியாது. இவர் தனக்கென ஒரு தனியிடத்தை பிடித்திருந்தவர். எந்நேரமும் சிரித்த முகம் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் தன்மை மிக்கவர் நன்றாக இனிமையாகப் பாடுவார். ஒவ்வொரு விஞ்ஞான பீட விழாக்களிலும் இவரது பாட்டு நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம். இவர் பாடிய சில பழைய பாடல்கள் இன்னும் எனது மனதில் ஞாபகமாக உள்ளது.

இவர் யாழ்.பல்கலைக்கழக கல்வியை முடித்து ஆசிரியராக மட்டக்களப்பில் இணைந்த பின்பு எனக்கு இவர் எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை. கிட்டத்தட்ட 25 வருடங்களுக்கு பின்பு இவரது மகன் திவாகர் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு கல்வி கற்க வந்த பின்பு தான் மீண்டும் இவருடன் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இவரது துணைவியார் என்றும் சிரித்த முகம், மென்மையாகப் பேசுவார். எங்களுடன் ஒன்றாகப் படித்தவர். அவர் தாவரவியலில் சிறப்பு பட்டம் பெற்று பின்னர் ஆசிரியராக கடமை புரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது நீண்ட கால ஆசிரியப் பணியின் விளைவாக விஞ்ஞான மாணவர்களுக்கென ஒரு புத்தகத்தையும் தமிழில் எழுதி வெளியிட்டுள்ளார். அதிலும் எனக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதற்கு சந்தர்ப்பத்தை தந்துள்ளார். இந்நூல் விஞ்ஞான மாணவர்களுக்கு பெரிதும் பயன்தரக்கூடிய தொன்றாகும். இவர் தற்போது மனவளக்கலையில் தேர்ச்சி பெற்று பேராசிரியராக கொழும்பில் உள்ள மனவளக்கலை மன்றத்தில் கடமை புரிகிறார். இவரது இச் சேவை எமது மக்களுக்கு தேவையான ஒன்றாகும்.

இவருக்கு மூன்று ஆண்பிள்ளைகள். மூவரையும் மூன்று வெவ்வேறு துறைகளில் ஆற்றுப்படுத்தி அதில் வெற்றியும் கண்டுள்ளார். முதலாவது மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய துறையிலும், இரண்டாவது மகன் பொறியல் துறையிலும், மூன்றாவது மகன் கணக்கியல் துறையிலும் சிறந்து விளங்குகிறார்கள். அத்துடன் மூன்றாவது மகன் அகில இலங்கையில் சிறிலங்காவில் முதலாம் தர Tennis வீரர் ஆகவும் திகழ்கிறார்.

இவர் சமூகத்திற்கு ஆற்றிய சேவைகளை பாராட்டி இவருக்கு மணிவிழா கொண்டாட ஆர்வம் கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இவரது மணிவிழா சிறப்புற நடைபெறவும் மணிவிழாமலர் புதுப்பொலிவுடன் மலரவும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவரின் ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நீண்ட காலம் வாழ்ந்து இன்னும் பல சமய சமூகப் பணிகளை ஆற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும் என பிரார்த்தித்து அமைகின்றேன்.

என்றும் அன்புடன் நண்பி

Dr. செல்வி **சகுந்தலாதேவி அம்பிகைபாகன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
மருத்துவ பீடம்
யாழ். பல்கலைக்கழகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பன் பிரபாகரனின் வாழ்த்துச் செய்தி



சிறந்த ஆசிரியராகவும் ஆளுமை மிக்கவராகவும் திகழ்ந்து கொண்டிருக்கின்ற திரு ஆறுமுகம் தங்கராஜா அவர்களுடைய மணி விழாவை ஒட்டி வெளியிடப்படுகின்ற "தங்கம்60" மலருக்கு எனது ஆசியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கிழக்கு பல்கலைக்கழகமாக இருக்கின்ற முன்னைய மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியில் தாவரவியல் உதவி விரிவுரையாளராக கடமையாற்றிய செல்வி அன்னம்மா கணபதிப்பிள்ளை அவர்களை, திரு ஆ.தங்கராஜா அவர்கள் தமது திருமண நிச்சயதார்த்ததில் இணைவதற்கு முதல் சந்திப்பதற்காக வந்த போது அவரை முதன்முதல் வந்தாறுமூலையில் கண்டதாக எனது ஞாபகம்.

யாழ் பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருக்கின்ற போதே யாழ் நகரில் பிரபலமான விலங்கியல் ஆசிரியராக கடமையாற்றி பின் திருமண பந்தத்தில் இணைந்து மட்டக்களப்புவாசியானதுடன் ஆசிரியர் தொழிலுக்காக கல்முனையின் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரிக்கு தம்பதிகளாக வந்து உயர்தர விஞ்ஞான வகுப்புகளுக்கு பாடம் புகட்டியதும் பல மாணவர் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்றதும் மருதமுனை வரலாற்றில் பதியப்பட வேண்டிய ஒன்று.

அதே வேளை கல்முனையில் விலங்கியல் பாடத்தில் தனியார் வகுப்புகளில் முடி சூடா மன்னானாக திகழ்ந்தமை நாம் அறிந்த ஒன்றே. கல்முனைச் சூழலும் தங்கராஜாவின் நண்பர் குழாமும் இன்றும் பேசப்படுகின்ற ஒருவிடயமாகும். கல்முனை உவெஸ்லி ஆசிரியர் விடுதியில் இருந்த அண்மையில் அகால மரணம் அடைந்த கனகசபாபதி அருளானந்தம் அவர்களின் ஆசிரியர் விடுதி எப்போதும் நண்பர்களால் நிறைந்திருக்குமாம். அருளின் சமையலில் தங்கராஜாவும் நண்பர்களும் திளைத்திருப்பார்களாம் எனக் கேள்விப்பட்டதுண்டு.

பின் மனைவியின் ஊரான மட்டக்களப்பை நோக்கிய நகர்வு அவருடைய வாழ்வில் பல இன்ப துன்பங்களை கொடுத்ததை நான் அறிவேன். வீடு கட்டல், பிள்ளைகளின் கல்வி, பாடசாலை, நியாயத்திற்கு குரல் கொடுத்து அனுபவித்த துன்பங்கள் ஒரு புறம் இருந்தாலும், தன்னுடைய கற்பித்தலால் மற்றவர்களை ஊட்டி வளர்த்ததன் விளைவை பிள்ளைகளின் உயர் கல்வியில் கண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த உயர்தர விடைத்தாள் மதீப்பீட்டுப் பணியில் ஈடுபட்ட காலங்களில் கொழும்பில் ஒன்றாக தங்கிய நாட்களும் அக்காலங்களில் பகிர்ந்து கொண்ட சந்தோசமான நிகழ்வுகளும் என்னுடைய ஞாபகத்திற்கு வருகின்றன.

சூழலுக்கேற்ப அங்கிகளில் மாற்றம் ஏற்படுவது போல உயிரியல் ஆசானின் குடும்பத்தோடுடனான கொழும்பை நோக்கிய நகர்வைக் காண்கின்றேன். இளைய மகனின் "டெனிஸ்" திறமைக்கு இந்நகர்வு ஊக்கத்தை அளித்ததுடன் தேசிய மட்ட சிறந்த வீரராக திகழ வாய்ப்பளித்தது எனலாம்.

யாழ்ப்பாணம் கல்முனை மட்டக்களப்பு என விரிந்த தங்கராஜாவின் கற்பித்தல் பணி இறுதியில் கொழும்பில் முடிவடைந்தாலும் தனது பணியை திசைமாற்றி ஆன்மீகத்திற்குள் இணைந்து "மனவளக்கலை யோகா" இல் பேராசிரியராக தொண்டர் அடிப்படையில் சேவையாற்றி வரும் திரு ஆ. தங்கராஜாவை மனம் மகிழ வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.

அறுபதைத் தாண்டி குடும்பத்துடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.


அன்புடன்

திரு.வ.பிரபாகரன்,

அதிபர்,

உவெஸ்லி உயர்தர பாடசாலை,

கல்முனை.


*நீ தீமையினாலே*
*வெல்லப்படாமல்*
*தீமையை*
*நன்மையினாலே*
*வெல்லு*

*நானே சத்தியமானவன்*
*நானே ஜீவனுமானவன்*
*நானே வழியுமானவன்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message of Felicitation

From Dinith Pathiraja



First and foremost I would like to place on record my immense appreciation and gratitude to the Thangarajah family for asking me to pen a few thoughts on the life and times of Mr Arumugam Thangarajah.

Mr Thangarajah, as I would call him, was born, raised and studied in Jaffna. He entered university and became a teacher of repute in Biology. During his distinguished career as a teacher he has helped thousands of students in Jaffna, Batticaloa, Kalmunai, Valachchenai.and finally in Colombo. He was a well known and a popular teacher in Jaffna in the 1980's before he ever moved to Colombo.

He met his life partner Mrs Annammah. Thangarajah at Univer sity of Jaffna. and married her in 1983. They have three sons all of whom are well respected and reputable gentleman in their own chosen fields.

I got to know Mr Thangarajah well in the late 1990's and early in the new millennium. Whilst my association with him was mainly through a different field I was associated with him and his family. through various events in the lives of all three of his sons.

Mr Thangarajah from the first day that I knew him was extremely hard working and always wanted the very best for his family. His ultimate goal always was to make sure that he would try and help his family to do the best they can do in life through hard work, dedication and commitment. What I have seen in his life is that he has through his work ethic, his enthusiasm and his personal attributes led by example for his family.

He has always been innately polite, receptive to ideas and innovation. Because of his demeanor people were drawn to help him and his family. His dedication towards the betterment of his sons lives is an example for most parents and could surely be characterized as his greatest strength as well as the defining feature of his life.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Today as he celebrates a significant milestone in his life he can be a very happy person that all the work that he put in, all the sacrifices that he made and all the hours of toiling he did has come to fruition. He is, I am sure, extremely proud and satisfied that not only has he led a life of example to others but that he has also produced his off spring to be valuable and productive citizens of this country.

I would like to wish him a long and healthy life on this very joyous occasion since I am very sure he already has a very happy one.

May the gods bless you!!!!

Dinith Pathiraja
Attorny At Law,
Director of coaching and
Tournaments, Sri Lanka Tennis Association.

A Negative Thinker
Sees a Difficulty
in Every Opportunity ...
A Positive Thinker
Sees an Opportunity
in Every Difficulties ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாண்மை மிக்க ஆசிரியர்

பேரா. பொ. பாலசுந்தரம்பிள்ளை
BA Hon Ceylon
PhD (Durham)
D litt (Jaffna)
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்



ஆசிரிய திலகம் திரு. ஆ. தங்கராஜா (B.Sc. Hons Diploma in Education) அவர்களின் மணி விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அவர் என் உறவினர் தம்பி என அவரை அழைப்பேன். எங்கள் இருவரினதும் பரம்பரை வேலணையைப் பின்புலமாகக் கொண்டது.

1960க்கு முன் பண்ணைப் பாலம் அமைக்கப்படுவதற்கு முன்னர் வேலணைக் கிராமம் தற்சார்புப் பண்பைப் பெற்றிருந்தது. அதன் பின் யாழ்ப்பாண நகருக்கும் தீவுப்பகுதிக்கும் ஆன போக்குவரத்து முன்னேற்றத்தால் வேலணையின வாழ்வியலில் சிறுசிறு மாறற்ங்கள் ஏற்படலாயிற்று.

1980 களில் ஆரம்பமான யுத்தத்தின் அழிவுகளாலும் 1991 இல் ஏற்பட்ட மக்களின் முழுமையான இடப்பெயர்ச்சியாலும் வேலணையின் வாழ்வும் வளமும் சீர்குலைந்து மக்கள் சிதறுண்டு இலங்கையின் பல பகுதிகளிலும் பிற நாடுகளிலும் வாழ்வைத் தேடிக் கொண்டனர். 1996 இல் மீள் குடியேற்ற நடவடிக்கை முன்னெடுத்த போதும், முன்னைய வேலணையை இன்று காண்பது கடினம். இடம் பெயர்ந்து வாழ்வோர் தம் கிராமத்து நினைவுகளை மீட்டெடுத்து மகிழ்கின்றனர். இவ்வகையில் தம்பி தங்கராஜாவும் இதற்குள் அடங்குவர்.

எம் இருவரது பெற்றோரும், நாமும் வேலணை நாவலடிப்புல அயலில் வாழ்ந்தவர்கள். இக் குறிச்சியில் வாழ்ந்தவர்கள் யாவரும் உறவினர்கள். இதனால் கிராமிய சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பில் மிக இறுக்கமான தொடர்பைக் கொண்டிருந்தனர். மக்களின் வாழ்வாதாரம் விவசாயத்தையும் கால்நடை வளர்ப்பையும் முக்கியமாகக் கொண்டிருந்தது. நாவலடிப்புலத்தின் இடவமைப்பு கால்நடை வளர்ப்புக்கு உகந்தது. இதன் வட எல்லையில் இருந்து அராலிக் கடற்கரை வரை பரந்து விரிந்த தரவை நிலம் இக்கிராமத்தவரின் சமுதாய மேய்ச்சல் நிலமாக விளங்கியது. இதனால் இக்கிராமத்தின் ஒவ்வொருவர் வீட்டிலும் பெரும் எண்ணிக்கையில் ஆடு, மாடுகள் மற்றும் ஒரு சிலரிடம் செம்மறிப்பட்டிகளும் இருந்தன. இவற்றை விட வர்த்தகர்களும் ஆசிரியர்களும் கிராமத்தை அலங்கரித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தங்கராஜாவின் தந்தை இளையதம்பி ஆறுமுகம் அவர் இளமையில் மிகவும் துடிப்பானவர், பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டவராகவும் விளங்கினார். வேட்டையாடுவதில் பிரியமானவர் அவரை உறவினர்களும் நண்பர்களும் "குட்டி ஆறுமுகம்" எனச் செல்லமாக அழைப்பர். அவருடன் மூன்று சகோதரிகள் யாவரும் அருகருகே அன்புடன் வாழ்ந்தனர்.

ஆசிரியரின் தாயார் திருமதி சொர்ணம்மா ஆறுமுகம் சிறப்பான குடும்பப் பெண் பொறுமையின் இருப்பிடம் எதனையும் சமாளிக்கும் திறன் மிக்கவர் அழகானவர். உறவினருடன் அன்பும் பாசமும் கொண்டவர் இவரின் தாயார் சின்னாச்சி சரவணமுத்து பெரியதாய்மார் மாணிக்கம், நல்லாச்சி ஆகியோர் ஆவர். திரு. ச. கணேசலிங்கம், திரு. ச. சிதம்பரநாதன் ஆகியோர் இவரின் சகோதரர்கள் ஆவர்.

ஆசிரியர் தங்கராஜாவின் சகோதரர்கள் தியாகராஜா, யோகராஜா, ஸ்ரீஸ்கந்தராஜா, மோகனராஜா ஆவார். சகோதரி பரமேஸ்வரியாவர். இவர்களில் ஸ்ரீஸ்கந்தராஜா மரணித்து விட்டார் அவரின் அகால மரணம் ஆசிரியரை மிகவும் பாதித்தது.

ஆசிரியர் தங்கராஜா ஆரம்பக் கல்வியை ஆத்திசூடி வித்தியா சாலையில் கற்றார். அண்மையில் ஆத்திசூடி வித்தியாசாலையில் கற்பித்த ஆசிரியர்களுக்கான பாராட்டு விழாவில் சிறந்த மாணவர் வரிசையில் இடம் பெறும் தங்கராஜா பற்றியும் பேசப்பட்டது. இப்போது இப்பாடசாலை தனது கல்விப் பணியை மீளவும் தொடங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் இடை நிலைக் கல்வியை வேலணை மத்திய கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் பட்டப்படிப்பை யாழ் பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டார். விஞ்ஞானப்பிரிவில் விலங்கியல் பாடத்தை சிறப்புப் பாடமாகக் கற்று விஞ்ஞானப் பட்டதாரியாக அறிவு, ஆற்றல் துடிப்புடன் வெளியேறினார்.

ஆசிரியரின் கற்பித்தல் ஈடுபாடு காரணமாக ஆசிரியத் தொழிலை மேற் கொண்டார். ஆசிரியப் பணியில் இணைந்த குறுகிய காலத்திற்குள் தனது கற்பித்தல் திறமையாலும், மாணவர் விரும்பும் ஆசிரியப் பண்புகளாலும், பொதுப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுத்ததாலும் புகழ் பெற்ற விலங்கியல் ஆசிரியராக மிளிர்ந்தார். அவர் தமிழ் பேசும் மணவர்களின் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சியில் மிக ஈடுபாட்டுடன் செயலாற்றியவர். இதனால் அவரின் சேவையைப் பெறுவதற்கு பல முன்னணிப் பாடசாலைகள் விரும்பின. அத்துடன் பல தனியார் கல்வி நிறுவனங்களும் அவரது சேவையை நாடி நின்றன.

விலங்கியல், உயிரியல் நூல்கள் பல எழுதியுள்ளார். மேலும் கா.பொ.த உயர்தரம் விலங்கியல், உயிரியல் பாட உதவிப் பரீட்சகராகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக பிரதம பரீட்சகராகவும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் இருபது ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இவை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது.

மணிவிழாக் காணும் ஆசிரியர் தங்கராஜா அவர்களின் ஆழ்ந்த அறிவும் அனுபவமும் வாழ்வின் உண்மையை அறிந்த நிலையில் தற்பொழுது ஆன்மீகத்தில் மிக்க ஈடுபாடு உடையவராக இருப்பதுடன் அதனைப் பரப்புரை செய்வதிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்.

வீட்டில், கிராமத்தில், ஊரில், நாட்டில், உலகத்தில் சாந்தி சமாதானம் நிலவ வேண்டும் என்பதே அவரது விருப்பம். மாணவர்களைக் கல்வியில் ஈடுபட வைப்பதற்கு தன்னாலான பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்பதே அவரின் தற்போதய சிந்தனை. இதற்கு ஏற்றாற் போல் தியானம், யோகாசனம் போன்றவற்றை முன்னெடுப்பவராகவும் உள்ளார்.

குடும்ப வாழ்வு வடக்குக் கிழக்கு இணைப்பிற்கு உரமூட்டுவதாக அமைந்துள்ளது. இவரது மனைவி மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்தவர். சீரும் சிறப்புமான வாழ்வை மேற்கொண்டு புத்திரர் மூவருக்குத் தந்தையானார். பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியைக் கொடுத்து மூத்தவரை வைத்தியர் ஆகவும், அடுத்தவரைப் பொறியியலாளராகவும், மற்றவரைக் கணக்காளர் ஆகவும் கண்டு மகிழ்ச்சியுற்றுள்ளார். மூத்த மகன் தந்தை வழியில் வேலணையிலேயே திருமணம் செய்துள்ளார்.

ஆசிரியர் தங்கராஜாக்கு இப்போது தான் அகவை அறுபது. இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பவள விழா மற்றும் நூற்றாண்டு விழாவையும் கொண்டாட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

அவரும் அவர் குடும்பமும் சிறப்புடன் வாழ இறையருள் கிட்டுமாக.

சுபம்

*மாற்றம் என்பது*
*எளிது இல்லை.*
*ஆனால்*
*மாற்றம் இல்லாமல்*
*வளர்ச்சியே இல்லை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










ஆரம்பகால குடும்ப நினைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













இன்றைய குடும்ப நினைவுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆத்திசூடி வித்தியாசாலை

## கல்வி கற்ற பாடசாலைகள்


வேலணை மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில்
கல்வி கற்ற காலம் நண்பர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற காலம்
நண்பர்களுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புனித மைக்கல் கல்லூரி அதிபர் சகோதரர் ஜேம்ஸ் பீரீஸ்
மற்றும் டென்னீஸ் ஆசிரியர் வசந்தன்







மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியில்
1983 – 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வின்சன் மகளிர் கல்லூரியில் பல்வேறு நிகழ்வுகளில்
1991–1998









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழைச்சேனை அன்னூர் தேசிய பாடசாலையில்
1999-2000






கொழும்பு இசிப்பத்தன கல்லூரியில் 2001 - 2010





யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில்
2011 - 2012





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

# வாழ்த்துச் செய்தி

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலாக்
கண்ணில் அஃதூரும் கழுமலவளர் நகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

\- தேவாரம்.

பேரா.அ/நி.தங்கராசா – அ/நி.அன்னம்மா அகவை அறுபது நிறைவு காணும் மணி விழா தம்பதியினரே!



அன்பான வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வதோடு மட்டுமல்லாமல், பேராசிரியர் அ/நி.தங்கராசா அவர்களை பற்றி எனக்கு தெரிந்த சில நல்ல விடயங்களையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசை கொள்கிறேன் அதனால் மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

மனிதப் பிறப்புதான் உயிர்களிலேயே மிகச் சிறப்பானது. இறைநிலையின் நந்தவனத்தில் கடைசியாய் பூத்த மலர்தான் மனிதன் என்கிறார் வேதாத்திரி மகரிஷி "மண்ணில் நல்லவண்ணம் நாமும்" வாழ்ந்து பிறரையும் நல்ல விதமாக வாழ வைக்கும் மனவளக்கலை பேராசிரியராக அருட் தொண்டு புரிந்து வாழும் திரு.தங்கராசா அவர்கள் குடும்பம் உயர்வானது.

"எண்ணில் நல்ல கதிக்கு" என்றால்... அவரின் உயரிய எண்ணங்களே அவர்களின் வாழ்க்கை உயர்வுக்கு காரணம். பிறப்பு என்பது வினைகள் மட்டும் கழிப்பது அல்ல. நம் வினைகளின் மூலம் இந்த மண்ணில் நாமும் வாழ்ந்து, பிறர் வாழவும் வழிசெய்து இல்லறத்தின் மூலம் நன்மக்களைப் பெற்று வளர்த்து அவர்களையும் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழச் செய்திருக்கிறார்கள்.

அதாவது பெற்றோரின் கருவை நாம் உருவமாகவும் பெறுகிறோம். வாழ்க்கையாகவும் பெறுகிறோம். நம் கருவை நம் குழந்தைகள் உருவமாகவும் வாழ்க்கையாகவும் பெறுகின்றார்கள் அந்த விதமாக "பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே"

பேராசிரியர் ஏற்கனவே ஓர் நல்லாசிரியர். அதோடு மனவளக்கலை ஆசிரியர். அவரது வாழ்க்கை துணையும் ஆசிரியர். இருமனம் இணைந்த நிலையில் "நல்லாளோடும்" என்பதற்கிணங்க அவர்களும் அமைந்தது சிறப்புக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற"

— குறள்

இந்த குறளுக்கேற்ப, அறிவறிந்து அதனை சரியாக வாழ்க்கையில் பயன்படுத்தும் மூன்று நன் மக்கட்களை இந்த சமுதாயத்திற்கு தந்ததால் தொண்டராகிறார்.

மனவளக்கலையில் அருட்பணி செய்வதால் அருட் தொண்டனாகவும் இருக்கிறார்கள். இவர்கள் வாழ்க்கையில் மென்மேலும் சிறப்படைய எல்லாம் வல்ல இறையருளோடு குருவருளும் மகான்களின் பேரருளும் துணை செய்யட்டும் என வாழ்த்தி மகிழ்கிறேன்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

பரந்த இவ்வுலகில் எக்கேள்விக்கும்
பிறந்த எல்லோராலும் பதில் சொல்ல இயலும்!

'தெரியாது' என்பதே பதிலாய் இருக்கும்.

சரியான பதிலா அது? சரியான பதில் சொல்லலாம்...
பல புத்தக அறிவு துணை கொண்டு.

விடை சொல்ல வேண்டும். சரியான விடை மூலம்
வினாக்களுக்கே விடைகொடுத்தனுப்பும் விடை
சொல்ல வேண்டும்!

அந்த அற்புத சித்து விளையாட்டு ஆடிட
ஆங்கோர் ஆசிரியர் வேண்டும்...!

இங்கோ...!
தம்பதியினர் இருவருமே அருட்பெரும் ஆசிரியர்
பணியாற்றி
மனவளக்கலையிலும் ஆசிரியராக அருட்தொண்டு
ஆற்றிடும் தம்பதியினரே!

மன நிறைவோடு
மணி விழா காணும் உங்களை
மனதார பணிகிறோம்!
வாழ்க வளமுடன்!

மூத்த பேராசிரியர் **இந்திரா அம்மையார்**
திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு,
இந்தியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்ஸ் மத்திய கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி



அகவைகள் வெறுமனே எண்ணப்படுகின்ற கணியங்கள் எனபவற்றுக்கு அப்பால் அவை மற்றவர்களுக்கு பலவற்றை போதிக்ககூடியதும் வழிகாட்ட கூடியதுமான நினைவகங்கள் எனும் கருத்துக்கு அணி சேர்க்கும் மனிதர்களே ஆளுமைகளாக உலகிற்கு அடையாளபடுத்தபடுகிறார்கள். வாழ்வின் காலம் எவ்வளவு என்பதை விட எவ்வாறுஅமைந்தது என்பதே உலகினால் எண்ணப்படுகிறது. இந்த வகையில் அகவை அறுபதினை தொட்டுவிட்ட எமது கலாசாலையின் முன்னாள் ஆசிரியன் ஆறுமுகம் தங்கராசாவிற்கு விழாக்காண விழைந்திருக்கும் சபையினருக்கு முதலில் நன்றியினையும் பாராட்டுக்களையும் அவரால் நலம் பெற்ற கல்லூரி சார்பாக நவில்வதில் இக்கல்லூரியின் இன்றைய அதிபர் என்ற வகையில் பேருவகையும் பெருமிதமும் கொள்கிறேன்.

சுய வாழ்வில் சமுக எதிரிசை பண்புகளை இடையிடையே வெளிப் படுத்திய ஒருவர் தூய நல் வாழ்வுக்காக வழிகாட்டுவதற்கு சுய அனுபவம் ஆனது சிறந்ததோர் கற்பித்தல் சாதனமாக விளங்கும் என்பதில் இன்னொரு கருத்துக்கு இடமில்லை என்பதில் திடமான நம்பிக்கை எனக்குண்டு இது எவ்வாறு எனில் சாதாரண அமைதியான ஒரேபாங்கான கடலில் கிடைக்கும் அனுபவ கற்றலை விட கால சூழலுக்கு எற்ப குழம்பி பின் அமைதியுற்று ஏன் சுனாமியையும் உலகிற்கு அளித்த கடலிலிருந்து அதிகம் கற்பதற்கான வழிமுறைகள் வந்து சேர்கின்றன,என்பதைப் போலாகும்.

விஞ்ஞான உயர்தர வகுப்பிற்கு போதிப்பதற்கு என்னூரில் விஞ்ஞான பாடத்தை புகட்ட பௌதீக, மனிதவள வறுமை தலைவிரித்தாடிய காலப் பகுதியில் தனது மகத்தான சேவையை எம்மாணவர்களுக்கு வழங்கி அவர்களின் மனதில் இன்றும் தனக்கென ஓர் இடத்தை தக்கவைத்து கொண்டிருக்கும் தங்கராசா ஆசிரியரின் அகவை அறுபது மணி விழா மற்றவர்களுக்கு பல்வேறு செய்திகளையும் நிச்சயம் தெரிவிக்கும்.

ஒரு மனிதனின் வாழ்வானது அவனுடன் மட்டும் நின்றுவிடுவதல்ல மாறாக அவனின் சந்ததிகளின் வாயிலாக தொடர்பவை இந்தவகையில் சந்ததிகளை வலுப்படுத்துவது அதன்வாயிலாக சமூகத்தை வலுப்படுத்துவது என விரிந்து அது தேசம்வரை நீண்டுசெல்லும் இந்தவகையில் எமது ஆசான் தங்கராசா தன் சந்ததிகளை பொருத்தமாக வளமாக்கி தனது சமுக பொறுப்பினை செவ்வனே நிறைவேற்றியவராகவே நான் காண்கிறேன் அதேபோல் அவர் உருவாக்கிய மாணவசமுகத்தினது செயற்பாடுகளும் இதற்குசான்றுபகர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சமூகம் அறிவு ரீதியாகவும் தொழிநுட்பரீதியாகவும் வான்முட்டும் விருத்தியினை அடைந்தாலும் மனப்பாங்கு ரீதியாக பின்னிடைவான செயற்பாடுகளையே நாளாந்தம் பதிவு செய்கின்றது என்பதனை ஊடகங்கள் வாயிலாக நாம் உணர்ந்து நிற்கின்றோம். இந்த இடத்தில் மனித மனத்தை வளப்படுத்தவேண்டிய பாரிய பொறுப்பொன்று சமுக கடமையாக நம் அனைவர்மீதும் பொறுப்பளிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த பொறுப்பினையும் ஆசிரியர் ஏற்று நிற்பது இவர் இவ்வுலகில் நீடுழி வாழ வேண்டிய நிர்ப்பந்ததினை எமக்களித்துள்ளதால் தங்கராசா ஆசிரியர் நீடுழி தேகாரோக்கியத்துடன் வாழ நாமும் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றோம்.....

இவ்வண்ணம்

**SMM.AMEER**(SLEAS)

அதிபர்

கமு/கமு/சம்ஸ் மத்திய கல்லூரி,

மருதமுனை.

கியாமிய நாட்களில்
உனது நல்வினை தீவினை
பொன்றை நிறுக்கும்
தராசையும் விட
துல்லியமான
தராசினால்
அளவிடப்படும்

ஒரு ஏழை மகனுக்கு
நல்ல புத்தகம்
தேவையில்லை
அப்பாவின் கஷ்டமான
வாழ்க்கை அனுபவம்
என்ற புத்தகம்
ஒன்றே போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மத்திய கல்லூரி அதிபரின்
# தங்கம் அறுபது மலருக்கான வாழ்த்துச் செய்திகள்




யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிற் கற்பித்த, கற்பித்துக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள் மிகவும் வாண்மைத்திறன் உடையவர்கள். அவர்களுள் முன்னை நாள் விலங்கியல் ஆசான் தங்கராஜாவும் ஒருவர் என்பதையறிந்து மகிழ்ச்சியடைவதுடன் தங்கத்தின் மணிவிழா மலருக்கு வாழ்த்து செய்தியொன்றை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

அந்நாளில் உயிரியல் விஞ்ஞானத்துறையின் தூணாக விளங்கி பல மாணவர்களை விஞ்ஞானத்துறையில் சிகரங்களைத் தொடவைத்தவர். யாவற்றுக்கும் அப்பால் துடிதுடிப்பான செயலாற்றலும், சிறந்த மனித நேயமும் மிக்க பண்பாளரான திரு. தங்கராஜா, யோகாசனத்துறையில் பேராசிரியராகவும் விளங்குவது எமது கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

இவ்வாசிரியரின் பணிகள் மேலும் சிறந்து அவரது குடும்பமும் மகிழ்ச்சியுடனும், சுபீட்சத்துடனும் வாழ இறைவனிடம் வேண்டுகிறேன்.

S.K.எழில்வேந்தன்,
அதிபர்,
யாழ் மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு வின்சன் மகளிர் தேசிய பாடசாலை அதிபரின்
# தங்கம் அறுபது மலருக்கான வாழ்த்துச் செய்திகள்

அகவை அறுபதில் மணிவிழாக் காணும் எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திரு.ஆ.தங்கராஜா அவர்கள் 08 வருடங்களாக மட்/வின்சன்ட் மகளிர் பாடசாலையில் கடமையாற்றியவர். கற்பித்தல் மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மனமுவந்து இணைந்து கொண்டவர். பல வருடங்கள் தொடர்ச்சியாக வருடாந்த கல்விச் சுற்றுலாவை உற்சாகத்துடன் முன்னெடுத்து பணியாற்றியவர்.

சக ஆசிரியர்களுடன் சுமூகமான உறவுடன் பழகி நினைவில் இடம் பிடித்தவர். பாடசாலையை விட்டுச் சென்றபின்பும் பாடசாலையின்பாற் பற்றுக்குன்றாதவர். அகவை அறுபது கண்டு, மணிவிழாக் காணும் அவருக்கு, வாழ்த்துத் தெரிவிக்க மலரும் "தங்கம் 60" மணிவிழா மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் வின்சன்ட் மகளிர் பாடசாலை பெருமிதம் அடைவதோடு, அவர் சிறப்போடு நீடுழி காலம் வாழவும் வாழ்த்துகிறது.


திருமதி. **இராஜகுமாரி கனகசிங்கம்,**
B.Sc, Dip in Education, SLPS 1
அதிபர்,
வின்சன் மகளிர் தேசிய பாடசாலை,
மட்டக்களப்பு.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைச்சேனை_அந்-நூர் தேசியபாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி

அகவை அறுபதில் கால் பதிக்கும் "ஆறுமுகம் தங்கராஜா" ஆசிரியரை கௌரவிக்கும் வகையில் "தங்கம் 60" எனும் மணி விழாமலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் அக மகிழ்கின்றேன்.

எமது அந்-நூர் தேசிய பாடசாலையில் உயர்தர விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு எவ்வித நிரந்தர விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களுமின்றி தயக்கத்துடன் இருந்த காலப்பகுதியில் திரு.தங்கராஜா ஆசிரியர் அவர்கள் எமது பாடசாலைக்கு இடமாற்றமாகி வந்தது எமக்கு ஆறுதல் தந்தது. உயர்தர மாணவர்களுக்கு உயிரியல் பாடத்தை உயிரோட்டமாகக் கற்பிப்பதில் வல்லவர்.

மேலும் 1998 ஆம் ஆண்டுதொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை தமது கற்பித்தல் செயற்பாட்டுக்கு மேலதிகமாக முகாமைத்துவத்திற்கு ஆலோசனை கூறும் ஓர் ஆலோசகராகவும் கல்விச் சுற்றாடலில் அனைவருடனும் அன்புடன் பழகும் நண்பராகவும் இருந்தார் என்பதை இன்றும் மரியாதையுடன் நினைவு கூருகின்றேன்.


"ஊரார் பிள்ளையை ஊட்டிவளர்த்தால் தன் பிள்ளைதானே வளரும்" என்ற முதுமொழிக்கு ஏற்ப தங்கராஜா ஆசிரியரது மூன்றுபிள்ளைகளும் கல்வியில் உயர்ந்து இருப்பதுடன் இளையவர் விளையாட்டிலும் தேசமட்ட சாதனை படைத்துள்ளார் என்பது அவரது ஆசிரியத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

எனவே அகவைஅறுபதில் கால் பதிக்கும் தங்கராஜா ஆசிரியர் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து பவளவிழாக் காணவாழ்த்துகின்றேன்.

A.M.M.தாஹிர் (SLPS. MED)

அதிபர், மட்/மம/அந்-நூர் தேசியபாடசாலை,

வாழைச்சேனை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ඉසිපතනයෙන් ඔබට!

එදා 2010-10-05 දිනයි.උසස් පෙළ සිංහල මාධ්‍ය සිසුන් ඉංග්‍රීසි මාධ්‍ය සිසුන් බොහෝදෙනෙක් දුක්විය.නංගරාජා සර් විශ්‍රාම ගන්නා නිසායිණි.

ජේ.නංගරාජා මහතා (ශ්‍රී.ල.ගු.සේ.-1) 2001ජූලි 10 දින පාසැලට පැමිණ දා සිට විශාල සේවයක් කර ඇත.ඔහු ත්‍රිභාෂා දැනුමෙන් පිරිපුන් ගුරුභවතෙකි.එවැනි භාෂා දැනුමැති ගුරුවරු අද සොයාගැනීමටත් අපහසු ය.සිංහල/දෙමළ/ඉංග්‍රීසි භාෂා තුනෙන්ම ජීව විද්‍යාව ඉගැන්වූ ගුරු භවතෙකි.ගුරු භවතුන් අතර ප්‍රිය මනාප ගුරු භවතෙකු වූ නංගරාජා මහතා ඉසිපතනයේ සැම දෙනාගේම සිත් දිනාගත් අයෙකි.ගුරු චාරිකා -ගුරු සැසි -පාසැල් උත්සව වලදී ඔහු අප සමඟ ඉතා සහයෝගයෙන් කටයුතු කර ඇත.වයස අවු 60 සම්පූර්ණ වී පවත්වන මෙම උත්සවයේ දී නංගරාජා මහතා වෙනුවෙන් ලිපියක් ලිවීම සතුටට කරුණකි.නංගරාජා මහතාණෙනි ඔබට නිරෝගී සැප සම්පත් ලැබ සෞභාග්‍යමත් /ප්‍රීතිමත් ජීවිතය ද ගතකිරීමට ලැබේවායි සුබ පතමි.

ජේජ්.එස්.රාජපක්ෂ
නියෝජ්‍ය විදුහල්පති
ඉසිපතන විදුහල
කොළඹ -06.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசிபத்தன கல்லூரியில் உங்களுக்கு

"அன்று 2010.10.05 ஆம் திகதியாகும் உயர்தர தமிழ், ஆங்கில மொழி மூல மாணவர்கள் மிக கவலைப்பட்டனர். தங்கராஜா ஆசிரியர் ஓய்வு பெறப் போகின்ற காரணத்தினாலாகும்."

தங்கராஜா ஆசிரியர் (இ.ஆ.சே.I) 2001 யூலை 10 ஆம் திகதி, இப்பாடசாலைக்கு வந்த நாள் முதல் பாரிய சேவை செய்துள்ளார். அவர் மும்மொழி அறிவாற்றலால் பூரணத்துவமான ஓர் ஆசிரியராவார். இவ் வாசிரியரைப் போன்ற திறமை வாய்ந்த நல்லாசிரியரை காண்பதரிது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் மும்மொழிகளிலும் உயிரியல் கற்பிக்கும் ஆசிரியராவார். ஆசிரியர்களுள் மிகவும் விருப்பத்துக்குரிய ஆசிரியராக தங்கராஜா அவர்கள் எல்லோருடைய மனதையும் வெற்றி கொண்ட ஒருவராவார். ஆசியர் சுற்றுலா, ஆசிரியர் செயலமர்வு, பாடசாலை விழாக்கள் என்பவற்றில் அவர் எங்களுடன் மிகவும் ஒத்துழைப்புடன் செயற்பட்டுள்ளார். அறுபது வயது பூர்த்தியாவதை முன்னிட்டு நடாத்தப்படுகின்ற விழாவில் தங்கராஜா அவர்களுக்காக இம்மடலை எழுதுவது மகிழ்ச்சிக்குரிய அம்சமாகும். தங்கராஜா அவர்கள், உங்களுக்கு ஆரோக்கியமான வாழ்வும் வளமும் பெற்று சௌபாக்கியமான வாழ்க்கைக்காக பிரார்த்திக்கின்றேன்.

J.A.S. ராஜபக்ஸ
பிரதி அதிபர்
இசிபத்தன கல்லூரி
கொழும்பு - 05





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனணை இன்றுனக்கு அறுப தாச்சோ?

பனைவளம் பெருகிப் பல்கும்
பதிவட ஈழத் தோன்றல்
மனைவளம் பெருக்க மட்டு
மாநகர் புகுந்தோன் - மற்று
தனைவளம் பெருக்கிக் கல்வி
தனிற்கரை கண்ட நண்பன்
எனையொரு கவிதை செய்ய
ஏவினன் இறையின் சித்தம்.

பல்கலைக் கழகக் காதல்
பாதியில் நிற்கு மென்ற
சொல்லினைப் பொய்த்து வாழ்வை
சொர்க்கம தாக்கிக் கொண்டோன்.
இல்கலை கலந்து ஒன்றி
ஈன்றவாண் மகவு மூன்றும்
கல்வியா லுயரல் செய்து
களம்பல காணச் செய்தோன்.

முன்னவனை வைத்தியனாய் ஆகச் செய்தாய்!
பின்னவனை எந்திரியாய் மிளிரச் செய்தாய்!
உன்னவனாம் கடையவனைக் கணக்க னாக்கி
'டென்னிஸ்'ஸில் வல்லனுமாய் ஏற்றஞ் செய்தாய்!

தனக்கெட்டா வைத்தியக் கனிதன்னைத் தனயனுக்கும்
தனைச்சார்ந்த மாணவர்க்கும் எட்டச் செய்தோன்
குணக்கொட்டா யிருந்தாசான் பதவிதனி லிருந்தோய்ந்து
குலவுமன வளக்கலையிற் புகுந்தே மோந்து
தனக்கெட்டு ஆன்மநிலை பிறர்க்கூட்டும் பேராசான்
தானாகி உலகெங்கும் பறந்தே சேவை
தனைத்தூவும் இவன்வாழ்வில் பொன்னா ளிந்நாள்
தனைப்பாடல் தனிற்றூவி வழுத்துவேன் நான்.

தாவர விலங்கியல்கள் க.பொ.த உயர்தரத்தில்
தனையொன்றி உயிரியலாய் ஆனதின்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவர வியலன்னம் விலங்கியற் தங்கனொடு
தாமொன்றி வாழ்வியலாய் ஆனதன்று!

கருதரிய யாழ்ப்பாண வளாகந் தொட்டு
மருதமுனை ஸம்சுல் இல்ம் தனிற் றொடர்ந்து
பொருப்பனைய பலவாண்டு நிலைத்து நின்று
விருப்பனைய பெருகுநிலை நமது நட்பு!

வேலணை ஆறுமுகன் மைந்தன் தங்கன் - நண்
பாலணை எமக்கெல்லாம் அன்பன் இன்பன்
மாலணை சங்கமென முழங்கு மாசான் – அகவை
ஏனணை இன்றுனக்கு அறுப தாச்சோ?

மணிவிழாக் காணும் மட்டு மாப்பிள்ளை தங்கன் வாழி!
அணிதிரண் டவர்தம் விழவை அணிசெய முனைந்தோர் வாழி!
பணியென அவர் தொடரும் மனவளக் கலையும் வாழி!
குணவதி அவர்தம் 'அன்னம்' குடும்பமும் வாழி! வாழி!!

நட்புடன்,

**சபாரெத்தினம் பிரணவசோதி**

பெரியகல்லாறு–1,

கல்லாறு

2015.10.01

ஆயிரம் மடங்கு அன்பு
உள்ளே வைத்துக்கொண்டு
எதிரியைப் போல் தெரியும்
ஒரே உறவு
"அப்பா"
மட்டுமே.
இருக்கும் வரை
அவர் அருமை
பல பேருக்கு
தெரிவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அங்கிளுக்கு அகவை அறுபது



என் இதயத்தில் பதிந்த நினைவுச் சுவடுகளை மீட்டுப் பார்த்து இந் நன் நாளிலே ஓர் இரு வினாடிகளை விட சில மணி நேரத்தை ஒதுக்கி மீட்டுப் பார்க்கின்றேன்....

கான மயில் ஆட கான மழை பொழிய காத்திருந்த பொன் மன்னன் என் அங்கிள், பூமியிலே கால் தடம் பொறிக்கின்றார் ஆறுமுகம் சொர்ணம்மா தவத்தால் "தங்கராஜா" எனும் நாமத்துடன் நவம்பர் ஐந்தாந் திகதி.

நான் பிறந்த ஆண்டிலே என் ஊரில் காலடி பதித்த என் அங்கிள் மழலைப் பருவம் முதல் இன்று வரை எம்முடனே இருக்கின்றார். அறுபது வயதானாலும் அறிவும், செயற்திறனும், சிந்தனையும், மதிப்பும், மரியாதையும் அவரை விட்டு விலகவில்லை. தன் நம்பிக்கையில் வளர்ச்சியடைந்து பிறருக்கும் தன் நம்பிக்கை ஊட்டும் ஒரு சிறந்த ஆசான் இவர்.

என் வாழ்க்கையில் எந்த ஒரு கால் பதிப்பிற்கும் என் அங்கிளின் பங்கு நிச்சயம் நூறு சதவீதமாக இருக்கும். எழுத்தறிவித்தவன் இறைவன் என்பார்கள் முன்னோர். எழுத்தை எனக்கறிவித்தவர் என் அங்கிள்.

சில நிழல்களை, கனவுகளை நிஜங்களாக மாற்றிய என் அங்கிளுக்கு வாழ்த்துக்கள். கல்லும் கற்பனையும் கலந்து விட்டால், புலன்கள் படையெடுக்கும் எப்படி? சிற்பமாய். இப்படித்தான் தன் எண்ணக் கலைகளையும், நம்பிக்கையையும் எனக்களித்தவர் என் அங்கிள்.

இன்றைய தினம் தனது அறுபதாவது பிறந்தநாளைக் கொண்டாடும் என் அங்கிளுக்கு எனது கணவர், என் அம்மா, சகோதரர்கள் சார்பிலும் என் உறவினர் சார்பிலும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், மனநெகிழ்வான நன்றியினையும் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். நன்றி.

"வாழ்க வளமுடன்"

என்றென்றும் பேத்தி

திருமதி **மயூரதி தங்கவேல்**

(சுமி) பிரான்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அக்கா மற்றும் மனைவியுடன்
தென்னிந்திய கோயில் தரிசனங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அக்கா மற்றும் மனைவியுடன்
தென்னிந்திய கோயில் தரிசனங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**ரிஷிகேஷம் – கங்கை நதிக் கரையில்**
**சிறப்பு யோகவாழ்வு பயிற்சியில்**
**கலந்துகொண்ட காட்சிகள்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாஜ்மஹாலுக்கான ஒட்டக வண்டி







டெல்லியில் செங்கோட்டை, இந்தியா கேட்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆக்ரா தாஜ்மஹாலில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகன் டினேஸ் இன் டென்னீஸ் விளையாடும் காட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்/வின்சன் மகளிர் கல்லூரியில்
## விலங்கு பாகுபாட்டியல் நூல் வெளியீடு - 09.03.1993


திரு. எம். பவளகாந்தன்,
விஞ்ஞானக் கல்விப் பணிப்பாளர்


திருமதி. சாந்தி பவளகாந்தன்,
அதிபர், வின்சன் மகளிர் கல்லூரி

## கொழும்பு தமிழ் சங்கத்தில்
## உயிரியல் நூல் வெளியீடு - 05.11.2010












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கொழும்பு தமிழ் சங்கத்தில்**
**உயிரியல் நூல் வெளியீடு – 05.11.2010**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தங்கராஜா

சேலும் கயலும் திளைக்கும் ஆழிசூழ்
வேலணை வேண்டிய நல்வரமோ!
பாலும் அமுதமும் தேனுமாய்க் கலந்து
கோலம் கொண்டெதையும்
ஏலம் என்றேகும் எங்கள் தங்கனார்
ஞாலம் புகழ்ந்தேத்தும் நல்லாசான்
ஆலம் அகவை அறுபது கண்டு விழுதுகள்
ஆலெனப் பரப்பினார் வாழி! பல்லூழி!

அஞ்சா நெஞ்சன் அடலேறு
ஆறுமுகனார் அருந்தொண்டோ
செஞ்சொலால் உலகாண்ட
சொர்ணம்மா செய்தவமோ - தீயன
அஞ்சும் பெண்ணரசி
அன்னம்மா பெறு தவமோ
அஞ்சுபடை தானடக்கும் ஆளுமையே அண்ணலே
ஆத்திசூடியுனை வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

தந்தையாய் தவம் செய்து தனயர்களை
தரணியிலே முன்னிறுத்தி
சிந்தையால் உயர் மாணவர்களை
சந்ததமும் பயிற்றுவித்து
அந்தமில் ஆனந்தம் அனைவர்க்குமென்றே
ஆசிரியப் பணிக்கு அழகு செய்து
விந்தைகள் பல புரிந்த வித்தகனே! தத்துவனே!
வீரனே எங்கள் தங்கராஜா வாழி! பல்லூழி!

ஆத்திசூடி ஒன்றியம்
வேலணை - கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A star ever glitters – 'Thangarajah Sir'



At the end of a long sunny day, at dusk,
I saw a man with a professorial look at my gate
Before my inquisitive mind travels farther
my childhood friend called out "Thangarajah Sir"
Oh it is a surprise, sheer disbelief and an affectionate reunion.

He is one of the few I wanted to meet during my lifetime
It is the same old 'Sir' - our friendly 'Thangarajah Sir'
threatening Reynolds moustache, strong walk, piercing voice
but something is missing from the mid 80s
where is your rigid look – replaced with tranquility and serenity – why? -

I remember the pleasant old days
just the second science batch at Shams Maha Vidyalaya
A/L teachers- a rarity
Of the few who devoted themselves you were the pioneer, catalyst
You made many assist us.

I remember the pleasant old days
"Sir" was one of us - we shared many things beyond studies
played, travelled, cooked together - spent our times usefully
We were part of your family, shared your happiness and infrequent worries.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is more than a teacher-student relationship!
I remember the pleasant old days
No burden for students
proud and honoured to remember how you worked extra hours for us
how you waived our tuition fees when we needed to attend
You remain in our hearts always

- because 'Sir' now you are preaching spirituality you look more calm
teaching to preaching – a change not overnight
several years of spark that built into a radiance that it is resilient and entrenched
I remember treading softly on Darwin's 'Evolution'
Now I know the reason for this.

This light in your mind
will light many
you have lived for
what you were born
Many more years I wish you dear Sir.

Your loving student – Navaz
Dr. AMM. Navaz
(Bsc Hons; MA, PhD Applied Linguistics-English (UK))
Head, English Language Teaching Unit
South Eastern University of Sri Lanka
Oluvil.

*What we do for ourselves dies with us;*
*what we do for others lives on.*
*When you help someone up a mountain then*
*you also get closer to the top*
***-just ThinkAMinute***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை அறுபதில் ஆறுமுகம் தங்கராஜா

அறுபதில் தடம் பதிக்கும் ஆசானே! தங்கராசாவே
தங்கத்தின் மதிப்பைவிட தரத்திலே உயர் வுன் சேவை
ஆசிரிய சேவைக்கே நல் இலக்கணமாய் நீ வாழ்ந்தாலும
அவ் வழியே பணி புரிய இல்லாளும் இசைந்திட்டாள்.
உயிரியல் விஞ்ஞானத்தை நீ உயிர்ப்புடனே போதித்ததால்
உன்னால் உருவாக்கம் பெற்ற வைத்திய விஞ்ஞானிகள் எத்தனையோ.
உன் வழித் தோன்றலும் நிகரில்லை வைத்தியத்தில்.
அவர் கரம் பிடித்தவளும் சிறப்புற்றால் அவ் வழியே.
அதுவே பறை சாற்றும் உன் சேவை உடனான நல் வாழ்விற்கு.
ஐயா!
மன வளக் கலையின் மகத்துவத்தை உணர்ந்தாய்.
அர்த்தம் உள்ள புது வாழ்வு இது தான் என மலைத்தாய்.
சினம் தவிர்த்தலை ஐயம் தெளிவுர கற்றாய், போதித்தாய்
சினம் தவிர்க்கும் வழி கண்டு பலதையும் சாதித்தாய்,
கவலையை ஒழிக்கும் கலையையும் கற்றாய்.
கவலையை மறந்த மாமனிதனாக வாழ்ந்தும் காட்டினாய்.
பிறந்தது வடக்கே என்றாலும்
உந்தன் சேவை தலை நகரிலும் தனித்துவம் பெற்றது உண்மை தான்.

அகவை அறுபதா?
ஏன் இந்த வஞ்ஞனை?
என்ன இது!
அறுபதை இரட்டிப்பாக்கி உந்தன் சேவை மென்மேலும் தொடர்ந்திட இறை
அருளும் குரு வருளும் துணை நிற்க
இன்புற்று வாழ வாழ்கவளமுடன் வாழ்கவளமுடன் வாழ்கவளமுடன்
என மனமார வாழ்த்துகிறேன்.

இவன்.

**எஸ். எஸ் நாதன்**

அறிவிப்பாளர்,

இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவழியாத கோலங்கள்



அன்பன் ஆறுமுகம் தங்கராஜா.... எனது பல்கலைக்கழக நண்பன்... இற்றைக்கு 37 ஆண்டுகளுக்கு முன், யாழ் பல்கலையில் பரமேஸ்வராவின் முதல் தொகுதியினராக, உயிரியல் பிரிவில் ஒன்றாக இருந்து கூடிக் கும்மாளமிட்டது எல்லாம்.... நினைவழியாத கோலங்களே...!

நாங்கள் 49 பேர்..! ஆண்கள் 11 பேரும், பெண்கள் 38 பேருமாக, பல பிரதேச ஒன்றிணைப்பாக நாங்கள் கற்றோம். அவிழ்த்துப் போட்ட நெல்லிக்காய் மூடை போல் நாங்கள் இன்று சிதறிப் போனோம். நான் நினைக்கிறேன் இன்று ஆண்களில் தங்கராஜா, சிதம்பரநாதன், மகாலிங்கசிவம், வஜீகூ மற்றும் நான் ஆகிய ஐவர் மட்டுமே இலங்கையில் உள்ளோம் என்று. பெண்களில், அன்னம்மா, தர்மினி, சகுந்தலா, சித்திரா ஆகிய சிலர் மட்டும் இங்கு இருப்பதாக நினைக்கின்றேன். ஆம்... நினைவுகள் இனிக்கின்றன. நினைப்பதும், மனதிற்கு தென்புதான்...!!

பல்கலையில், படிக்கும் போது, வருடந்தோறும், ஏற்பாடு செய்யப்படும், சூழலியல் தொடர்பான கலைப் பயணங்களும், வருடாந்த ஒன்று கூடல்களும், களியாட்டங்களும், மறந்து போகக் கூடியனவா..? எம்மோடிணைந்து அந்தக்காலத்தில் பேராசிரியர் கணேசலிங்கம், பேராசிரியர் தெய்வேந்திரராஜா, பேராசிரியர்கள் திரு.திருமதி மகேஸ்வரன், கலாநிதி சித்திரவடிவேலு, மற்றும் விரிவுரையாளர்கள் சச்சிதானந்தா, பத்மினி, சிறி ஆகியோரும் எம்மோடு வயது பதவி வேறுபாடின்றி பழகியதும் இலகுவில் மறந்து போகக் கூடியனவா. மனத்தின் அடியில் கிடந்தாலும் தூசி தட்டிப் புரட்டிப் பார்க்கும் போது மனத்திற்கு, எவ்வளவு இதமாயிருக்கிறது.

நாம் இவரை தங்கன் என்று அழைப்போம். தீவுப்பகுதியில், வேலணையின் குடிமகன். தானும் தன் பாடுமாக அமைதியாகத் திரிவார். பாடமே கண்ணாக இருந்து கற்பார். பல்கலையில் படிக்கும் போதே தனியார் கல்வி நிலையங்களில் பிரபல்யமான விலங்கியல் ஆசானாகத் திகழ்ந்தமை இவரது பாடத்திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். அந்த நேரத்தில், சிவாஜிகணேசனின் எங்கள் தங்கராஜா திரைப்படமும், யாழ்ப்பாணத்தில், சக்கை போடு போட இவரின் பெயரின் பின்னால், பெருங்கூட்டம் கூடியது, வியப்பேதும் இல்லையே!

பல்கலையில், கூடப்படித்த மட்டக்களப்பைச் சேர்ந்த அன்னம்மாவைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிய இவர், அந்தக் காலத்திலேயே வடக்குக் - கிழக்கு இணைப்பைச் செய்முறையில் காட்டியவராவார். இருவருமே உயிரியல் ஆசிரியர்களாக, மட்டக்களப்பில், கலக்கியவர்கள். இவர்கட்கு மூன்றும் ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள், மூத்த பிள்ளை வைத்தியராக உள்ளார். இரண்டாவது பிள்ளை பொறியியளாளராக உள்ளார். கடைக்குட்டி கணக்கியல் விற்பனனும் இலங்கையில் முதல்தர டென்னிஸ் வீரரும் கூட.

நல்லாசிரியனிற்கு, நற்புத்திரர் கிடைப்பாரென்பதில், ஐயமில்லை. ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும் என்பது போல் தலை சிறந்த ஆசானாக, ஆயிரக் கணக்கான மாணவர்க்கு, வழிகாட்டிய புண்ணியம், இவரது பிள்ளைகளில், எழுச்சியிற் தரிசனமாகிறது.

இன்று அறுபது அகவையில், அகம் மகிழ நிற்கும் தங்கன் தனது மூன்று தசாப்த கால ஆசிரிய வாழ்வின் மகத்துவம், பேணும் பேராசானாக, பரிணாமித்து நிற்கின்றார். அந்த அனுபவத்தின் ஆற்றல் தந்த அறிவுதான் இவரது "கொண்டு செல்லல்" என்ற உயிரியல் நூல் விலங்கியல் மற்றும், உயிரியல் பாடங்களிற்கு உதவிப்பரீட்சகராகவும், மேலதிக பிரதம பரீட்ச கராகவும் கடமையாற்றியுள்ள இவரது ஆழமான அறிவு, உயிரியல் மாணவர்க்கு, என்றென்றும், வழிகாட்டி நிற்கும், என்பதில் ஐயமில்லை. அறுபது கடந்தாலும், ஆய்வுகள், ஆக்கங்கள் வருவதற்கு இவரது அறிவு உதவி செய்யும் என்பதிலும் ஐயமில்லை. ஓய்வு காலத்திலும் இவரது வாழ்க்கை சிறப்பாக அமைய வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

**Maryn. Alphones,**
Teacher,
St. John's College,
Jaffna.

*எதிரிகளுக்கு எரிச்சல்*
*வருகிறது என்றால்*
*இலட்சியவாதிகளான*
*நாம்*
*சரியாக இருக்கின்றோம்*
*என்பதற்கான*
*அடையாளம் அது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கட அப்பா...............



அப்பாவுக்கு இன்றுடன் வயது அறுபது
வேலணை தந்த புதல்வனாய், மட்டக்களப்பின் மருமகனாய்
முத்தான மூன்று புதல்வர்களின் அன்புத் தந்தையாய், வழிகாட்டியாய்......

எங்கள் அப்பாவுக்கு இன்றுடன் வயது அறுபது
கல்லடி வீதிகளிலே காலை வேளைகளில் வெள்ளை காற்சட்டை, மேலங்கி
வெள்ளை சப்பாத்துடன் ஒரு "இளைஞன்" முன்னே,
பின்னே மூன்று சிறுவர்கள் புரிந்தும் புரியாத அந்த வயது முதல்
இன்று வரை தந்தையாய், தோழனாய் ஆசிரியராய் தொடர்கிறது
பணி சற்றும் தளர்வின்றி

உடன் பிறப்புகளுக்கு ஒரு "தங்கன்" அன்னம்மாவிற்கு ஒரு தங்கராஜா,
உறவுகளுக்கு ஒரு "அங்கிள்" சக ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் ஒரு
தங்கராஜா சேர்/மாஸ்டர் எத்தனை வாழ்வியல் கதாபாத்திரங்கள்
அத்தனையும் எல்லோர் மனதிலும் என்றும் நிலைத்தவை............

சிற்பியின் கைவண்ணத்திலே சிற்பங்கள் மிளிரும், உங்கள் கை
வண்ணத்தில் இன்று எத்தனையோ சிற்பங்கள் வைத்தியர்களாய்,
ஆசிரியர்களாய், அரச ஊழியர்களாய் ......

டார்வினுக்கு பிறகு புல்லாகி, பூண்டாகி, புழுவாகிய கதையை தெளிவாக
எனக்கு கூறியது நீங்கள் தானே .......... உங்களின் விலங்கியல் கதை
சொல்லும் விதமே எத்தனை விந்தை ..............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் குழந்தைகளின் திறமையறிந்து அவர்களின் துறையை சரியாக தேர்ந்தெடுக்கச் செய்தீர் அன்று நீங்கள் கொண்ட மனவுறுதி, நீங்கள் காட்டிய வழி, இன்று எங்கள் வீட்டில் ஒரு முதல் தர விளையாட்டு வீரன், ஒரு மென்பொருள் பொறியியலாளன், ஒரு வைத்தியன் அட........... எங்கள் வீடும் ஒரு பல்கலைக்கழகமே....

உயிரியல் ஆசானாய் இளைப்பாறினாலும், அந்த உயிரின் மூலத்தை ஆன்மீகத்தோடு தேடும் ஒரு மனவளக்கலை பேராசானாய் இன்னமும் உங்கள் தேடல் சிறகடித்து பறக்கிறது......... காலவோட்டம் தோற்றத்தை வயதாக்குமே தவிர சிந்தனையை அல்ல ............

Any one can be a father

but it take some one special to be a DAD

Thank You for being our strength & Guidance

Always

HAPPY BIRTHDAY APPA.

Your....

Dineshkanthan

Kishanthan

Agarshan, Nilani & Thivagar



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1997 முதல் வெளிநாட்டுப் பயணம்
கிறிஷ்ணன் டென்னீஸ் அகடமியில் பயிற்சி





ITF Team க்கான வெளிநாட்டுப் பயணம்





Under 14 South Asian ITF Team
இல் டினேஸ்காந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மட்டக்களப்பு அரசாங்க அதிபர்,
மாநகர ஆணையாளர் தலைமையில்
2004இல் நிகழ்ந்த பாராட்டு நிகழ்வு









2006 இலிருந்து Tennis Sponsor
Dunlop நிறுவன இயக்குனர்
திரு. மொகமட் உடன் டினேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹர்ஷன கொடமனவுடன் டினேஸ்




லெபனானில் டினேஸ்



லெபனான் வெற்றியைத் தொடர்ந்து நடைபெற்ற பாராட்டு நிகழ்ச்சியில் பெற்றோருடன் டினேஸ்



கிஷாந்தன் டினேஸ் அமெரிக்காவில்



அராலி வெளியில் டினேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**2010 பொதுநலவாய விளையாட்டில்**

**மகேஷ் பூபதி, லியண்ட பயஸ் ஜோடியுடன் டினேஷ், அம்ரேஷ் ஜோடி**














**பஞ்சாப் மாநிலம் சண்டிகார் பிரதேசத்தில் 2005**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வியட்னாமில் டேவிஸ் கப் தொடரில்



அமெரிக்காவில்
டென்னிஸ் கோச்சுடன் டினேஸ்



மியன்மாரில்



பிரான்ஸ் நாட்டின் French Open Tennis Court தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





டேவிஸ் கப் தொடரில் மகன் மற்றும் மருமகளுடன்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை எதிர் லெபனான், பிலிப்பைன்ஸ் டேவிஸ் கப் தொடரில் மகன் டினேஸ்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கராஜா ஆசானின் தங்கச் சேவைக்கு!



"கற்றவர் என்பவர் கண்ணுடையவர் மற்றவர்
முகத்திரெண்டு புண்ணுடையவர்"

எனும் வள்ளுவரின் வரிகள் கூறுவது போல கல்வி கற்றவருக்கே முகத்தில் கண்கள் உண்டு இந்த வகையில் அறிவுக் கண்கள் கொண்ட கற்பெரும் ஆசானே எங்கள் ஆறுமுகம் தங்கராஜா எனும் தங்கக் குணாளன்.

1955 ஆம் ஆண்டு நவம்பர் 05ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆறுமுகம் சொர்ணம்மா தம்பதிக்கு மகனாகப் பிறந்த திரு.தங்கராஜா அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1982ஆம் ஆண்டில் விஞ்ஞானப் பட்டதாரியாகக் கற்றுத் தேறியவர். இலங்கைத் தீவில் அதிக பாகங்களில் கல்விப் பணியாற்றியவரே தங்கராஜா சேர் அவர்கள். கிழக்கின் மட்டக்களப்பு ஆரையம்பதியில் தன்னுடைய இல்லத் துணையை தேர்ந்தெடுத்துக் கொண்டவர். தன்னுடைய துணைவியாகிய பட்டதாரியாகிய அன்னம்மாவையும் கல்விப் பணிக்காக வேரூன்றச் செய்த பெருமை இவருக்குண்டு.

1983 தொடக்கம் 1989 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மருதமுனை மண்ணுக்கும் இப்பிரதேச சுற்றுச் சூழல் பிரதேசங்களுக்கும் விஞ்ஞானத் துறைக்கு இவர் ஆற்றிய பணி மெச்சத்தக்கது. மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரியில் விஞ்ஞானத்துறையை வளர்த்தெடுத்து அனேகமான மாணவர்கள் விஞ்ஞானத் துறைக்கு பல்கலைக்கழகம் நுழைந்தது இவர் காலப் பகுதியிலேயே. அந்த வகையில் 1989 ஆம் ஆண்டில் விலங்கியலை இவரிடம் மட்டுமே கற்ற மாணவன் ஏ.ஜி. முகம்மட் ஜுரைஜ் (Dr.A.G.Mohamed Juraij. MBBS, MD (Psychiatry), Consultant Psychiatrist) சம்ஸ் மத்திய கல்லூரியில் இருந்து முதலாவதாக மருத்துவத் துறைக்கு தெரிவு செய்யப்பட்டார். இன்று அவர் இலங்கையிலே இருக்கின்ற ஒரே ஒரு முஸ்லிம் மன நல மருத்துவ நிபுணர் என்பதில் மருதமுனை மண் பெருமைப்படுவதற்கு தங்கராஜா சேர் அவர்களே காரணமாகத் திகழ்ந்தார்.

விலங்கியல், தாவரவியல் பாடங்கள் தனியாக இருந்த காலத்தில் விலங்கியல் பாடத்தை சிறந்த முறையிலே கற்பித்தது மட்டுமல்லாமல் தாவரவியல் பாடத்தை போதிப்பதற்கு தனது மனைவி அன்னம்மாவையும் வரவழைத்து மருதமுனை மண்ணை வளப்படுத்தச் செய்தவரே தங்கராஜா சேர் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட நான் விஞ்ஞானத்துறையை நாடிச் சென்றபோது என் வளர்ச்சி மீது கொண்ட அக்கறையின் காரணமாக பல்வேறு அறிவுரைகளை வழங்கி என்னையும் பல்கலைக்கழகத்தின் படிகளில் கால் பதிக்கச் செய்து ஒரு கலைப் பட்டதாரியாவதற்கு ஊன்று கோலாய் அமைந்தவரும் தங்கராஜா சேரே என்பதை இந்த வேளையில் ஞாபகப்படுத்திக் கொள்கிறேன்.

விலங்கியல் விஞ்ஞானத்துறையில் வாசிப்புக்குரிய புத்தகங்கள் அரிதாக வெளிவந்த காலப்பகுதியில் "பீடைகள்" (Pests) எனும் நூலை ஆக்கியளித்த பெருமை தங்கராஜா சேர் அவர்களையே சாரும். இந் நூல் அக்காலப் பகுதியில் மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று மாணவர்களின் கல்விக்கு உரம் ஊட்டியதை இவ் வேளையில் குறிப்பிட்டாக வேண்டும்.

இவ்வாறு தனிப்பட்ட முறையில் எனக்கும் எமது மருதமுனை மண்ணுக்கும் இப்பிரதேச அயல் கிராமங்களுக்கும், நாட்டுக்கும் தங்கராசா சேர் அவர்கள் ஆற்றிய சேவைகள் பெறுமதியானது, அளவிட முடியாதவை எண்ணிலடங்காதவை.

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாய் வளரும்" என்ற முது மொழிக்கேற்ப தங்கராஜா சேர் அவர்களின் மூன்று புத்திரர்களும் வெவ்வேறு துறைகளில் இன்று பிரகாசித்துக் கொண்டிருப்பது அவரும் அவர் மனைவியும் ஆற்றிய கல்விப் பணிக்கு கிடைத்த பெறுபேறுகளே.

இவ்வாறு குறையாத சேவையில் கல்வியின் மறுமலர்ச்சிக்கு எமது மண்ணுக்கும் பிரதேசத்திற்கும் நாட்டிற்கும் உரம் சேர்த்த உன்னத ஆசானை வாழ்த்தும் "தங்கம் 60" மணிவிழா மலருக்காக என் அணிகலன்களாக இந்த வார்த்தைப் பூக்கள் உரித்தாகட்டும்.

வாழ்க ஆசான் என்றும் நலமுடன்.

என்றும் மறவா மாணவன்
பசீர் அப்துல் கையூம், BA (Cey)
கட்டுப்பாட்டாளர், பிறை FM
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



இன்று அகவை அறுபதில் மணிவிழாக் காணும் ஆசான் திரு.ஆறுமுகம் தங்கராஜா அவசர்களின் சேவையையொட்டி தவழ இருக்கும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அ∴திலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று

என்ற வள்ளுவப் பெருந்தகை வாக்குக்கமைய திரு.ஆ. தங்கராஜா அவர்கள் விலங்கியல் ஆசிரியராக கல்வித்துறையில் மாணவர்களுக்கு அளப்பரிய சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவருடைய மகத்தான சேவையினால் பல்வேறு கல்லூரிகள், தனியார் கல்வி நிறுவனங்கள் பல்வேறு தளங்களில் கால்பதித்து பெருமை படுகின்றன. தாம் சேவையாற்றிய காலம் முதல் கல்வி நிறுவனங்களுக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்து உடல் உழைப்பால் உயர்வடைந்த உத்தமராக விளங்குகின்றார். தமது வாழ்வியலிலே பல தடைக் கற்களையும் படிக்கற்களாக மாற்றி பல வெற்றிப் பாதைகளை சீரிய வழியில் சென்றடைந்தவர். இன்று பல இடங்களிலும் பிரகாசிக்கின்ற கல்வியாளர்கள் இவரது அன்பையும், ஆதரவையும் பெற்ற சமூக தலைவர்களாக விளங்குகின்றனர். எமது யாழ் மண்ணிலே இவரது சேவையும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவையே. அந்த வரிசையில் 1979 தொடக்கம் 1981 வரையான காலப்பகுதியிலே நியூ மாஸ்டர் கல்வி நிறுவனத்தில் புகழ் பூத்த ஆசிரியராக தம்மை அலங்கரித்தவர். தொடர்ந்து அகல்விரி நோக்கிலே 1981 தொடக்கம் 1983 வரையிலான காலப் பகுதியில் யாழ்ப்பாண சயன்ஸ் அக்கடமி எனும் நிறுவனம் உட்பட யாழ் மாவட்டத்தின் பல தனியார் கல்வி நிறுவனத்தில் சிறந்த ஆசானாக தன்னை இனம் காட்டியவர். மேலும் 1983 தொடக்கம் 1989 வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்விச் சேவையை விஸ்தரித்து அர்ப்பணிப்போடு சேவை புரிந்தவர். இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழுகின்ற விஞ்ஞான துறைப் பட்டதாரிகள் பெருமளவில் இவரிடம் கல்வி கற்ற பெருமைக்குரியவர்கள். தொடர்ந்து 1989 - 1991 வரையிலான காலப்பகுதியில் மீண்டும் யாழ்ப்பாணத்தில் யாழ் மத்திய கல்லூரியில் கல்வி கற்பித்த காலத்தில் சயன்ஸ் ஹோல் என அனைவராலும் அழைக்கப்படும் பிரபல்யமான தனியார் கல்வி நிறுவனத்திலே பிரபல விலங்கியல் ஆசானாக முழு மன நிறைவோடு மகிழ்ச்சியாக செயற்பட்ட நல்லாசான் ஆவர். இத்தகைய உயர்ந்த மனப்பாங்கும், ஆளுமைத் திறனும் கொண்ட தீர்க்கதரிசியான சிறந்த வழிகாட்டியுமான ஆசானுக்கு மணி விழா சபையினரால் எடுக்கப்படுகின்ற மணி விழா மலராகிய "தங்கம் 60"க்கு வாழ்த்திக் கூறுவதில் அளவிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியடைகின்றேன். மணிவிழா நாயகன் தொடர்ந்தும் தமது சேவையை அலங்கரிக்க வேண்டும் எனவும் அதற்கேற்ப சகல சௌபாக்கியங்களும் பெற்று நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் மகிழ்ச்சியோடு வாழ எல்லாம் வல்ல வேழ முகத்து விநாயகன் பாதம் வேண்டி இறையருள் பாலிக்க வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

நன்றி

திரு.**அருட்செல்வம்**

நியூ சயன்ஸ் ஹோல்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்

வலியோடு போராடினால்
தான் ஒரு பெண்
தாயாக முடியும்.
இருளோடு போராடினால்
தான் புழு
வண்ணாத்துப்
பூச்சியாக முடியும்
மண்ணோடு போராடினால்
தான் விதை
மரமாக முடியும்
வாழ்க்கையோடு போராடினால்
தான் நீ வரலாறு
படைக்க முடியும்

மனைவியை மறக்க வைக்கும்
தாயின் பாசத்தையும் ...
தாயை நினைக்க வைக்கும்
மனைவியின் அன்பையும்
பெற்றவன் அதிஷ்டசாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் நண்பன் தங்கராஜாவின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.



தங்கராஜாவுக்கும் எனக்கும் உள்ள உறவு 1980களில் ஆரம்பமானது. அக்காலப் பகுதியில் எனது நிறுவனத்தில் உயர்தர வகுப்பிற்கான விலங்கியல் ஆசிரியராக அவர் இணைந்து கொண்டார். முழு நேர ஊழியராக அவர் கடமையாற்றினார். இதனால் என்னுடன் உள்ள உறவு இறுக்கமானது. அதுவே குடும்ப உறவாகவும் ஆனது. தங்கராஜாவின் குடும்பத்தில் உள்ள நன்மை தீமைகளில் உரிமையுடன் கலந்து கொண்டேன். பழகுவதற்கு இனியவர் அவர் இருபாலையில் ஒரு காணி வாங்கி வீடு கட்டி எனது அருகில் குடியமர்ந்தார்.

கற்பித்தலில் சாதனை படைத்தவர். அவரின் காலத்தில் கல்வி நிறுவனம் நன்றாக என்று வளர்ந்தது. மாணவர் எண்ணிக்கையும் அதிகரித்தது. சிறந்த பெறுபேறுகள் மாணவர்கள் பெற்றுக் கொண்டனர். விஞ்ஞான பிரிவின் பீடாதிபதி என நாம் அவரை வர்ணிப்பதுண்டு.

அவர் திருமணப் பந்தத்தில் இணைவதற்காக மட்டக்களப்பு செல்ல நேரிட்டதால் எமது நிறுவன சேவையும் தடைப்பட்டது. எங்கிருந்தாலும் அவர் பெயரும் புகழும் உயர்ந்தோங்க மட்டக்களப்பில் சேவையாற்றினார்.

மூன்று புதல்வர்களில் ஒருவர் மருத்துவராகவும், இன்னொருவர் பொறியியலாளர் ஆகவும், மற்றையர் உலகளாவிய ரீதியில் பெயர் பெற்ற விளையாட்டு வீரராகவும் விளங்குகின்றனர். கல்வி உலகிற்கு இவர் செய்த சேவையின் பயனே இவர் பிள்ளைகள் இவ்வாறு உயர்ந்த ரீதியில் காணப்படுகின்றனர்.

ஓய்வு காலத்தில் மனைவி பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ இறைவனை வேண்டி மணிவிழா சிறக்க வாழ்த்துக்களும் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

T.VARATHARAJAH B.Ed.
SP.TRD.(MATHS) S.L.T.S.I
DIRECTOR
THE EXPRESS INSTITUTE
IRUPALAI, KOPAY




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருவடி சரணம்

அகவை அறுபது மணிவிழாக் காணும் நாள்
ஆசான் மகுடம் சூடும் நாள்
அகம் அறிவால் நிறை மாணவர்கள்
அன்பைத் காட்சிப் படுத்தும் நாள்
இகத்தின் கடமைகள் நிறைவெய்தி
பரவழிச் சாதனை புரியும் நாள்
நலம் பெற்றுலகில் நீ வாழ
நானுரைத்தேன் என் வாழ்த்து "வாழ்க வளமுடன்"!

அன்பு ததும்பும் தந்தையாய்
அறிவில் செறிந்த ஆசானாய்
நின் கடமைகள் அனைத்துமே
நிறைவாய்ப் பெற்ற வேளையிது
இன்பச் சுமை இதயத்தில்
இன்றுனக்கு மணிவிழா!
நன்நாளாம் இந்நாளில் நீளாயுள் நீ பெறவே
நானுரைத்தேன் என் வாழ்த்து வாழ்க வளமுடன் நிறைவாக வாழ்ந்திடவே

மாணவச் செல்வங்கள் பற்பலரை
நயம் பட உருவாக்கிய ஆசான் நீ
ஆணவம் சற்றும் உனக்கில்லை
அடக்கம் சார்ந்த நிறை குணத்தோய்
வேண்டும் தொண்டு என நினைத்து
பார்கடன் அடைக்கப் புறப்பட்டாய்
நிறை செல்வம் நீ பெற்று நேர்த்தியாய் வாழ்ந்திடவே
நானுரைத்தேன் என் வாழ்த்து வாழ்க வளமுடன்!

வேதாத்ரி மகரிஷிக்கு
வேட்கையது உலக அமைதி
போதனைகள் செய்தவர்
புருவத்திடையே தொட்டார்
சாதனைகள் செய்திட்டார்
சாவைத் தள்ளிட வகை செய்தார்
வேதமதைக் கற்றதனால் மெய்ஞ்ஞானம் ஓங்கிவர
நானுரைத்தேன் என் வாழ்த்து வாழ்க வளமுடன் !

அருள்நிதி **எஸ். சந்திரா**
மனவளக்கலை பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தேவதை...

# அப்பாவும் அம்மாவும் எனக்கு ரொம்ப ஸ்பெஷல்



## டெனிஸ் வீரர் தினேஷ்

### கடவுள் தந்த பரிசு!
(அன்னம்மா தங்கராஜ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென் பீட்டர்ஸ் கல்லூரியில்
Colours Night பரிசளிப்பு நிகழ்வு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








மகன் திவாகரின் பல்கலைக்கழக நினைவுகளும்
பட்டமளிப்பு விழா நிகழ்வும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகன் திவாகரின் பட்டமளிப்பு விழா
நிகழ்வில் குடும்பத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மகன் கிஷாந்தனின் வெளிநாட்டுப் பயணங்கள்



துபாயில்




லண்டனில் விம்பிள்டன்
டென்னிஸ் கோட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அமெரிக்காவில்



பிறேசிலில்

மகன் கிஷாந்தனின் வெளிநாட்டுப் பயணங்கள்



லண்டனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





லண்டனில்

## மகன் கிஷாந்தனின் வெளிநாட்டுப் பயணங்கள்


சைனாவில்


பிரான்ஸ் பரீஸ் நகரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அத்தை மாமாவுடன் குடும்பத்தினர்


மகனுடன் அக்கா குடும்பம்


மகனின் திருமணத்தில் அக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிற்குரிய மாணவியொருவரின் வாழ்த்துரை



அகவை அறுபதில் மணிவிழாக் காணும் எமது ஆசிரியர் ஆ. தங்கராஜா அவர்களுக்கான மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மட்/வின்சன் மகளிர் உயர்தர பாடசாலையில் விலங்கியல் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தி லிருந்து தங்கராஜா ஆசிரியரை நான் அறிவேன். எம்மை சமூகத்தில் ஒரு சிறந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஆசிரியராக மட்டுமின்றி வழிகாட்டியாகவும் அவர் விளங்கினார் என்று கூறினால் அது மிகையாகாது.

மாணவர்களிடையே ஒளிந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதில் ஆசிரியர் தங்கராஜாவுக்கு இணையானவர்கள் யாருமில்லை!

இம் மண்ணில் நாம் நற்பிரஜைகளாக வாழ ஏணியாக இருந்து எம்மை வழிநடத்திய ஆசிரியர் தங்கராஜா சிறந்த தேக ஆரோக்கியத்தோடு இன்னும் பல வருடங்கள் வளமுடன் வாழ்ந்து வழி காட்ட வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

நன்றி

Dr. ம. **மதனா**, M.B.B.S
போதனா வைத்தியசாலை,
மட்டக்களப்பு.

சந்தோசம் இருக்கும் இடத்தில்
வாழ நினைப்பதை விட
நீ இருக்கும் இடத்தில்
சந்தோசத்தை உண்டாக்கு
உன் வாழ்க்கை
நிறைவாய் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்காவிடமிருந்து ...

## "தங்கன்" என நான் அன்போடு அழைக்கும் எங்கள் குடும்ப ஒருங்கிணைப்பாளர் ஆ.தங்கராஜா பற்றிய எனது பார்வை.



நாங்கள் அளவில் பெரிய குடும்பம் ஆனாலும் நடுத்தர வர்க்கத்தை சார்ந்தவர்கள். அம்மாஅப்பாவின் அரவணைப்பில் வாழ்ந்து காலத்தின் மாற்றத்தால் இளமையிலேயே தந்தையை இழந்து தாய் மாமா உறவுகள் ச.கணேசலிங்கம், ச.சிதம்பரநாதன் ஆகியோரின் அரவணைப்பில் வளர்ந்து பின்னர் குடும்பத்தின் மூத்த சகோதரர்களால் வழி நடத்தப்பட்டு வந்தோம்.

தங்கன், நான், விஜயன் என எங்களில் மூவர் தான் இளமைக் காலத்தில் குடும்பத்தில் வறுமையின் சுவையை நீண்ட காலத்திற்கு அனுபோகித்து அனுபவம் பெற்றவர்கள். இதில் விஜயன் இளமையிலேயே காலமாகிவிட்டான். வறுமையின் சுவையை அனுபவித்ததன் காரணமோ தெரியவில்லை எனக்கும் தங்கனுக்கும் இன்று வரை சகோதர உறவின் நெருக்கம் வார்த்தையைத் தாண்டி நிற்கின்றது. இடையில் சிறிது காலம் சில காரணத்தால் தொலைந்து போய் இருந்த அந்த நெருக்கம் காரணமாக நான் பல துன்பங்களை அனுபவிக்கக் காரணமாகிய போதும் மீண்டும் அந்த உறவின் நெருக்கம் உயிர் பெற்றதால் நான் அனுபவித்த, அனுபவிக்கும் துன்பங்களைக் கடந்து பிற்காலத்தில் நானும் வாழ்வதற்கு தங்கனும் அவனது குடும்பமும் எனக்கு மிக ஆறுதல் தந்த வண்ணம் இருப்பது ஒருவகையில் எனக்கு அக மகிழ்வாக இருக்கின்றது.

ஆரம்பத்தில் தங்கன் மிகவும் மென்மையான சுபாவம் கொண்டவன் தற்துணிவு சற்று குறைந்த ஒருவர் ஆக இருந்த போதிலும் அவனது பல்கலைக்கழகப் பிரவேசம் அவனை பல வழிகளிலும் ஆளுமை மிக்கவனாக மாற்றியது.

ஆசிரியராகப் பல்வேறு இடங்களிலும் பணியாற்றி மாணவர்கள் சமுதாயத்தின் மத்தியில் மிகச் சிறந்த ஆசிரியன் என பெயர் பெற்று சிறப்பாகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளான். ஆளுமை விருத்தியின் காரணமாகப் பெற்ற தற்துணிவு தன் விருப்பப்படி தனது குடும்பத்தை அமைக்கவும் அதனைக் கட்டிக் காத்து தடைகளையெல்லாம் கடந்து வழி நடத்தவும் மிகவும் உறுதுணையாக இருந்ததால் தனது குடும்பத்தை சிறப்பாக வழிநடத்தி பெற்ற மக்கட் செல்வங்களை மற்றவர்கள் போற்றும் வகையில் சிறந்த ஆளுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவர்களாகவும் நற்பண்புள்ளவர்கள் ஆகவும் ஆக்கியதில் பெரு வெற்றியீட்டியுள்ளான். எங்கள் குடும்பத்திற்கு மிகப் பெரியளவில் நன்மதிப்பினை தங்கனின் பிள்ளைகள் உருவாக்கியுள்ளார்கள்.

உறவுமுறையில் அவனின் மூன்று பிள்ளைகளும் மருமக்கள் ஆனாலும் நான் அவர்களை எனது பிள்ளைகள் போலவும் அவர்களும் என்னை ஒரு தாய் ஸ்தானத்திலும் பார்ப்பது எனக்கு அளவு கடந்த ஒரு அக மகிழ்வையும் நிறைவையும் ஏற்படுத்தியுள்ளது. தற்போது எங்கள் குடும்பத்தில் அனைவரையும் ஒருங்கிணைத்து செயற்படுவதில் பெருமுயற்சி செய்து வெற்றியும் கண்டுள்ளான். இன்று அறுபது ஆண்டு நிறைவு பெற்று அகவை அறுபதில் மணிவிழாக் காணும் தங்கன் என நான் செல்லமாக அழைக்கும் எனது தம்பியும் அவனது குடும்பமும் எல்லா வளங்களும் பெற்று சிறப்பாக வாழ எல்லாம் வல்ல இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

தங்கனின் கடந்த கால வாழ்க்கை பல ஏற்ற இறக்கங்களுடன் பயணித்த போதிலும் இன்று அவனில் ஏற்பட்டுள்ள ஆன்மீக ரீதியான மாற்றம் என்னையே மிகவும் ஆச்சரியத்திற்கு உட்படுத்தியுள்ளது.

அவன் கூறும் ஒரு வார்த்தை அனுபவம் தான் ஒரு மனிதனை முழுமையடையச் செய்யும் என்று அது அவனது வாழ்க்கையில் முற்றிலும் உண்மையென்பதை அவனது தற்கால நிலையும் கடவுள் தொடர்பில் அவன் பெற்றுள்ள தெளிவு பக்தி நிலை கடந்து ஞான நிலை நோக்கிய அவனது பயணம் வாழ்வின் முழுமைக்கு அவனை இட்டுச் செல்வதைப் பார்க்கும் போது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. இன்று ஆன்மீகத்துறையில் தானும் மேம்பட்டு சமுதாயமும் மேம்படுவதற்கு ஒரு வழிகாட்டியாகவும் செயற்படுவதற்கு ஏற்ப தனது வாழ்க்கைப் பாதையை காலத்திற்கேற்ப மாற்றியமைத்திருப்பது மிகச்சிறப்பு வாய்ந்த ஒன்றாகவே நான் பார்க்கின்றேன்

அந்த வகையில் அவனது ஆன்மீகப் பணியும் சமூகத் தொண்டும் சிறப்புற எனது வாழ்த்தினைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

இவ்வண்ணம்
பாசமிகு சகோதரி
திருமதி. **பரமேஸ்வரி சிவபாலன்**
(ரதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் பணிவும் கொண்ட ஒரு மாணவனின் உள்ளத்திலிருந்து ...

மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவன் ஆகிய நான் அக் கல்லூரியின் விஞ்ஞான பிரிவின் Zoology ஆசானாகக் கடமையாற்றிய என் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய ஆசான் தங்கராசா சேர் அவர்களின் சேவையை பாராட்டி வெளியிடப்படும் “தங்கம் 60” நூலுக்கு என் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கிராமப் புறப்பாடசாலைகளில் விஞ்ஞானப் பிரிவிற்கு விஞ்ஞானப் பட்டதாரிகளின் சேவையை பெறுவதென்பது மிகவும் சிரமமாக இருந்த காலகட்டத்தில் மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரியின் உயிரியல் விஞ்ஞானத்துறையில் விலங்கியல் ஆசானாக கடமையேற்று அக் கல்லூரியின் விஞ்ஞானத்துறையின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி எமது மருதமுனைக்கிராமம் சுற்றுச் சூழலில் உள்ள அயற் கிராமங்களினதும் விஞ்ஞானத்துறையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவர் தங்கராசா சேர் என்பது ஒரு வரலாற்று உண்மையாகும்.

எமது கல்லூரி மாணவர்கள் விலங்கியல் பாடத்தை பாடசாலையிலேயே மட்டும் கற்க வேண்டும் என்றும் வெளி Tuition வகுப்புகளிற்கு செல்லாமல் தன்னிடமே கற்க வேண்டும் என்பதை ஒரு சவாலாக எடுத்து கற்பித்தும் சாதித்தும் காட்டியவர் தங்கராசா சேர் அவர்கள். இவருடைய இந்த முயற்சி ஏனைய ஆசிரியர்களிற்கும் ஒரு முன்னுதாரணமாக அமைந்ததை இவ் வேளை ஞாபகப்படுத்திக் கொள்கிறேன்.

தங்கராசா சேர் அவர்களின் கற்பித்தல் திறனும் அதற்கான அவருடைய வழிகாட்டல்களும் தனித்துவமானதும், விசேடமானதுமாகும். ஒரு சிறு குறிப்புத் துண்டு கூட கைகளில் இல்லாமல் எந்த ஒரு விடயத்தையும் தெளிவாக விளங்கப்படுத்தி நேர்த்தியான குறிப்புக்களை தொகுத்து மாணவர்களுக்கு வழங்குவதோடு விஞ்ஞான ஆய்வுகூட பரிசோதனைகள், உயிரியல் பரிசோதனைகள் என்பன கிராமப் புறப்பாடசாலைகளுக்கு ஒரு சவாலாக இருந்த காலத்தில் அவற்றை தனது தனித் திறமையின் மூலம் செய்துகாட்டி கற்றலில் எமது ஆர்வத்தை கூட்டியவர். ஒரு தவளையை உயிரியல் பரிசோதனைக்கு உட்படுத்தி அதன் உடல் அமைப்பியல், உடற்றொழிலியல் என்பவற்றை முதன் முதலில் விளங்கப்படுத்தியது இன்னும் எனக்கு ஞாபகமிருக்கிறது.

ஒரு ஆசானாக மட்டுமன்றி ஒரு சிறந்த வழிகாட்டியாக ஒரு ஒழுக்க சீலராக, ஒரு நூலாசிரியராக (Author), ஒரு விளையாட்டு ஆர்வலராக (Sports Personality), மொத்தத்தில் ஒரு நல்லுள்ளம் கொண்ட மனிதனாக மட்டுமல்லாமல் ஒரு நண்பனாகக் கூட பழகியவர் தங்கராசா சேர் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய அன்பு மனைவி அன்னம்மா (Botany Teacher) ஆசிரியையும் இணைத்துக் கொண்டு பல சிரமங்களுக்கு மத்தியில் வெகு நீண்ட தூரம் பயணம் செய்து மருதமுனை ஸம்சுல் இல்ம் மத்திய கல்லூரிக்கு இவர் வழங்கிய சேவையின் பிரதிபலனை இப்போதும் எமது மண் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. எத்தனையோ வைத்தியர்கள் பட்டதாரிகள் மற்றும் பல கல்விமான்கள் உருவாகுவதற்கு காரணமாக இருந்தவர்களில் தங்கராசா சேர் முதன்மையானவர் என்பதில் நான் பெருமிதமடைகிறேன்.

தங்கராசா சேர் அவர்களின் வழிகாட்டலில் கலவிகற்ற நான் ஸம்ஸ் மத்திய கல்லூரியில் இருந்து (1989ஆம் ஆண்டு) மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது மாணவன் என்பதில் பெருமிதமடைகின்றேன். தொடர்ந்து வைத்திய கலாநிதியாக, உளநலப் பிரிவில் சித்தியெய்து (MD) (Psychiatry) தற்போது ஒரு உளநல விசேட வைத்திய நிபுணராக (Consultant Psychiatrist) கடமையாற்றிக் கொண்டிருக்கின்றேன் என்றால் இதற்கு தங்கராசா ஆசிரியர் தம்பதிகளின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது.

தங்கராசா சேர் அவர்கள் என்றும் என் உள்ளத்தில் இருக்கின்றார். அவர் இன்னும் பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரைப் பாராட்டும் "தங்கம் 60" சிறப்பு நிகழ்வு வெற்றிபெற மனமாற வாழ்த்துகிறேன்.

என்றென்றும் நண்றியுணர்வோடு

Dr.A.G.**Mohamed Juraij**
MBBS, MD (Psychiatry)
Consultant Psychiatrist
Psychological Medical Unit
Base Hospital
Kalmunai.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையின் அடையாளம் ஆறுமுகம் தங்கராஜா



காலத்துக்குக் காலம், பிரதேசத்திற்குப் பிரதேசம் கல்விப் புலத்தில் சிலரின் பெயர்கள் பிரபல்யம் அடைந்து வந்திருக்கின்றன. அத்தகைய பிரபலங்கள் பொதுக் கல்விப் புலத்திலும், விசேட கல்விப் புலத்திலும் குறிப்பிட்டுக் கூறக் கூடியவர்களாகக் காணப்படுகின்றார்கள் அத்த கையவர்கள் வரிசையில் உயிரியல் பாடத் துறையில் அதிலும் குறிப்பாக விலங்கியல் பாடத்தில் கடந்த மூன்று தசாப்தங்களாகப் பிரபல்யமடைந்த பெயருக்குரியவர் தான் திரு ஆறுமுகம் தங்கராஜா என்றால் அதில் மிகையில்லை. ஒரு குறித்த பிரதேசம் என்றில்லாமல் யாழ்ப்பாணம், கல்முனை, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய அனைத்து பிரதேசங்களிலும் கல்விச் சேவையை வழங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு விஞ்ஞானப்பட்டதாரியாகவும், பட்டமேற் கல்வி டிப்ளோமா தாரியாகவும் மதிக்கப்படுகின்ற நல்லாசிரியர் திரு ஆ. தங்கராஜா ஆவார்.

2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தன்னுடைய அறுபதாவது அகவையை காணுகின்ற திரு ஆ. தங்கராஜா அவர்கள் என்னுடைய பல்கலைக்கழக நண்பர் மட்டுமல்ல ஆசிரிய சேவையில் சமகாலத்தில் பணிபுரிந்து வருகின்ற நல்ல உறவுமாக இருக்கின்றார். 1978 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த நட்பும், உறவும் இன்று வரை தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. இது நிலைத்திருக்க அருளும், ஆசியும் வழங்கி வழி காட்டும் குருவருளுக்கும் திருவருளுக்கும் தலை வணங்கு கின்றேன். நானும், திரு ஆ. தங்கராஜாவும் உயிரியல் விஞ்ஞான பாட நெறியில் அனுமதி பெற்றோம். நாட்டின் பல பிரதேசங்களையும் சேர்ந்த மாணவர்கள் எங்கள் வகுப்பில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். ஆரம்ப நாட்களில் எனக்கெல்லாம் ஒரு சிலர் தான் தெரிந்த முகங்கள், பலர் தெரியாத முகங்கள் ஆனால் திரு தங்கராஜா அவர்களுக்கோ பலர் தெரிந்த முகங்கள் ஒரு சிலர் தான் தெரியாத முகங்கள் அந்தளவிற்கு யாழ்ப்பாணத்திலும் குறிப்பாகப் பல்கலைக் கழகத்தில் நன்கு அறிமுகமான பிரபல்யமானவராகக் காணப்பட்டார். எங்களுக்கு பகிடிவதை நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் நானெல்லாம் சிரேஸ்ட மாணவர்களின் கண்களில் படாமல் ஒளிந்து கொள்வேன் ஆனால் திரு தங்கராஜா அவர்கள் சிரேஸ்ட மாணவர்களுடன் தோளில் கைபோட்டுக் கதைத்துக்கொண்டிருப்பார். விரிவுரையாளர்களுடனும் தயக்கமின்றிக் கதைக்கின்றவராகவும் விளங்கினார் நாங்கள் எல்லோரும் “தங்கன்” என்று செல்லமாக அழைப்போம்.

திரு ஆ. தங்கராஜா அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட முன்பே யாழ்ப்பாணத்தில் பிரத்தியேக கல்வி நிலையங்களில் க.பொ.த உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர விஞ்ஞான மாணவர்களுக்கு விலங்கியல் பாடத்தைக் கற்பித்தமையால் அப்பாடத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவராகவும் அப்பாடத்தை வினைத்திறனுடன் கற்பிப்பவராகவும் காணப்பட்டமையால் விலங்கியல் பாடத்தில் சிறப்புப் பட்டதாரியாகப் பயில்வதற்கும் தெரிவு செய்யப்பட்டுக் கற்றலைத் தொடர்ந்தார். பல்கலைக்கழக காலம் சந்தோஷமாகவும், சுவாரஸ்யமாகவும் இருப்பதற்கு எதிர்ப்பால் துணையொன்று அவசியம் என்ற யதார்த்தத்திற்கு நண்பர் “தங்கனும்” விதி விலக்கல்ல. மட்டக்களப்பு ஆரையம் பதியைச் சேர்ந்த செல்வி கணபதிப்பிள்ளை அன்னம்மா எங்களுடைய பாடநெறியில் பயின்ற மாணவியாவார். இவர் தாவரவியல் பாடத்தில் தேர்ச்சி பெற்றவர் செய்முறைப் பதிவுகளையெல்லாம் (Practical Record) மிகவும் நேர்த்தியாகவும் புனிதமாகவும் பதிவு செய்வார் படங்களையெல்லாம் அளவிடைக்கேற்ப வரைவார். எங்களுடைய செய்முறைப் பதிவுப் புத்தகத்தில் இடையிடையே “Rewrite” அல்லது “Rerecord” ஆகிய சொற்கள் எழுதப்படும். ஆனால் செல்வி அன்னம்மாவின் செய்முறைப் பதிவுப் புத்தகத்தில் அச்சொற்களைக் காண முடியாது அவரும் தாவரவியல் சிறப்புப் பட்டதாரியாகப் பயில்வதற்கு அனுமதி கிடைத்தது.

திரு தங்கராஜாவிற்கு அன்னம்மா மீது ஏற்பட்ட அன்பு, காதலாகி, கணவன் மனைவியாகக் கொண்டு சேர்த்தது. இடையிலே ஏற்பட்ட சோதனைகள், வேதனைகள், இன்பங்கள், துன்பங்கள் சொல்லிலடங்காதவைகள். அத்தனை யையும் தாண்டி திரு. A. தங்கராஜா திருமதி. A. தங்கராஜா தம்பதிகளாயினர். திரு. தங்கராஜா எங்கள் பாட நெறியிலுள்ளவர்களுள் சிறந்த பாடகர். அந்தக் கால கட்டத்தில் பிரபல்யமான “ஒரு தலை ராகம்” என்னும் திரைப்படத்தில் வரும் “நான் ஒரு ராசியில்லா ராசா” என்று தொடங்கும் பாடல் இவருடைய அபிமானப் பாடல் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். களப் பயணங்கள், சுற்றுலாக்கள் என்பவைகளில் இவருடைய பாடலை விரும்பிக் கேட்கும் மாணவிகள் பலர் இருந்தனர்.

நானும் திரு. தங்கராஜாவும் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெற்று மருதமுனை என்னும் கிராமத்திலுள்ள இரு வேறு பாடசாலைகளில் கடமையேற்றுக் கற்பித்தோம். நான் கமு/மருதமுனை அல்மனார் மகா வித்தியாலயத்தில் இரசாயனவியல் பாடத்தைக் கற்பித்த காலத்தில் திரு ஆ. தங்கராஜா அவர்கள் கமு/மருதமுனை சமஸ்சுல் இல்ம் மகா வித்தியாலயத்தில் விலங்கியல் பாடத்தைக் கற்பித்துக் கொண்டி ருந்தார்கள். அதே காலப்பகுதியில் கல்முனையில் பிரத்தியேக கல்வி நிலையங்களிலும் கற்பித்து க.பொ.த உயர் தர மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்த ஒரு ஆசிரியராக இன்றும் நினைத்துக் கதைக்கப்படுகின்றார். அக்காலப்பகுதியில் கல்முனைப் பிரதேசத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேக எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். குறிப்பாக மருத்துவ பீடத்திற்குத் தெரிவு செய்யப் பட்டார்கள்.

90 இற்குப் பின்னர் நாங்கள் இருவரும் மட்டக்களப்பு நகரப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றோம் திரு ஆ. தங்கராஜா மட்/வின்சன் மகளிர் உயர்தர பாடசாலையிலும், நான் மட்/சிவாநந்த வித்தியாலயத்திலும் கடமையாற்றினோம். மட்டக்களப்பிலும் திரு ஆ. தங்கராஜா அவர்களின் கல்விப்பணி தொடர்ந்தது வின்சன் உயர்தர பாடசாலையில் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த ஆசிரியர் குழாத்தினுள் இவர் முதன்மையானவராகவும், பாடசாலை அதிபருடன் ஒத்துழைத்த ஆசிரியராகவும் திகழ்ந்தார். திரு ஆ. தங்கராஜா அவர்கள் தான் கொண்ட கொள்கையில் மிகவும் பற்றுறுதியும், பிழையாயின் பிழையெனச் சுட்டிக்காட்டும் மனப்பாங்கும் உடையவர். அதனால் பல சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. அவற்றையெல்லாம் சாதுரியமாக வெற்றி கண்டு இன்று நிறைவாக வாழுகின்றார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

என்பதற்கிணங்க கல்விப்புலத்தில் அவர் ஆற்றிய பணிகள், அவரின் பெயரை உச்சரிக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இன்று நல்ல நிலையில் உயர்ந்து நிற்கின்றார்கள். அவரின் மூன்று மகன்மார்களும்

"மகன் தந்தைக் காற்றும் உதவி. இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல்"

என்ற பொய்யா மொழிக்கொப்ப தாய் தந்தையரின் வழியில் முன்னிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தங்கராஜா தம்பதியினர் ஆன்மீக நெறியில் இல்லறத்தை நல்லறமாகப் போற்றி வாழ்வது மட்டுமல்லாமல் இன்பத்திலும் துன்பத்திலும் சோதனையிலும் வேதனையிலும் இணைபிரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதன் அறுவடையைத் தான் இன்று தாராளமாகப் பெற்றுத் தரணியிலே தன்னிறைவோடும், மனநிறைவோடும், தளர்விலா உறுதியோடும் வையகத்தில் வளமுடன் வாழ்கின்றார்கள். அகவை 60 காணும் திரு ஆ. தங்கராஜா இன்னும் பல ஆண்டுகள் வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

க. மகாலிங்கசிவம்
மட்/சிவாநந்த வித்தியாலயம் தேசிய பாடசாலை
கல்லடி உப்போடை, மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகனின் திருமண நிகழ்வு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பி குடும்பம்
மகனின் திருமணத்தில்



மாமா அத்தையுடன்
மகனின் திருமணத்தில்



புகுந்த ஊர் உறவுகளுடன் மகனின் திருமணத்தில்



மனைவியின் தங்கை குடும்பம்
மகனின் திருமணத்தில்



அண்ணர் குடும்பம்
மகனின் திருமணத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரன் அகர்ஷனுடன் குடும்பத்தவர்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









ஜெனிவாவில் ஐநா மன்றத்தின் முன்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆழியார் அறிவுத் திருக்கோவில்,
பொள்ளாச்சி









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக சமுதாய சேவா சங்கத் தலைவருடன்





மனைவி நல வேட்பு நாள் நிகழ்வுகளில்







இலங்கை மனவளக்கலை மன்ற தலைவர் மதுரைவீரனுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாண மனவளக்கலை மன்றத்திற்கான அடிக்கல்நாட்டுவிழா



பேராசிரியர் இந்திரா அம்மையார்
பயிற்சி வகுப்பில்

சர்வதேச யோகாதின சிறப்பு நிகழ்வு
வசந்தம் டீ.வியில் சிறப்புரை







மனவளக் கலை பயிற்சி வழங்கும் நிகழ்வுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சுவிஸ் நாட்டில்**
**லூசன் நகரில்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாணவியின் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை வெளிப்படுத்தும் ஒரு கவிதை

தங்கராஜா.......... தங்கமான எம் வகுப்பாசிரியர்

தங்கமான எம் ஆசான் தங்கராஜா..
ஆகவையறுபதில் .................. !
திடமான சிந்தனையிலும் தித்திப்பான பேச்சிலும்.....
இளைஞனாய் இன்னும் நீங்கள் !
வாழ்த்துரைக்கவும்மை வரிகளுக்குகேது பஞ்சம்?
வாஞ்சையுடன் வாழ்த்துகின்றோம்!

விந்தைமிகு விலங்கியலை விரும்பியே கற்றிட
வழிகாட்டி நின்ற விருப்பமிகு நல்லாசான் ஸம்ஸ் கலாசாலை
கிழக்கின் கல்விச் சூரியனாய்க் கதிர் பரப்பி,
சரித்திரம் படைக்கவென்றே
சாதித்து காட்டிய சகலகலாவல்லவன்!

உயிர் முச்சோடுநீர் உண்மையாய் உழைத்ததில் ,
உயிரியற் பிரிவில் உயர்வுற்றோர் ஏராளம்!
அவர்தம் உயிரிற் கலந்த உத்தம ஆசான் நீர்!
இன, மத பேதமில்லா இயல்பான கற்பித்தலால்
இங்கே என்றும் மறக்க முடியா இனிய ஆசானே!
வையகத்தில் வாழவேண்டும் பல்லாண்டு,
என்றும் இன்பமுடனே!

அன்னம்மாவிற்கென்றே அழகாய் அமைந்திட்ட ஆம்படையான்!
அதனால் மூழ்கியெடுத்த மூத்தான முன்று முத்துக்கள்!
திவாகர், கிஷாந்தன், டினேஸ்காந்தன்!
தாய் தகப்பன் பேர் சொல்லிடப் பிறந்த தங்கமான தனயன்கள்!

தங்கமான தங்கராஜாவும்
அமைதியான அன்னம்மாவும்
விலங்கியலும் தாவரவியலுமாயிணைந்து உயிரியலாய் உருவெடுத்ததில்,
உயர்ந்தோம் நாமெல்லாம்
உண்மையாசான்களின் உளங்கள் குளிர்ந்திடவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தங்கம் தங்கராஜாவை எப்படி மறப்போம்?
ஏணிப்படியாயிருந்தவர் ஏற்றங்கள் பல பெற்றார்,
தன்னலங்கருதா தங்கமான தம் பணியதுவால்!

இன்னுமெழுதென்று இதயம் சொல்லுது!
இடம் போதாதென்று விரல்கள் தயங்குது!
எம் உயர்தர வகுப்பாசிரியர் உயர்திரு தங்கராஜா தலை நிமிர்ந்தே தரணியிலே
இன்று போலென்றும் வாழந்திட
விருப்புடனே வாழ்த்தி நிற்கின்றோம்!
வாழ்க பல்லாண்டு வளமுடனே!

திருமதி **இர்பானா– றம்ஸ்ஸான்**
ஆசிரியை
கமு/ அல் மனார் மத்திய கல்லூரி
மருதமுனை - கல்முனை.

*A Bird Sitting on a tree is*
*never afraid of the branch*
*breaking, because her*
*trust is not on the branch*
*but on its own wings.*
*Always believe*
*in your Self*

*Shakespeare once said,*
*" I cried when I had no shoes,*
*But I stop crying*
*when I show a man*
*without legs"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும் மதிப்பிற்குரிய ஆ. தங்கராஜா ஆசிரியர் அவர்களின் வாழ்வியல் பதிவுகளும் வாழ்த்துக்களும்.



இறைவனின் ஆசிகளைப் பெற்று நல்வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் ஓர் நல்ல ஆசானுக்கு முதலில் எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

மனித வாழ்வு ஒரு புறத்தே பல விசித்திரமான வடிவங்களைக் கொண்டிருந்தாலும் மறுபுறத்தில் அது தன்னையொரு நம்பிக்கையின் அடையாளமாகவே வளர்த்துக் கொள்கிறது. பிறப்பு விதியென்றால் வாழ்வும் உரிமை சார்ந்த பொது விதியாகவே கொள்ளப்படல் வேண்டும்.

மணிவிழாக் காணும் ஆசிரியர் ஆ. தங்கராஜாவுக்கு அகவை அறுபது. பக்கத்திலிருந்து உற்றுப் பார்த்தாலும் நம்பவில்லை. வயதைத் தவிர எந்த மாற்றமும் தெரியவில்லை. உடல், உள்ளம், உறுதி, சிந்தனை, செயல், தீவிரம், பேச்சு, எழுத்து, பழக்கம், பண்பாடு எதுவுமே மாறவில்லை. இவரிடம் மயிலின் மென்மையுமுண்டு, மலையின் உறுதியுமுண்டு.

தங்கராஜா அவர்கள் ஆசிரியர் சேவையினை தனது தொழிலாகத் தேர்ந்தெடுத்து கல்விப் பணியினை ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் பெரும் காலப்பகுதி மட்டக்களப்பிலேயே சேவையாற்றினார். ஆசிரியர் எல்லோருக்கும் கற்பிக்கும் புலமை ஒரு வரப்பிரசாதம் என்பார்கள். ஆனால் இறைவன் இவருக்கு இவ் வரத்தை மேலாகவே கொடுத்திருந்தார். இப்புலமை இலங்கை முழுவதும் தமிழ் பிரதேசங்களில் பரவி பயன்பெற்ற மாணவர்களோ பலர்.

இவருடன் எனக்கு ஒரு குருவாக, நண்பனாக, பாடத்துறையில் வழிகாட்டியாக, சகோதரனாக பழக வாய்ப்பு கிடைத்ததையிட்டு பெருமைப்படுகிறேன், சந்தோஷமடைகின்றேன். இக்காலங்களில் சில மனப்பதிவுகள் மிக ஆழமாக என்னுள் பதிந்து கிடக்கின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கு கூறலாமென நினைக்கின்றேன்.

விலங்கியல் பாடத்தில் கற்பிப்பதற்கு கடினமான பகுதியான முளையவியல் என்னும் பாடப்பரப்பை கையிலே எந்த ஒரு ஆவணமுமில்லாமல் முழு விடயங்களையும் நினைவிலே நிறுத்தி எந்தத் தடங்கள், தவறுகள் இல்லாமல் தெளிவாக கற்பித்தல் என்பதில் இவருக்கு எவரும் மிகையாகமாட்டார்கள். இங்கு அவரின் கற்பித்தல் பாணி, புலமையைக் கண்டு வியப்புற்றேன். இந்த வகையில் இவர் மட்டக்களப்பு வின்சற் மகளிர் பாடசாலையில் இப்பாடத்துறையில் பல சாதனைகளை ஆற்றியதும் கௌரவிக்கப்பட்டதும், குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த.உயர்தர மதிப்பீட்டு பணியிலும் இவருடன் நான் பல வருடங்கள் சேவையாற்ற வாய்ப்பு கிடைத்திருந்தது. மாணவர் சார்பாக பல வினாக்களை எழுப்பி, அதற்கான மாற்றுவிடைகளை மதிப்பீட்டு வழிகாட்டியில் சேர்த்துக் கொள்வதில் மிகவும் கவனமாக சிந்தித்து செயலாற்றுவார். இக்காலகட்டங்களில் அவரிடம் மதிப்பீடு தொடர்பான பல அனுபவங்களை நான் மட்டுமல்ல ஓர் ஆசிரியர் குழாமே பெற்றது என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது.

இவ்வாறே பிற்காலத்தில் உயிரியல் பாடத்துறையில் வினாப்பத்திரம் தயாரிக்கும் பணியில் சேவையாற்றும்போது மாணவனின் சிந்தனைகள் தூண்டும் விதமான ஆழ்ந்த தெளிவான கருத்துடைய வினாக்களை தயாரித்து வழங்குவதில் மிகவும் திறமை வாய்ந்தவர். அத்துடன் சிலகாலம் வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் வளவாளராக செயற்பட்டு ஆசிரியர்களிற்கு பல செயலமர்வுகளையும், செய்முறைச் செயலமர்வுகளையும் நடாத்தி இளம் ஆசிரியர் தலைமுறைகளை ஊக்குவித்து வழிகாட்டியது என்னால் கண்டு கொண்ட அவரின் ஆக்கபூர்வமான செயற்பாடு ஆகும்.

தனது வாழ்க்கை காலத்தில் மாணவர்களிற்கு கல்வியை பயனுள்ளவாறு மிகவும் கருமத்துடன் அளித்தமைக்கு இறைவன் இவருக்கு சந்தோஷமான வாழ்க்கையும், திறமையான, பண்புள்ள துணைவியாரையும், மூன்று புத்திரர்களையும் கொடுத்திருக்கிறார்.

இவர்களுக்கு ஓர் நல்ல தந்தையாக, அவர்களின் கல்வி, பழக்கவழக்கங்கள், உணவு, தேகஆரோக்கியம் போன்றவற்றிற்கு பொருத்தமான முக்கியத்துவம் வழங்கியது நான் அறிந்ததே. இங்கு ஒரு ஞாபகமாக மூன்று பையன்களும் தந்தையும் காலையில் நேரத்துடன் உடற்பயிற்சிக்காக எனது வீட்டு தெருவால் ஓடுவது இன்னமும் என் கண்முன்னே காட்சியாக இருக்கிறது.

இவரது நற்பணியிற்கு கிடைத்த பேறாக இவரின் பிள்ளைகளில் மூத்தமகன் வைத்தியராகவும், இரண்டாவது மகன் பொறியியலாளராகவும், மூன்றாவது மகன் இலங்கையில் புகழ்பெற்ற டென்னிஸ் வீரராகவும் திகழ்கின்றனர். கல்விப்பணியில் சிறந்து விளங்கிய இவர் தற்போது ஆன்மீகத்தில் முழுதாக தன்னை அர்பணித்து பல சேவைகளை ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது. பாராட்டத்தக்கது.

என் மிகநெருங்கிய ஆ. தங்கராஜா ஆசிரியர் அவர்களிற்கு மணிவிழா கொண்டாடுவது மிகுந்த மனநிறைவைத் தருகின்றது. இவரது பணி மேலும் வியாபித்து நல்ல தேகாரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை என் குடும்பம் சார்பாக பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

என்றும் நட்புடனும் பணிவுடனும்

**ச. மணிவண்ணன்**
பகுதித்தலைவர், (உயர்தர விஞ்ஞானப்பிரிவு)
மட்/ மத்தி/ காத்தான்குடி மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துரை

## மணிவிழா நாயகன் ஆறுமுகம் தங்கராஜா



அகவை அறுபதில் கால்பதித்து மணிவிழா காணும் சிறிய தந்தை ஆறுமுகம் தங்கராஜா அவர்கள் எங்களது குடும்ப உறவுகளால் Uncle என அழைக்கப்படுபவர். அவர் எங்களுக்கு நல்ல வழிகாட்டியாக அன்றும் இருந்தார் இன்றும் இருக்கின்றார். அவரிடம் நற்பண்புகள் பல உள்ளன. எந்த விடயமாக இருந்தாலும் தனது சொந்த அபிப்பிராயத்தை முகத்துக்கு நேரே கூறிவிடுவார். அவரது நேர்மை காரணமாக அதிகாரிகளினால் பந்தாடப்பட்ட சம்பவங்களும் உள்ளன.

மேலும், ஒரு குடும்பத்தைப் பொறுத்தவரையில் அக்குடும்பம் சமூகத்தால் சீர்தூக்கி பார்க்கப்படுவதற்கு தாய்,தந்தையரின் வழிகாட்டலும் முயற்சியும் இன்றியமையாதது.அந்த வகையில் அவரது குடும்பத்தில் பல்வேறுபட்ட துன்பங்கள் துயரங்களுக்கு மத்தியில் தான்பெற்ற மூன்று செல்வங்களில் மூத்த மகனை வைத்திய துறையிலும் ,இரண்டாவது மகனை பொறியியல் துறையிலும்,மூன்றாவது மகனை கணக்கியல் துறையில் தேர்ச்சி பெறச் செய்ததோடு, ஊர் போற்ற,தேசம் போற்றும் அளவுக்கு டென்னிஸ் விளையாட்டில் வளர்த்தெடுத்த பெருமை அவரையே சாரும்.

மட்/ வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலையில் கல்வி கற்பித்த காலத்தில் அவருடன் கற்பித்து தற்பொழுது மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக கடமையாற்றும் திரு.வெ.தவராஜா அவர்கள் தங்கராஜா சேர் ஒரு தந்தைக்கே உரிய இலக்கணமாக Idial Father ஆக வாழ்ந்து கொண்டிருப்பவர் என அடிக்கடி கூறுவார்.

விஞ்ஞான ஆசிரயராக யாழ்பாணம்,கல்முனை,மட்டக்களப்பு,கொழும்பு போன்ற இடங்களில் உயர்தர மாணவர்களுக்கு பாடசாலைகளிலும், பிரத்தியேகமாகவும் கல்வி புகட்டி பல கல்விமான்களை உருவாக்கிய வர்களில் அவருக்கும் பெரும்பங்குண்டு.

தனது 55வது வயதில் ஆசிரியசேவையின் மூலம் விஞ்ஞானம் போதிப்பதிலிருந்து ஓய்வுபெற்ற கையோடு,ஓய்ந்திருக்காமல் மெஞ்ஞானம் போதிப்பதற்காக மனவளக்கலை மன்ற ஸ்தாபகர் வேதாத்திரி மகரிஷி அவர்களின் பால் ஈர்ப்பு ஏற்பட்டு அம்மன்றத்தினூடாக பல ஆன்மீகம் சம்மந்தமான பயிற்சிகளைப் பயின்று தேர்சிசிபெற்று,இன்று மெஞ்ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிக்கும் பேராசிரியராக ஆன்மீகத் தொண்டாற்றிவருகின்றார். அவர் மாத்திரமல்ல அவரது துணைவியாரும் விஞ்ஞான ஆசிரியராக இருந்து தனது 55வது வயதினில் ஓய்வுபெற்று கணவருடன் இணைந்து ஆன்மீகத் தொண்டாற்றி வருகின்றார்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கிணங்க கொழும்பு, யாழ்பாணம், மட்டக்களப்பு என பல இடங்களுக்கும் சென்று மனவளக்கலை மன்றத்தினூடாக பயிற்சிகளை வழங்கிவருகின்றார்.

மேலும், மணிவிழா நாயகனின் ஆன்மீகப் பணி தொடர நோய் நொடியின்றி, சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழவேண்டுமென எல்லாம்வல்ல கண்ணபிரானை பிரார்த்தித்து விடைபெறுகின்றேன்.

வாழ்க வையகம்,வாழ்க வையகம்,வாழ்க வையகம்,

வாழ்க வழமுடன்.

பெறாமகன்

**கதிராமத்தம்பி லோகேஸ்வரன்**

போதனா வைதியசாலை

மட்டக்களப்பு.

ஒரு நிர்வாண மனம் மட்டுமே
கடவுளைப் பார்க்க முடியும்
ஒரு நிர்வாண இதயம் மட்டுமே
கடவுளை உணர முடியும்
உங்களுடைய வேதாந்திகளோடு
சேர்ந்து கொண்டு உங்கள்
மதங்களையும் அவற்றின்
சித்தாந்தங்களையும்
எவ்வளவு தான் தேடினாலும்
உங்களால் அவரை
கண்டுபிடிக்க முடியாது
உங்களால் எங்குமே அவரை
காண முடியாது - ஆனால்
எல்லா இடங்களிலும் அவர்
இருக்கிறார்.

- ஓசோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுமுறையில் "தங்கத்தான்" எனும் ஓய்வுநிலை ஆசிரியர் ஆ.தங்கஜாவின் பன்முக ஆளுமை ஓர் நோக்கு



சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் யாழ்ப்பாணத்தின் அருகே அழகான கடல் சூழப்பெற்ற தீவகத்தின் முத்தாக விளங்கும் வேலணை மண்ணில் நாவலடிப்புலத்தில் ஆறுமுகம் சொர்ணம்மா தம்பதிகளின் ஐந்தாவது மகனாக தங்கராஜா எனும் நாமம் கொண்ட தங்கன் 05.11.1955ம் திகதி பிறந்தார்.

இவர் அரம்ப கல்வியை வேலணை ஆத்திசூடி வித்தியாலயத்தில் கற்று வந்தார். சிறுபராயத்தில் தந்தையை இழந்து தவித்தார். தாயின் அரவணைப்பிலும், தமையனின் வழிகாட்டலிலும் அவர் தனது கல்வியைத் தொடர்ந்தார். யாழ் வேலணை மத்திய கல்லூரியிலும் தனது கல்வியைத் தொடர்ந்து உயர் கல்வியை யாழ் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரியிலும் பயின்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பிரிவிற்கு தெரிவாகினார்.

இவரது விடாமுயற்சியும் அயராத உழைப்பின் பயனாக விலங்கியல் துறையில் பட்டம் பெற்றார். தான் பெற்ற கல்வியை மற்றவர்களுக்கும் வழங்க வேண்டும் என்ற சிந்தனையில் யாழ்ப்பாணத்தில் உயர்தர மாணவர்களுக்கு விலங்கியல் பாடத்தை கற்பித்தார். இவரது கற்பித்தலின் திறமையும் நுட்பமும் உயர்தர மாணவர்களின் மனங்களில் இடம்பிடித்தார். தனக்கென ஒரு இடத்தைப் பெற்றார். விலங்கியல் பாடம் என்றால் தங்கராஜா என்று கூறும் அளவிற்கு உயர்ந்தார் புகழ் பெற்ற விலங்கியல் ஆசிரியராக யாழ்மாவட்டத்தில் திகழ்ந்தார்.

இவரது வழிகாட்டலும் கற்பித்தலிலும் வெற்றி பெற்றவர்கள் இன்றும் இலங்கை நாட்டிலும் வேறு நாடுகளிலும் சேவை செய்கிறார்கள். இவரிடம் கற்றவர்கள் இன்றும் இவரின் கற்பித்தலைப் புகழ்ந்து கூறுவதை நாம் கேட்கக் கூடியதாக உள்ளது. அந்த வகையில் நானும் இவரது வழிகாட்டலில் தான் முன்னேறினேன் என்பதை இந்த வேளையில் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கல்வியில் முன்னேற்றம் கண்டதுடன் நிற்காமல் தக்க தருணத்தில் இல்லற வாழ்வில் தன்னை இணைத்துக் கொண்டார். மீன் பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பில் உள்ள ஆரையம்பதி எனும் ஊரில் மாவிலங்கத்துறைக் கிராமத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தெய்வானை தம்பதிகளின் 5வது புதல்வியான அன்னம்மாவை வாழ்க்கைத் துணையாகப் பெற்றார் இவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தாவரவியல் பாடத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் இருவரும் ஆசிரியர்களாக கடமையாற்றியதுடன் தமது குடும்பத்தையும் இனிதே வழிப்படுத்தி வந்தார்கள்.

கல்யாணப் பரிசாக இவர்கள் முத்துப் போன்ற மூன்று பிள்ளைகளைப் பெற்றார்கள். அப்பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையுடன் தனது பிள்ளைகளை இலக்கு நோக்கி வழிப்படுத்தினார். தந்தையாக இருந்து தனது கடமைகளையும் சரியாகச் செய்து சிறந்த தந்தையாகவும் திகழ்ந்தார். பிள்ளைகளுக்கு அவர்களின் காலத்திற்கேற்ப தந்தையாகவும், இனிய தோழனாகவும், வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் சிறப்பாக பங்காற்றியவர். இவரின் கடும் முயற்சியினாலும் இறைவனின் ஆசியினாலும் பிள்ளைகள் இவரது இலக்கு நோக்கிப் பயணித்தார்கள் வெற்றியும் கண்டார்கள்.

இவர் தனது மூத்த மகனை இந்த நாட்டு மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற உன்னத நோக்கில் கற்பித்து சிறந்த வைத்தியராகத் திகழ வழி சமைத்தார். அவர் எண்ணம் நிறைவேறியது. இன்று அவர் மகன் Dr. திவாகர் திருகோணமலையிலுள்ள கந்தளாய் எனும் இடத்தில் மக்களுக்கு சேவையாற்றுகிறார்.

இரண்டாவது மகனை பொறியியல் துறையில் வெற்றி பெற வைத்து சர்வதேச கணனி வலையமைப்பில் மென்பொருள் பொறியாளராக திகழ வைத்தார். இன்று தனியார் நிறுவனம் ஒன்றில் உயர் பதவியில் அங்கம் வகிக்கின்றார்.

மூன்றாவது மகனை கல்வியுடன் இணைத்து விளையாட்டில் வழிப்படுத்தி இலங்கையின் சிறந்த டென்னிஸ் வீரராக திகழ அரும்பாடுபட்டார். இன்று அகில இலங்கையின் முதல்தர விளையாட்டு வீரராக திகழ்கின்றார்.

இவ்வாறு தனது ஆசிரியப் பணியில் இருந்து ஏணியாகவும் தோணியாகவும், கல்விக் கடலில் நீந்தும் மாணவர்களை ஏற்றியும் கரை சேர்த்தும் வெற்றி கண்ட நல் ஆசான் தனது பிள்ளைகளையும் சிறந்த ஆசானாகவும், தந்தையாகவும் இருந்து வழிகாட்டி வெற்றி கண்டார். அவருக்கும் அவரது சேவைக்கும் நாம் என்றும் தலை வணங்குகின்றோம்.

இவர் தனது ஆசிரியப் பணியை முதலில் தனியார் கல்வி நிலையங்களில் ஆரம்பித்தார். பின்னர் அரச சேவையில் இணைந்து கல்முனை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆசிரியத் தொழிலின் ஆசிரியர், அசிரிய வளவாளர், பரீட்சைத் திணைக்களத்தில் உயரியல் பாடத்தின் சாதாரண பரீட்சகர், மேலதிக பிரதம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சகர் எனும் பல்வேறு பரிமாணங்களிலும் பணியாற்றி 30 வருடங்கள் சேவை செய்து 05.11.2010இல் ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்றதோடு நிற்காமல் தனது பணியை தொடர்ந்தார். மக்களுக்கு சேவை செய்வதையே தனது உன்னத நோக்காக் கொண்டார் அதன் பொருட்டு "மணவளக்கலை" எனும் துறையில் தன்னை இணைத்துக் கொண்டார். பல பயிற்சிகள் பெற்றார். இன்று மனவளக்கலையின் பயிற்றுவிப்பாளராக திகழ்கின்றார்.

இவரின் விடாமுயற்சியும் தளராத மன உறுதியும் தான் இவரை இந்தளவு உயரத்திற்கு உயர்த்தியுள்ளது.

இன்று போல் என்றும் இவர் சேவை தொடர வேண்டும். இவரது வழிகாட்டல் என்றும் எமக்கு கிடைக்க வேண்டும். அதற்கு நீண்ட ஆயுளையும், நோயற்ற வாழ்வையும் இறைவன் இவருக்க வழங்க வேண்டும் என இறைவனிடம் வேண்டி விடைபெறுகின்றேன்.

நன்றி

"வாழ்க வளமுடன்"

உறவு முறையில் மைத்துனியும்
மாணவியுமான
திருமதி **விமலேஸ்வரி – விஜயநாதன்**
ஆசிரியை

கொலை செய்யாதே
பொய்யைச் சொல்லாதே
பொறாமை அடையாதே
புறங் கூறாதே
புலால் உண்ணாதே
பேராசை கொள்ளாதே
சூதை விரும்பாதே
கள்ளைக் குடிக்காதே
காமம் கொள்ளாதே
களவை நினையாதே

- திருக்குறளின் 10 கட்டளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J.S. வசந்தன் அவர்களின் மனதிருந்து ...



தங்கராஜா sir ஐ முதன் முதலில் சந்தித்தது B/St.Michael's College Tennis Court இல் அவருடைய 3 பிள்ளைகளும் என்னிடமே Tennis விளையாட வந்தனர். சிறிது கால பயிற்சியிலேயே சிறந்த Tennis வீரர்களாக உருவாகினார்கள்.

Sir உடைய மூன்றாவது புதல்வன் Dineskanthan முதல் முதலில் Tennis பயிற்சிக்காக வந்தார். Date? அன்று 6.15 மணியளவில் நாம் விளையாடிக் கொண்டு இருந்தோம். சுமார் எல்லாமாக 20 மாணவர்கள் மட்டில் இருந்திருப்பார்கள். திடீரென வெடிச் சத்தங்கள் எல்லா இடமும் செல்கள் வந்து வெடித்தன. அருகாமையில் Army Camp அங்கும் வெடித்தன. Tennis Court அருகாமையிலும் வெடித்தது. மூன்று மாணவர்கள் சிறிது காயங்களுக்கு உள்ளாகினர். இது மறக்க முடியாத சம்பவம். அன்று தங்கராஜா Sir எம்முடன் இருந்து பிள்ளைகளைக் காப்பாற்றினார்.

தங்கராஜா Sir Tennis மைதானத்துக்கென அளப்பெரிய சேவை செய்தார். Tennis Court பராமரிப்பு, மாணவர்களை Matchக்காக கொழும்புக்கு கூட்டிச் செல்லுதல் எனப் பல சேவைகள் செய்தார். அத்துடன் B/St.Michael's Tennis club செயலாளராகவும் பல வருடங்கள் சேவை புரிந்தார்.

தங்கராஜா sir உடைய மூன்று பிள்ளைகளும் தேசிய மட்ட Tennis போட்டிகளில் பல சாதனைகள் புரிந்தனர். இதனால் மட்/புனித மிக்கேல் கல்லூரிக்கு பல புகழ் கிடைக்கப் பெற்றது.

Dineskanthan Tennis போட்டிகளில் தேசிய, சர்வதேச மட்ட போட்டிகளில் பங்கு பற்றி புனித மிக்கேல் கல்லூரிக்கு பல பெருமைகள் சேர்த்தார். அத்துடன் இலங்கையின் Number one Tennis வீரராகவும் திகழ்ந்தார். இது மட்டக்களப்பு மாவட்டத்துக்கே ஒரு பெருமைக்குரிய விடயமாகும்.

தங்கராஜா sir என்றாலே அவருடைய பெயருக்கு ஏற்ப தங்கமான மனிதன், பிறருக்கு உதவி புரிதல், பிறரை மதித்தல், தன்னலம் பாராது சேவை புரிதல் கௌரவமான மனிதன் எனவும் கூறத் தயங்க முடியாது. அத்துடன் தன்னிடமுள்ள நற்பண்புகளுக்கு ஏற்பவே தனது மூன்று புதல்வர்களையும் வளர்த்துள்ளார், என்பதுடன் அவர்களை நாட்டில் மிகப் பெரிய தலை சிறந்த தலைவர்களாகவும் ஆக்கியுள்ளார், என்ற பெருமையும் அவருக்கே. உரியதே, "பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்." என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுமொழிக்கு ஏற்ப தனது பிள்ளைகளில் கொண்ட நலனைப் போல் பிற பிள்ளைகளின் நலனிலும் மேலான அக்கறை கொண்டதன் பலன் தன் பிள்ளைகளுக்குக் கிடைத்துள்ளது என்பது எனது சான்றாகும். எனவே தனது வாழ்க்கையை தனது பிள்ளைகள், ஏனையோருக்காக அர்ப்பணித்த ஓர் அற்புத மனிதர் தங்கராஜா sir என்றும் பல பெருமைகளைப் பெற்று நல் ஆசியுடன் நீடூழி வாழ எனது நல் ஆசியுடன் கூடிய வாழ்த்துக்கள்

**J.S.வசந்தன்**
ஆசிரியர்
Tennis coach
B.G.Forbes Lane,
Colombo – 10

*One day I met money and said :*
*you are just a piece of paper !!!*
*Money Smiled and said :*
*Ofcourse,*
*I'm a piece of paper,*
*but I haven't seen a dustbin*
*in my life*
**That's Attitude**

*If you born poor*
*it's not your mistake,*
*But if you die poor*
*it's your mistake*
*– Bill Gates*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கராஜா ஆசானுக்கு தங்கமான வாழ்த்து

ஆறுவரும் பூமியிலே நெல் விளையும் செழித்து
ஆதவனின் வருகையிலே இருள் போகும் ஒழித்து
ஆறுமுகம் தங்கராஜா அறியாமை உயிர்த்து
அரும் பணியாற்றினாரே கல்வியிலே விழித்து

யாழ்ப்பாண மண்ணிலே ஆறுமுகம் சொர்ணம்மா
யாவருக்கும் செல்வமென தங்கமிதைப் பெற்றனரே
காழ்ப்புணர்ச்சி கடும் கோபம் கடுகளவும் இல்லாத
கண்ணியத்தின் இருப்பிடமே தங்கராஜா எனும் மகனே

விஞ்ஞானத்துறையிலே வியத்தகு பட்டதாரி
அஞ்ஞானம் நீக்குகின்ற விலங்கியல் விரிவுரையே
மெஞ்ஞானம் கொண்டராசா மேன்மையுள்ள ஆசானே
தன்ஞானம் கொண்டு பிறர் தகைமையினை வளர்த்தனரே

யாரையும் அஞ்சிதினம் பின்னோக்கிச் செல்லார்
ஊரையும் உறவையும் உயர்வெனக் கொண்டார்
ஆரையம் பதியிலே அன்பு மனைவி கண்டார்
பேரையும் புகழையும் அதிகமாய் வென்றார்

வித்துக்கள் விதைத்து தினம் விருச்சங்களை வளர்த்தீர்
முத்துக்களை மூன்றென்று ஆண் மகவாய்ப் பெற்றீர்
சொத்துக்களாய் ஆனதினால் சோதி தர உழைத்தீர்
அத்தனையும் நற்பேறே அரும் பணியாய் தளைத்தீர்

எஞ்ஜினியர், டாக்டர், எகவுண்டன் என்று மூன்று
ஏற்றம் பெற்ற முத்துக்கள் ஆண்டவனின் பரிசுகள்
வஞ்சமில்லா தங்கராஜா கல்விப்பணிக்காய்
வல்லவன் இறைவன் வழங்கிய வாரிசுகள்.

மருதமுனை மண்ணுக்கு மறுமலர்ச்சி தந்தார்
மகத்தான சேவையினை கல்வியிலே செய்தார்
ஒருவருமே நினைக்கவில்லை விஞ்ஞானத்துறையை
ஓயாது கற்பித்து மருத்துவர்கள் தந்தார்

சிங்கமென கல்வியிலே வீறுநடைபோட்டார்
சிறப்பான கல்வியிலே பெறுபேறு கேட்டார்
தங்கராசா தங்கமான ஆசானே அவரை
எங்களது உள்ளத்தால் என்றென்றும் மதிப்போம்.

என்றும் மறவா மாணவன்
பசீர் அப்துல் கையூம், BA (Cey)
கட்டுப்பாட்டாளர், பிறை FM
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் நாட்டின் சுற்றுலாத் தலங்களில்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் நாட்டில் உறவுகளுடன்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பர் குடும்பத்தின் வாழ்த்துச் செய்தி
# வேலணை மண்ணின் மைந்தன்



எமது நீண்ட கால குடும்ப நண்பரும், ஓய்வு பெற்ற மிகச் சிறந்த உயிரியல் ஆசிரியரும், ஆசிரிய வளவாளரும் தற்போதைய மனவளக்கலை பேராசிரியருமான திரு. தங்கராஜா அவர்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகளை அவரது மணிவிழா மலரில் எழுதுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமிதம் அடைகிறோம்.

பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்த நாள் முதல் இன்று வரை எமது நெருங்கிய குடும்ப நண்பராகத் திகழும் தங்கராஜா தம்பதியினரிடம் எந்த ஒரு சிக்கலான விடயத்தைப் பற்றியும் அது பாடம் கற்பித்தல் சம்பந்தமாக குடும்ப விடயமாக, ஆன்மீகம் தொடர்பாக இருந்தாலும் மனம் விட்டுப் பேசி தகுந்த அறிவுரையைப் பலமுறைகளில் பெற்றுள்ளோம்.

மிகச் சிறந்த பண்பும் இரக்க குணமும் கொண்ட திரு. தங்கராஜா விடமிருந்து ஒரவரது நட்பை எப்படி மதிப்பது என்பதற்கான வரைவிலக் கணத்தை கற்றுக் கொள்ளவேண்டும். எமது 38 வருட கால பழக்கத்தில் யாருடைய மனத்தையும் அவர் புண்படுத்தியதாக நாங்கள் கேள்விப்பட்டதே யில்லை.

இவர் எங்களுடன் படித்த, படிப்பித்த காலங்களில் இவரது உயிரியல் அறிவின் ஆழத்தைக் கண்டு நாங்கள் பிரமித்தது உண்டு. இவர் வெளியிட்ட உயிரியல் புத்தகமும் சக ஆசிரியர்களது கருத்துக்களும் இதற்கு சான்று பகிர்கின்றது.

தற்போது இவரது வேதாத்திரியம் தொடர்பான அறிவும் ஆழமும், அதற்கான தேடலும் அதைப் பற்றிய கற்ப்பித்தலும் பிரமிக்க வைத்துள்ளது. மேலும் மூன்று நல்ல பழக்கவழக்கமுள்ள, கல்விஅறிவுள்ள மக்கட் செல்வத்தைப் பெற்றுள்ளமை இவரது நற்குணத்துக்கும், தயாள சிந்தனைக்குமான கடவுளது ஆசீர்வாதம் ஆகும்.

ஒரு திறமையான ஆன்மீக பேராசிரியராக தற்போதும் தொடர்ந்து கொண்டிருக்கும் இவரது பொது நலப்பணி இன்னும் பல ஆண்டுகள் தொடர அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியின் அருளை வேண்டி இச்சிறு மடலை முடித்துக் கொள்கின்றோம்.

"வாழ்க வளமுடன்"

திரு. திருமதி. சேகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிமானத்திற்குரிய ஒரு மாணவியின் மனதிருந்து வாழ்த்து

தரணிமேல் நாம் கண்ட தங்கங்களில் - நீங்கள்
தரமேதும் குறையாத தங்கமையா
தந்தையாக எமக்களித்த மந்திரங்கள் - எம்முள்
தருவித்தன பலநூறு தைரியங்கள்
தனமேதும் வாங்காமல் கற்பித்தீர் - இன்று உங்கள்
தனயர்கள் வளர்ந்திட்டார் தனைப் போற்ற
தரும தானங்கள் செய்வதைவிட - நீர் செய்த
தருமக்கல்வி உலகில் நிலைக்குமைய்யா
தனக்கென்று வாழ்வோர் மத்தியிலே - இத்
தரணிக்காய் வாழ்ந்திடும் தங்கமையா
தருவித்தீர் பரநூறு தனயர்களை - இத்
தாயகம் மண்ணிற்கு வலுச்சேர்க்க
தட்டாது நாம் சென்றோம் உம் வழியில் - இன்று
தரம் பெற்றோம் இம்மண்ணில் வைத்தியராய்
தரவேண்டும் இன்னும் பல தத்துவங்கள் - மேலும்
தளராது முன்னேற இப்பிறவி தனில்
தந்திடு வரமொன்று எம் இறைவா
என்றும் தங்கமையா வாழ்ந்திட இத்தரணி தனில்

நன்றி

பழைய மாணவி 1997 Batch,

**பிருந்தா கோமகராஜா**

வைத்தியர் மட் போதனா வைத்தியசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகவை அறுபதில் மணிவிழாக் காணும்**
**உயிரியல் ஆசானும் மனவளக்கலை பேராசிரியருமான**

# " ஆறுமுகம் - தங்கராஜா " பற்றிய சில பதிவுகள்



"பூரணத்துவமான மனித சமுதாயத்தை உருவாக்கும் சிற்பிகள் ஆசிரியர்கள்" "நித்தமும் புத்தறிவினைப் படைப்போரும் ஆசிரியர்களே" என்பதற்கிணங்க 31 ஆண்டுகால ஆசிரியப் பணியாற்றி ஓய்வு பெற்றதுடன் தேடலுக்கு வயது ஓர் எல்லையில்லை என்பதற்கு இணங்க உயிரியலைத் தாண்டி உயிரின் மூலத்தை மெய்ஞான விழி கொண்டு தேடும் விஞ்ஞானத்துடன் இணைந்து மெஞ்ஞானம் போதிக்கும் மனவளக்கலை யோகா எனும் புதியதோர் வேதத்தின் ஊடாக உண்மையான ஆன்மீக சிந்தனையூடாக "மெய்பொருள் காண்பது அறிவு" என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப மெய்பொருள் உணரும் ஆன்மீகக் கல்வியைத் தானும் கற்று பிறர்க்கும் கற்பிப்பதன் மூலம் உயிரின் மூலத்தை உணர்த்தும் ஓர் ஆசிரியராக இன்றும் பணியாற்றி வருவது அவரின் சிறப்பு.

எல்லோராலும் தங்கன் என்று அன்பாக அழைக்கப்படும் இவர் தீவகத்தில் முதன்மை வகிக்கும் வேலணையில் ஆறுமுகம் - சொர்ணம்மா தம்பதியினரின் புதல்வராகப் பிறந்தார். கல்வியில் உயர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து 1982 விஞ்ஞானமானிப் பட்டம் பெற்று வெளிவந்தார். "ஆசிரியப்பணி அறப்பணி, அதை நாட்டிற்கு அர்ப்பணி" என்ற சேவை நோக்கில் மகத்தான பணியை ஏற்று தனியார் கல்வி நிறுவனங்களிலும் பின்னர் அரச பாடசாலைகளிலும் விலங்கியல், உயிரியல் ஆசிரியராக நாட்டின் பல்வேறு பகுதிகளில் சிறப்பாக கடமையாற்றியுள்ளார். இவ்விரு பாடங்களைக் கற்பிப்பதில் அவர் தனக்கென ஓர் தனித்துவத்தைக் கொண்டதன் மூலம் மாணவர்கள் மத்தியில் நீங்கா இடம்பிடித்துள்ளார்.

அவரின் பாட நிபுணத்துவப் புலமை, ஆளுமை மிக்க குரல்வளம், மொழிவளம் கற்பித்தல் முறைகளில் கையாளும் யுத்திகள் அவரது தனித்தவத்திற்கு காரணங்களாக அமைந்தன. இவரின் மாணவர்கள் இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மருத்துவர்களாக, ஆசிரியர்களாக, பல்வேறு அரச ஊழியர்களாக பணியாற்றி வருவதை சிறப்பாகக் காணக் கூடியதாக உள்ளது. இவரின் கற்றபித்தல் முறையில் நான் நுணுக்கமாக அவதானித்த சிறப்பு யாதெனில் தனியே பாட அறிவைப் புகட்டுவதுடன் நில்லாது ஆன்மீகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த விஞ்ஞானபூர்வமான நகைச்சுவையுடன் இணைந்த அன்றாட அனுபவங்களுடன் தொடர்புட்ட பலவகை ஆளுமையுடன் கூடிய ஒரு கலையாக அவரது கற்பித்தல் செயல்பாடு அமைந்திருப்பதாகும்.

இதனால் வில்லங்கமான விலங்கியல்/உயிரியல் பாடத்தை மாணவர்கள் விருப்புடன் கற்று சிறந்த பேறுபெற்று கல்வியில் உயர்ந்துள்ளனர். மேலும் இவரது மொழி வன்மையால் மேலும் ஒரு படி உயர்ந்து தமிழிலும், ஆங்கிலத்திலும் கற்பிக்கும் ஆற்றல் பெற்று நமது நாட்டின் சகோதர இனமானவர்களுக்கும் கற்பிக்கும் சந்தர்ப்பத்தை கொழும்பு இசிபத்தான கல்லூரியூடாகப் பெற்று நிறைவேற்றியுள்ளார். இவரது கல்விச் சேவைக்கு மேலும் ஒரு சிறப்பாக இவர் 1989ம் ஆண்டில் இருந்து 1994ம் ஆண்டுவரை உதவிப்பரீட்சகராகவும் 1995ம் ஆண்டு முதல் 2010ம் ஆண்டு வரை மேலதிக பிரதம பரீட்சகராகவும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் பணியாற்றியுள்ளார். இக்காலத்தில் உயிரியல்/விலங்கியல் துறையின் மேம்பாட்டிற்காக கட்டுப்பாட்டுப் பரீட்சகர்கள், பிரதம பரீட்சகருடன் இணைந்து கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு பாடத்தின் மேம்பாட்டிற்கு சிறப்பாக பணியாற்றியுள்ளார்.

கல்விப் புலத்திற்குப் புறம்பாக வாழ்க்கையிலும் சில சாதனைகளை ஏற்படுத்தியுள்ளார். சிறப்பாக சுயவிருப்பின் படி வடக்கில் இருந்து கிழக்குக்கு நகர்ந்து இல்லறத்தை அமைத்து புகுந்த வீட்டிற்கும் மாவட்டத்திற்கும் பல்வேறு பெருமைகளைச் சேர்த்துள்ளார். குறிப்பாக சமுதாயப் பணிகளை ஆற்றியதுடன் தனது பிள்ளைகளையும் கல்வி, விளையாட்டு, அழகியல் துறைகளில் சிறப்புற வைத்து நாட்டின் உயர்ந்த நிலைக்கு தன் பிள்ளைகளையும் உயர்த்தியுள்ளார். இது அவரின் தன்னலமற்ற சேவைக்கு கிடைத்த பரிசாக இன்று எல்லோராலும் நோக்கப்படுகிறது.

இவரின் இறுதி இலக்கு தான் சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு பிறந்தது முதல் எத்தனையோ வழிகளில் சமுதாயதாயத்திடம் இருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துவது தான் தலையாய கடமை என்பதாக இருந்தது. அதனை நிறைவேற்றுவதே அறம் சார்ந்த வாழ்க்கையாக அமையும் என்பதில் உறுதியாக இருந்து அதனை இன்று குறிப்பாக நிறைவேற்றிக் கொண்டு இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

இவரது வாழ்க்கை

பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென் இறைவன் பணித்தான்
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிப் பாரென இறைவன் பணித்தான்
இறப்பின் பின்னது யாதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்
அனுபவித்தே அறிவது தான் வாழ்க்கை எனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்றே நெருங்கி காதோரம் சொன்னான்
அந்த அனுபவம் என்பதே நானதான் என்றான்

என்ற கவியரசு கண்ணதாசனின் வரிகளுக்கு ஏற்ப இவரின் சுய வாழ்க்கையில் பல்வேறுபட்ட நன்மையானதும் தீமையானதும் ஆன அனுபவங்களைப் பெற்று அவற்றின் மொத்த வெளிப்பாடாகத் தான் இறுதியில் ஆன்மீகத் தேடலை விஞ்ஞான பூர்வமாக உணர்ந்து அருட் தந்தை வேதாத்திரி மகரிஷி என்னும் ஓர் ஒப்பற்ற குருவின் வழிகாட்டலில் மனித விழுமியங்களை மதித்துப் போற்றும் அறநெறி சார்ந்த உள்ளுணர்வுக் கல்வியாக மனவளக்கலை யோகா என்னும் யோக நெறியைக் கற்று அதன்படி வாழ்வையும் அமைத்து, வாழ்வது பிரம்மச்சரியம், கிரகஸ்தம் என்பவை கடந்து வானப்பிரஸ்தம், சன்னியாசம் நோக்கிய அர்த்த சாஸ்திர வாழ்க்கை நெறியைப் பின்பற்றுவது போல் அமைந்துள்ளது. இன்று மணிவிழாக் காணும் "தங்கன்" எனும் செல்லப் பெயருக்குரிய தங்கராஜா ஆசிரியர் மேலும் சிறப்புற வாழ்ந்து சமுதாயத்திற்கு தொண்டாற்ற வேண்டி இறையருளை வேண்டி விளைகின்றேன்.

நன்றி

திருமதி. **திலகம் பாலகுமாரன்,**
ஓய்வு நிலை ஆசிரியை
(வேலணை)

யார் குறை சொன்னாலும்
அவருக்கு நன்றி சொல்லுங்கள்
தன்னுடைய வேலையை
விட்டுவிட்டு நம்மீது
கவனம் வைத்து
கண்டுபிடித்த அவருடைய
கண்டுபிடிப்புக்கு நன்றி
சொல்ல வேண்டாமா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை அறுபதை அண்மிக்கும் அணையா விளக்கு

## ஆசிரியர் தங்கராஜாவிற்கான வாழ்த்துரை

அன்பிற்கும் அறிவிற்கும் அழிவிலாப் புகழ் பரப்பி நின்ற ஆற்றல்மிகு ஆசான் ஆறுமுகம் தங்கராஜா அவர்களை எனது இளமைபருவம் தொட்டு நன்கறிவேன். அவர் அன்று தொட்டு இன்றுவரை தன்நலமின்றி மக்களுக்கு ஆற்றி வரும் மக்கள் சேவையே மகேசன் சேவையென்ற மனப்பாங்கு உடையவர் என்பதை எவரும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது.

நான் மட்/வின்சன் மகளிர் உயர்தர தேசிய பாடசாலையில் கா.பொ.த உயர்தரம் விஞ்ஞானப் பிரிவு கற்கை நெறியை (1997-1999) பயிலும் கால் தங்கராஜா ஆசிரியர் அவர்கள் எமக்கு விலங்கியல் பாடத்தைக் கற்பித்தவர். விலங்கியல் பாடத்தில் அவர் மிகவும் விற்பன்னர். அதற்கு அவரின் எண்ணிலடங்கா எத்தனையோ மாணவிகள் வைத்திய கலாநிதிகளாக விஞ்ஞான மேதைகளாக மற்றும் தாதியர்களாக மனித குலத்திற்கு சேவை செய்ய பேறு பெற்றுள்ளமை எடுத்துக்காட்டாகும்.

தற்காலத்தைப் போலன்றி அக்காலத்தில் பிரத்தியேக வகுப்புகள் மிக மிகக் குறைவாகவே நடைபெற்ற போது ஓரிருவரே அவ்வகைப் பிரத்தியேக வகுப்புகளில் பிரசித்தி பெற்றிருந்த வேளையில் எம்மாசான் அவர்கள் நல்லாசானாய் பிரத்தியேக வகுப்புகள் அவசியமில்லையெனக் கூறி தாமே அர்ப்பண சிந்தையுடன் மேலதிக வகுப்புகளைத் தம் ஓய்வு நாட்களிலும், ஓய்வு வேளைகளில் நடாத்தி எமக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து நல்வழிப் படுத்திய நல்ல உள்ளம் படைத்த ஓர் மாமனிதர். அவர் ஓர் மனிதருள் மாணிக்கம் என்றால் மிகையாகாது. மேலும் அவர் அருள்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளக்கலை போதானாசிரியராகவும் அரும்பெரும் சேவையாற்றி வருகின்றார். அவர்தம் தொண்டு மென்மேலும் சிறப்புறவும் நீளாயுள் குறைவிலா ஆரோக்கியம் பெற்று நீடூழி வாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

வாழ்க வளமுடன்.

நன்றி.

வைத்திய கலாநிதி

**அகலிகா கிரிசுதன்**

வைத்தியர்,

பிராந்திய சுகாதார சேவைத் திணைக்களம்,

மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பிரான்ஸ் நாட்டில்





நண்பன் மரியதாஸ் உடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டென்மார்க்கில் நண்பர்களுடன்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும் ஐயா தங்கராஜாவிற்கு எனது வாழ்த்துக்கள்



எனது வின்சன்ட் மகளிர் கல்லூரியின் பக்கங்களை மீட்டிப் பார்க்கும் பொழுது பல பசுமையான நினைவுகள் எனது மனக்கண் முன்னால் வருகின்றன. எனது அதிபர், கற்பித்த ஆசிரியர்கள், நண்பர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் என்பன மனதில் என்றுமே நிலைகொண்டு இருக்கின்றன. இந்நிலையில் எனது ஆசிரியர் திரு. தங்கராஜா ஐயா அவர்கள் விலங்கியல் ஆசிரியராகப் பணிபுரிந்து என்னோடு எத்தனையோ மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையை அளித்துள்ளார் என்பதையிட்டு பெருமையடைகின்றேன்.

திரு. தங்கராஜா ஐயா அவர்களிடம் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் வாய்ப்பு கிட்டியது. இந்த வாய்ப்பு இறைவனால் எனக்குக் கிடைத்த வாய்ப்பாக கருதுகின்றேன்.

எனது வாழ்க்கையில் நான் கண்ட ஆசிரியர்களுள் திரு.தங்கராஜா ஐயா அவர்கள் மனதைக் கவர்ந்த சிறந்த ஆசிரியராகத் திகழ்கின்றார். இவர் விலங்கியல் பாடத்தில் மட்டக்களப்பில் சிறந்த பெயர் பெற்ற ஆசிரியராக திகழ்ந்தார்.

இவர் கடமையில் கண்ணானவர். பாடசாலை நேரத்தில் ஒரு சிறிய நேரத்தையும் வீணடிக்காது மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக அயராது உழைத்துக் கொண்டிருந்த ஒரு அர்ப்பணம் மிக்க ஆசிரியராக திகழ்ந்தார். இதன் விளைவாக மட்டக்களப்பில் டாக்கடர்களையும், விஞ்ஞான பட்டதாரிகளையும் அவர் உருவாக்கியுள்ளார். இவரது அரும்பெரும் பணியை மட்டக்களப்பு மக்கள் மறக்க முடியாது.

வகுப்பில் சிறப்பாக விரிவுரைகளை நடத்துவதிலும், விலங்கியல் பாட செயல்முறைகள் செய்து காட்டுவதிலும் ஆர்வம் காட்டி உயர்ந்த கற்பித்தல் நடைமுறைகளைப் பேணி வந்தார். வகுப்பு நேரம் தவிர்ந்த பின்னேர வேளையாகிலும் விடுமுறைக் காலங்களிலும் இலவச வகுப்புகளை பாடசலையில் நடத்தி மாணவலர்களுக்கு சிற்ந்த பெறுபேறுகளை பெற்றுக் கொடுப்பதில் அயராது உழைத்து வந்தார்.

அவரது அயராத உழைப்பின் காரணமாக ஏனைய பல மாணவர்களுடன் நானும் விலங்கியல் பாடத்தில் “B” சித்தியடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி பெற்று வைத்தியத் தொழிலை மேற்கொள்ள எனது வாழ்க்கையில் ஒரு அரிய சந்தர்ப்பத்தை அளித்துள்ளார். அவர் எனது வாழ்க்கையில் மறக்கமுடியாத அணையாத ஒளிவிளக்காக திகழ்கின்றார்.

அவருடைய அளப்பெரிய சேவை, தொழில் நேர்த்தி, உண்மையான வாழ்க்கை எவ்வேளைகளிலும் சிரித்துக் கொண்டிருக்கும் மகிழ்ச்சியான முகமும் எங்கள் மனதைவிட்டு என்றுமே நீங்கமுடியாத பசுமை நினைவு களாகும்.

ஐயா அவர்கள் 2015 கார்த்திகை 5ம் திகதி 60 வயதில் கால் பதிக்கப் போகின்றார். அவருக்கு இறைவன் நோயற்ற வாழ்வளித்து இன்னும் பல வருடங்கள் இவ்வுலகில் வாழ வேண்டும் என அவரிடம் இருந்து சிறந்த உயர் கல்வியைப் பெற்ற மாணவியாக நான் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

Dr.P.Geethanjali
Teaching Hospital,
Batticalo

## உன்னையே நீ வெல்

- மற்றவர்கள் மீது குற்றம் சுமத்தாததீர்கள்.
  உங்கள் மனதுக்குள் இருக்கும்
  முரண்பாடுகளை களைய முற்படுங்கள்.
- வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வையும்
  தியானத்திற்கான வாய்ப்பாக கருதுங்கள்
- உலகத்தை வெல்வதைக் காட்டிலும், மனிதன்
  தன்னை வெல்வதே மிகச் சிறந்த வெற்றி
- செயலில் நேர்மையும், தூய்மையும்
  மிளிரட்டும்
- ஒவ்வொரு கணப் பொழுதும்
  இனிமையானது அதை அனுபவித்து மகிழக்
  கற்றுக் கொள்ளுங்கள்
- குடும்பத்திற்காக மட்டுமன்றி நம்மை
  ஆரோக்கிய சமுதாயத்திற்கும்
  பயனுள்ளவராக வாழுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் குருவிற்கு காணிக்கை



நினைத்துப் பார்க்கிறேன் 1991-1993 காலப் பகுதி அது திரு.தங்கராஜா அவர்கள் விலங்கியல் ஆசிரியர் அத்துடன் வகுப்பாசிரியரும் அவரே.

வகுப்பாசிரியர் அத்தனை மாணவருக்கும் தந்தை போல் ஆனார். எங்கள் அன்றாட வாழ்வின் அத்தனை விடயங்களுக்கும் வழிகாட்டியாக, வேதனைகளைப் பகிர்ந்துகொள்ளும் தாயாக, துன்பத்தில் தோள் கொடுக்கும் தோழனாக, அறிவுரை சொல்வதில் அன்பு ஆசானாக மனதில் நிலைத்தவிட்ட பெருந்தகை அவர்.

விளங்காத "விலங்கியல்" விசாலமானது. விஞ்ஞான விளக்கங்கள் விருட்சமாயின. பிரத்தியேக வகுப்புக்கள் உதவியில்லாமலே எங்களை இலகுவாகக் கரையேற்றியவர். உணர்வுபூர்வமான கற்பித்தலால் என்றும் உள்ளத்தில் நிறைந்தவர். இன்று நினைத்தாலும் நன்றியுணர்வால் விழிகளில் நீர்.

மீண்டும் 20 வருடங்களின் பின் 2013 ம் ஆண்டளவில் நான் அவரை சந்தித்த வேளையில் மெய்ஞ்ஞான அறிவை விஞ்ஞானத்தினூடாக அறிந்துகொள்வதற்கு வேதாத்ரி மகரிஷியின் மனவளக்கலை, உடற்பயிற்சியை அறிமுகம் செய்து வாழ்க்கைத் தத்துவத்தை அறிய உதவியவரும் இவரே.

எங்கள் ஆசிரியருக்கு அகவை அறுபது. எங்கள்கல்விப் பயணத்தில் இடர்மிகுந்த பாதையைக் கடக்க உறுதுணையாய் வழிநடந்து எங்கள் எல்லோர் மனதிலும் நீங்கா இடம்பிடித்த என் அன்பு ஆசிரியர் பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க வழமுடன்

**திருமதி.றேணுகா பிரேமகுமார்**

ஆசிரியை

மட்வின்சன்ட் ம.உ.தே.பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய தந்தையாகிய உயரிய ஆசானுக்கு



வேலணை தீவதனில் வேண்டும் கல்வி
வரம் வாங்கி வந்தவரே !
உயிரியலில் புலமை பெற்று தலை நிலத்திலும்
ஆள்பவரே !
உங்களிடம் உட்கார்ந்து படித்திடும்
உயரிய பலாபலனை நான் இன்னும் பெறவில்லை
ஆனாலும்
வாழ்க்கையின் பக்கங்களை பக்குவமாய்
எனக்கென்றும் உரைவப்பவரே
புதுமைமிகு அறிவியலின் புத்தாக்கம் அத்தனையையும்
புலமையொடு நீங்கள் என்றென்றும் புதுப்பிப்பது போல்
பொல்லாத வயதினையும் பக்குவமாய்ப் புதுப்பித்து
எந்நாளும் எங்களுக்கு வழி காட்ட வேண்டும்
என்று வினையமாய் வேண்டுகின்றேன் !
வணங்குகின்றேன் !

நன்றி

பெறாமகன்
திரு. தியாகராஜா சுதர்சன்
கணக்காளர்,
ஆஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 98 A/L மாணவிகள் சார்பில் ஒரு மாணவியின் நெஞ்சத்திலிருந்து ...



எங்கள் தங்கராஜா சேரின் மணிவிழாவின் முத்திரையாக "தங்கம் 60" மலரை வெளியிடுவது பெரும் மகிழ்ச்சிக்குரியது. இந்த அறுபது ஆண்டு வாழ்க்கையில் நாற்பதுகளில் சேர் மட்/வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். நான் கா.போ.த உயர்தரத்திற்கு காலடி வைக்க முன்னரே சேரின் முயற்சி, ஊக்கம், நற்பண்புகள் பற்றி எனது அம்மாவும் சக ஆசிரியையுமான திருமதி. வரலட்சுமி கருணாநிதி கூறக் கேள்விப்பட்டுள்ளேன். ஆனாலும் உயர்தர வகுப்பிற்கு வந்த பின் தான் சேர் கற்பித்தலை வெறுமனே தனது தொழிலாக மட்டுமல்லாது மனப்பூர்வமாக ஒரு தொண்டாகவே செய்கிறார் என்பதை உணர்ந்து கொண்டேன்.

எல்லோராலும் கற்பிக்க முடியும், ஆனாலும் கற்பித்தல் கலை சிலருக்கே கடவுளால் கொடுக்கப்படுகின்றது. அது எங்கள் தங்கராஜா சேரிடம் நிறையவே உள்ளது. தான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு மாணவருக்கும் தெளிவாக விளங்க வேண்டும் என்பதில் சேர் தெளிவாக இருப்பார். கற்பித்தல் மட்டுமல்லாது நல் ஒழுக்கத்தை பேணுவதில் மாணவிகளாகிய எங்களுக்கு ஒரு தந்தையாக அறிவுரை கூறுவது, பாடசாலை விழாக்களை ஒழுங்கு செய்யும் போது எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து விழாக்கள் சிறப்பாக நிறைவு பெற தன்னால் முடிந்த உதவிகளை செய்வது என பல விடயங்களில் ஒரு சிறந்த ஆசிரியருக்கு உதாரணமாக விளங்கியவர் எங்கள் தங்கராஜா சேர். ஒரு நல்லாசிரியராக மட்டுமல்லாது சிறந்த குடும்பத் தலைவனாக துணைவியார் அன்னம்மா ஆசிரியருடன் இணைந்து பெற்றெடுத்த மூன்று புதல்வர்களையும் நல்ல நிலைக்கு உயர்த்தி மகிழ்ச்சி பெற்றிருக்கும் நற்தந்தையும் ஆவார். இவ்வாறு தன்னை அர்ப்பணித்து சிறந்த பல வைத்தியர்களையும் விரிவுரையாளர்களையும் ஆசிரியர்களையும் இந்த நாட்டிற்கு நற்பிரஜைகளாக உருவாக்கிய எங்கள் சேரும் அவரது சேவையும் வாழ்க வாழ்க நீடூழி வாழ்க என எனது 98 A/L சக தோழிகள் அனைவர் சார்பாகவும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

Dr. திருமதி. **ஷஷாந்திரி வசந்த்**
மன்னம்பிட்டி ஆதார வைத்தியசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியும் அறிவானாய்

அன்பின் திருநிலையே

அமைதியின் பெருநிலையே

எல்லை பிரிவின்றி

எங்கும் நிறை நிலையே

காணும் பொருள் தனிலே

கருவாய் நீ அமைந்தாய்

ஏற்பும் தள்ளலுமாய்

இயங்கும் இறைவெளியே

வான் பொருள் நீயானாய்

வளம் தரும் உயிரானாய்

மண்ணுக்கும் விண்ணுக்குமாய்

மறைபொருள் நீயானாய்

அறியும் அறிவானாய்

அகமதில் நிலைத்திடுவாய்

அனைத்துமான பொருளே

உனை அறிந்தேன்

அன்பானேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சின் பரிமாணங்கள்

தாயிடம் அன்பாக பேசுங்கள்

தந்தையிடம் பணிவாக பேசுங்கள்

ஆசிரியரிடம் அடக்கமாக பேசுங்கள்

துணைவியுடன் உண்மையாக பேசுங்கள்

சகோதரனுடன் அளவாக பேசுங்கள்

சகோதரியிடம் பாசத்தோடு பேசுங்கள்

குழந்தைகளிடம் ஆர்வத்தோடு பேசுங்கள்

உறவினர்களிடம் பரிவோடு பேசுங்கள்

நண்பர்களிடம் உரிமையோடு பேசுங்கள்

அதிகாரியிடம் பணிவோடு பேசுங்கள்

வியாபாரியிடம் கறாராக பேசுங்கள்

வாடிக்கையாளரிடம் நேர்மையாக பேசுங்கள்

தொழிலாளரிடம் மனித நேயத்தோடு பேசுங்கள்

அரசியல்வாதியிடம் ஜாக்கிரதையாக பேசுங்கள்

இறைவனிடம் மௌனமாக பேசுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மது !!!

## மது பற்றி கவியரசு கண்ணதாசன்



மதுப் பழக்கம் உள்ள ஒருவனே மதுவினால் விளையும் தீமைகளைத் தெளிவாக எடுத்துரைக்க முடியும்.

"எனக்கு இருபதாண்டுகளாக அந்தப் பழக்கம் உண்டு" என்பது ஒன்றும் புதிய செய்தியல்ல.

அந்தத் தார்மீக ஒழுக்கக் கேட்டிற்கு நான் வக்காலத்து வாங்க வரவில்லை. ஆனால், "சட்டத்தினால் மதுவை ஒழிக்க முடியாது" என்று நான் வாதிட்டிருக்கிறேன். சட்டம் போட்டு ஒன்றை மறைக்க, மறைக்க அது பற்றிய ஆசைகளே கிளர்ந்து எழும்.

"குடித்தால் உன் உடம்பு கெடும்.
மலத்துக்கும், சோற்றுக்கும் வித்தியாசம் தெரியாது.
காரணம் இல்லாமல் வீண் பகைகளைக் கொண்டுவந்து சேர்க்கும்.
நீ என்ன சொன்னாலும் உலகம் உன்னை நம்பாது.
நீ நிதானமாகப் பேசினாலும் கூட, `இது குடிகாரன் பேச்சு" என்று தள்ளிவிடும்.
நீ குடிக்கும் மது, உன் குடும்பத்தின் வாழ்வைக் குடித்து விடும்.
உன் வருமானம் பாழாகும்.
செய்ய வேண்டிய காரியத்தைச் செய்ய வேண்டிய காலத்தில் செய்ய முடியாது.
மதுவினால் நீ நோயுற்றால், உனக்காக யாரும் வருத்தப்பட மாட்டார்கள்.
குடும்பத்தாலும் சமுதாயத்தாலும் ஒதுக்கப்பட்ட புல்லாக, பூச்சியாக நீ மாறிவிடுவாய்.
நற்குலப் பெண்கள் உன் அருகில் வரவே பயப்படுவார்கள்.
மொத்தத்தில் நீ மனிதனாகவே வாழ முடியாது"

இப்படி அவனுக்கு இடித்துக் காட்டினால், ஒரு கட்டத்தில் இந்த அனுபவம் அவனுக்கு வந்து, மதுவைக் கைவிட்டு விடுவான். ஆகவே தான், இந்தியா தோன்றிய காலத்தில் இருந்து, பின் இந்து மதம் பிறந்த காலத்தில் இருந்து, மதுவுக்கு எதிராக மதம் வாதாடிப் போதித்திருக்கிறதே தவிர, அரசர்களிடம் தன் சக்தியைப் பயன்படுத்தி, அதைத் தடைசெய்யச் சொன்னதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மது உள்ளே போனால், மதி வெளியே போகும்.”
“சாராயத்தை உள்ளே போட்டால், பூராயம் எல்லாம் வெளியே வந்துவிடும்”
“குடிகாரன் பேச்சு பொழுது விடிஞ்சாக்கப் போச்சு”
“கள்ளுக் குடிச்சவனுக்குச் சொல்லுப் புத்தி ஏறாது.”
இவையெல்லாம் கிராமத்துப் பழமொழிகள்.

மதுவிலக்குப் பிரச்சாரம் இந்தியாவில் பல கோணங்களில், பல விதங்களில், பல கட்டங்களில் நடைபெற்று வந்திருக்கிறது. அப்பொழுதெல்லாம், நாட்டிலே குடிகாரர்கள் குறைவாகவே இருந்தார்கள். என்று மதுவிலக்குச் சட்டம் வந்ததோ, அன்றிலிருந்துதான் குடிப்பவர்கள் அதிகமானார்கள். ஆகவே, இந்த வகையிலும் மதம் போதித்து எழுப்பும் தார்மீகச் சக்தியை சட்டம் உருவாக்க முடியாது.

இந்து மதம், மது உண்பவர்களையே “அரக்கர்கள்“ என்று அழைத்தது. மதுவினால் மதியிழந்தோர் கதைகள் இந்துமத ஏடுகளில் ஏராளம், ஏராளம குடிப்பவனுக்குப் பெண் கொடுக்க மாட்டார்கள்.

"நெருப்பை நெய்யால் அணைத்தேன்” என்கிறான். கவலைக்காகக் குடிக்க ஆரம்பித்தால், உள்ளே போய் விழுந்த மது, அந்தக் கவலையை அதிகப்படுத்துமே தவிரக் குறைக்காது. ஒரு குடிகாரன், குடிக்க ஆரம்பிக்கும் போது எதை நினைத்துக் கொண்டு குடிக்கத் துவங்குகிறானோ, அதுதான் அவன் குடித்து முடித்துத் தூங்கும் வரை விசுவரூபம் எடுத்து நிற்கும். முதல் ரவுண்டு குடிக்கும் போது, ஒருவனை உதைக்க வேண்டும்“ என்று நீ நினைத்தால் மூன்றாவது ரவுண்டு முடிந்ததும், அவனைத் தேடி உன்னைப் போகச் சொல்லுமே தவிர, அந்தக் கோபத்தை அது குறைக்காது. அதனால்தான், மேலை நாட்டார் தனியாகக் குடிப்பது இல்லை.

குடிக்க குடிக்க, வயிற்றுக்குள்ளே Fluid உற்பத்தியாகிறது. வயிறு மகோதரம்“ போல் ஆகிவிடுகிறது. ஈரலில் Liver Sirosis என்ற நோய் உற்பத்தியாகிறது.

ஆரம்ப காலத்தில், குடிகாரர்கள் நிறையச் சாப்பாடு சாப்பிடுவார்கள். நாள் ஆகஆக, குடி அதிகமாகி சாப்பாடு குறைந்துவிடும். “மரணம் வாசல் வரைக்கும் வந்துவிட்டது“ என்பது இதன் பொருள்.

தண்ணீரையும் நாம் குடிக்கிறோம் பாலையும் குடிக்கிறோம். ஆனால், எதையும் “குடி” என்று அழைப்பதில்லை. இதை மட்டும் ஏன் “குடி“ என்கிறோம்? இது ஒன்றுதான், உயிரைக் குடிக்கிறது.

மதுவினால், உண்மையிலேயே நான் போய்ச் சேர வேண்டிய ஊருக்குப் போய்ச் சேர முடியாமல் ரயிலைத் தவற விட்டிருக்கிறேன். வாழ்க்கை ரயிலையும் தவற விட்டிருக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இந்து, மது அருந்துவதை மதம் நியாயப்படுத்தவில்லை. வழக்கம் போலவே அவனைத் தட்டிக் கொடுத்துத் தர்ம போதனை மூலம் திருப்புகிறது.

மதுவிலக்கை சரியாகச் செயல்படுத்த வேண்டும்

மத விரிவுரையாளர்களால் மட்டுமே இயலும்.

உங்களிடம் பணி புரிகிறவர்களை, மரியாதையோடும் கண்ணியத்தோடும் நடத்துங்கள். அவர்கள்தான் உங்களுடைய மிகப் பெரிய சொத்து.

உலகம் வெகுவேகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. நீங்கள் ஒரு விஷயத்தை முடியவே முடியாது என்று சொல்லி முடிப்பதற்குள், வேறொருவன் அதைச் செய்து முடித்து, உங்கள் வாக்கைப் பொய்யாக்கி விடுகிறான்.

- கண்ணதாசன்

கவியரசு கண்ணதாசனுக்கும் எனக்கும் ஓப்பீட்டளவில் மலையும், மடுவும் போன்ற வேறுபாடுகள் உண்டு. ஆனாலும் மேலேயுள்ள பதிவு முகநூலில் இருந்து எடுக்கப்பட்டது. இதிலிருந்து இரண்டு ஒருமைப்பாடுகள் அவருக்கும் எனக்கும் இடையே உள்ளதாக என் மனதில் பட்டதனால் சமுதாய நலன் கருதி அதனையும் இங்கு பதிவு செய்கின்றேன்.

முதலாவதாக அவரை ஆட்கொண்ட மது என்ற தார்மீக ஒழுக்கக் கேடு என்னையும் சுமார் பன்னிரெண்டு ஆண்டுகள் ஆட்டிப் படைத்து சாவின் எல்லை வரை கொண்டு சேர்த்தது. அதிர்ஷ்டவசமாக அதிலிருந்து வெளிவந்து இன்று சுமார் இருபது ஆண்டுகள் ஆகின்றது.

இரண்டாவதாக அவர் நாஸ்திகனாக இருந்து ஆஸ்திகனாகி அவரது பிற்காலத்தில் அர்த்தமுள்ள இந்துமதம் படைக்குமளவுக்கு ஞானியாகியவர். என்னைப் பொறுத்தவரை நாஸ்திகனாக அடையாளப் படுத்தப் படாத போதிலும் கடவுள் பற்றிய தெளிவற்ற நிலையில் இருந்த நான் இன்று மனவளக் கலை யோகா எனும் உள்ளுணர்வுக் கல்வி மூலம் அறிவை அறியும் அறிவாகிய மெய்ஞானத்தில் ஓரளவு தெளிவு பெற்றதனால், கடவுள் பற்றிய புரிதலுடன் இருக்கின்றேன்.

இந்த இரண்டு ஒருமைப்பாடுகளும் எனக்கும் அவருக்கும் இடையே இருப்பதை உணர்வதுடன் இப்பதிவு நிகழ்காலத்தவர்க்கும் எதிர்கால சந்ததியினருக்கும் ஒரு பாடமாக அமையும் ஆயின் அதுவும் எனக்கு ஒரு ஆத்ம திருப்தியாக அமையும் என கருதுகிறேன்.

வாழ்க வளமுடன்

ஆ.தங்கராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07.07.2013 அன்று யா/ஆத்திச்சூடி வித்தியாசாலையின் பாடசாலைச் சமூகத்துடனும் மாணவ சமூகத்துடனும் தமது வாழ்வை இணைத்து சேவையாற்றி ஓய்வு பெற்ற நல்லாசான்களைப் பாராட்டி ஆற்றப்பட்ட

# உரை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

குருவே துணை

**இறைவணக்கம்**

எல்லாம் வல்ல தெய்வமது எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்
வல்லாய் உடலின் இயக்கமவன் வாழ்வில் உயிரின் அறிவும் அவன்
கல்லார் கற்றார் செயல்விளைவாய்க் காணும் இன்ப துன்பமவன்
அவனின் இயக்கம் அணுவாற்றல் அணுவின் கூட்டு பக்குவம் நீ
அவனில்த்தான் நீ உன்னில் அவன் அவன்யார் நீயார் பிரிவேது
அவனை மறந்தால் நீ சிறியோன் அவனை அறிந்தால் நீ பெரியோன்
அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம் அறிவு முழுமை அது முக்தி

**"அருட்தந்தை – வேதாத்திரி மகரிஷி"**

நிகழ்விற்குத் தலைமை தாங்கும்..............!

ஏறிடும் கூட்டத்தை ஏற்றிய பின்பும் ஏணியாகவே வீற்றிருக்கும் நிகழ்வின் கருவாக அமைந்த நம் ஆசான்களே!

அறிவு அறிந்தோரே

சிந்தனையாளர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது மாலை வணக்கத்தையும் வாழ்த்துக் களையும் முதற்கண் தெரிவித்துக்கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் பாடிய இறைவணக்கப் பாடலின் இறுதி வரியில் கூறியது போன்று இறைநிலையும் மனிதனும் ஒன்றாய் அறிந்த இடம்தான், மனிதன் அறிவில் முழுமை பெற்ற நிலையாகும். அதுவே அவனின் முக்திக்கு வழியாக அமையும் ஆன்மீக சிறப்பு நெறியாகும். அந்தவகையில் நம்மையெல்லாம் அறிவின் முழுமைக்கு இட்டுச் செல்ல தம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றி, அறிவிலும் அனுபவத்திலும் முழுமை பெற்று பழுத்த பழங்களாக நம்முடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்து இருக்கக் கூடிய இந்த நல்லாசான்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் இந்த நிகழ்வில் அவர்களை பாராட்டி வாழ்த்துரை வழங்குவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இத்தகைய வைபவத்தை ஏற்பாடு செய்வதற்கான எண்ணம் ஒரு தெய்வீக எண்ணமாகவே அமைந்துள்ளது. எனவே இந்த எண்ணத்தின் சிற்பிகள் அனைவருக்கும் எனது பாராட்டும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

மனிதன் என்பவன் ஆறு அறிவு படைத்த சிறப்பு விலங்கு என்பது விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பு அந்த ஆறாவது அறிவின் விசேடம் என்ன என்றால் அறிவையே அறியும் அறிவு ஆகும். அதாவது நம்மில் அறிவாக இயங்கும் இறைநிலையை முழுமையாக அறிய வல்லது தான் அந்த அறிவு.

மனிதன் எப்போது அந்த நிலையை அடைகின்றானோ அந்த நிலைதான் நாம் எல்லோரும்.

பேசிக்கொள்கின்ற,
அடைய விரும்புகின்ற
முக்திநிலை அல்லது வீடுபேற்று நிலையாகும்.

இதற்கான ஒரே வழி வாழ்வின் நோக்கத்தைப் புரிந்து வாழ்வியல் தத்துவங்களை பின்பற்றி வாழ்வதாகும்.

வாழ்வியல் தத்துவங்கள் என நான் இங்கு கூறுவது.

1. அறம் சார்ந்தவை
2. அறிவு சார்ந்தவை

என இரு வகையாகும்.

அறம் சார்ந்த வாழ்வியல் தத்துவங்கள் ஒழுக்கம், கடமை, ஈகை என மூன்று வகைப்படும். இதுவே நமக்கும் சமூகத்திற்கும் இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நற்பண்புகள் ஆகும்.

அறிவு சார்ந்த வாழ்க்கைத் தத்துவங்கள் பக்தி/நம்பிக்கை, விளக்கம்/ஞானம், முக்தி/முழுமைப்பேறு எனும் அறிவின் வளர்ச்சிப் படி நிலைகளைச் சார்ந்ததாகும்.

இத்தகைய அறம் சார்ந்ததும் அறிவு சார்ந்ததுமான வாழ்வியத் தத்துவங்களை தாமே அதற்கு மாதிரியாக நின்று வாழ்ந்து காட்டி மாணவ உலகிற்கு முன்னோடியாக இருந்து வழி நடத்துபவர்களே 'குரு' என அழைக்கப்படுவர். நாம் இங்கு காண்கின்ற நம்முடன் அமர்ந்திருக்கக் கூடிய நாம் 'குரு' என்ற அந்தஸ்தில் வைத்து போற்றுகின்ற அனைத்து உள்ளங்களும் நான் கூறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம் சார்ந்ததும் அறிவு சார்ந்ததும் ஆன வாழ்க்கைத் தத்துவங்களை சற்றும் வழுவாது கடைப்பிடித்து வாழ்ந்து காட்டிக் கொண்டு இருப்பவர்களாகும். இவர்களின் அறம் சார்ந்த வாழ்க்கையில் அவர்களின் ஒழுக்கம், கடமை உணர்வு, ஈகை எனும் நெறி முறைகளைச் சிறப்பாக பின்பற்றி வாழ்ந்தார்கள். இதனால் இன்று சமுதாயத்துடன் இணைந்து மேம்பட்டவர்களாக திகழ்ந்து கொண்டு இருக்கின்றனர். இந்த ஆசான்களின் கடமை அறம் பற்றி மீட்டுப் பார்த்தால் புரிவதுதான் இந்த பராட்டு வைபவத்தின் முக்கியத்துவம் ஆகும். கடமை அறம் என்பது கர்மயோகம் என்றும் கூறப்படும். அதாவது கருமம் என்பது கடமை எனவும் யோகம் என்பது இணைவு எனவும் பொருள் படும் அதாவது கடமையுடன் தம்மை முழுமையாக இணைத்து வாழ்ந்த அறிவு பெருந்தகைகள் தான் இவர்கள் அனைவரும். 'குரு' என்ற வார்த்தையும் கு – அறியாமை / இருள் எனவும் ரு – நீக்கல் / அகற்றுதல் எனவும் பொருள் படும். எனவே குரு என்பவர் அறியாமையை நீக்குபவர் அல்லது இருளை அகற்றுபவர் ஆகும்.

இந்த விளக்கத்திற்கு ஏற்ப நம்முடன் இருக்கக் கூடிய இந்த பெருந்தகைகள் நம்மை எல்லாம் அறியாமை என்ற இருட்டில் இருந்து மீட்டு முழுமையான வெளிச்சத்திற்கு வழிகாட்டியவர்கள் ஆகும். கருமத்தை செய்பவர்களின் மனோ நிலையை இரண்டு நிலையில் காணமுடியும்.

01. செய்யும் காரியத்தின் பயனை நிச்சயமாக துய்ப்போம் அதற்கான முழு உரிமை நமக்கு உண்டு என்போர்

- இரசோ குணம் -

02. நாம் அனுபவிப்பதற்குப் பயன் கிட்டாது எனில் கடமையே செய்ய மாட்டோம் என்போர்

- தமோ குணம் -

03. சமுதாயத்தில் பெரும்பாலானோர் இந்த இருவகையைச் சார்ந்தவர்கள் ஆகவே இருக்கின்றனர். இதுவே இன்று சமுதாயத்தின் அனைத்து சிக்கல்களுக்கும் காரணமாகவும் அமைகின்றது. ஆனால் கீதையில் பகவான் கண்ணன் கூறுகின்றார்

காரியம் உனக்கு விதிக்கப்பட்ட சுதர்மம் நீ பிறப்பதற்கு முன்னமே உனது சுதர்மம் இதுதான் என நிர்ணயம் செய்யப்பட்டு விட்டது எனவே அதனை கட்டாயம் நீ செய்தாகவேண்டும். ஆனால் பயனிடத்தில் உனக்கு உரிமை கிடையாது.

'கடமையை செய் பயனை எதிர்பார்க்காதே'

இதுவெ பயனின் துறவு நிலையாகும் இந்த துறவு நிலையில் தான் இங்கு இருக்கக்கூடிய இந்த நல்லாசான்கள் இன்று நம்முடன் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இருக்கின்றார்கள். தமது கருமத்தை சிறப்பாக நிறைவேற்றி அதன் பயனை துறந்து வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். ஆசான் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய வேதாந்திரியம் எனும் ஆன்மீக வாழ்க்கைச் சாதனை மார்க்கத்தில் 'கடமை' என்ற சொல்லின் ஆங்கில வடிவமாகிய 'Duty' என்னும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு கடமை என்பது என்ன என்றும் அதைச் சரிவர நிறைவேற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தையும் விளக்கியுள்ளார்.

Due – என்பது செலுத்தப்பட வேண்டிய கடன்

Duty – கடமை

Due இல் இருந்து தான் Duty என்ற சொல் உருவானது பட்ட கடனை மீள செலுத்துதல் என்ற கருத்தின் அடிப்படையிலேயே 'கடமை' என்பது உருவாக்கப்பட்டது என்பதாகும். நாம் ஒவ்வொருவரும் பிறந்தது முதல் வாழ்வின் எல்லை வரையான வாழ்க்கைக் காலத்தில் பல்வேறு விதத்தில் இந்த சமுதாயத்தில் இருந்து 'கடன்' பெற்றுள்ளோம்.

அந்த கடன்கள் அனைத்தையும் வாழும் போதே எந்த விதத்திலும் பாக்கி எதுவும் இன்றி மீள செலுத்துவதே கடமை அறம் அல்லது கரும யோகம் ஆகும்.

இந்த பெருந்தகைகள் தமது கடமையை செவ்வனே நிறைவேற்றியவர்கள். எந்த கடனையும் மீதம் வைக்காது செலுத்தி உள்ளார்கள் இதற்கு ஆதாரமாகத்தான் அவர்களது முதுமைக்கால வாழ்வில் அவர்களது முகமலர்ச்சி எடுத்துக்காட்டுகிறது. எனவே வாழும் காலத்திலேயே இந்தப் பாராட்டு வழங்கப்படுவது முற்றிலும் பொருத்தமான ஒரு ஏற்பாடாகும். இப்பாடசாலையில் தமது சேவையை செவ்வனே நிறைவேற்றி தமது ஓய்வு காலத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் பெருந்தகைகள் ஆகிய

1. திருமதி. பொன்மணி – சண்முகநாதன்
2. யோகம்மா – குமாரரத்தினம்
3. திரு. சதாசிவம் - மகாலிங்கம்
4. திருமதி. இந்திராணி – சிவதாஸ்
5. திருமதி. யோகலட்சுமி –சபாநாதன்
6. திருமதி.நாகம்மா –தேவராஜா
7. திருமதி மகேஸ்வரி – செல்வரட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. திரு.சோமசுந்தரம் -பேரின்பநாதன்

9. திரு. பொன்னையா – சிவலிங்கம்

ஒவ்வொருவரும் இப் பாடசாலையை தமது உயிரினும் மேலாக நேசித்து அறப்பணி ஆற்றி ஓய்ந்து வாழ்கின்றார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் இன்று எதிர்பார்ப்பது அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட மாணவர்கள் எவ்வொருவரினதும் முன்னேற்றத்தைத் தான் ஆகும். அந்த முன்னேற்றம் தான் நாம் அவர்களுக்கு கொடுக்கக்கூடிய பிரதி உபகாரம் ஆகும்/ குரு காணிக்கை

அந்த வகையில் என்னைப் பொருத்தவரை

திருமதி.யோகம்மா – குமாரரட்ணம் , என்னுடைய மச்சாள்

திரு.சதாசிவம் - மகாலிங்கம் வாத்தியார்

திருமதி. நாகம்மா – தேவராசா , தேவா வாத்தியக்கா

ஆகிய மூவரிடமும் நான் நேரடியாகக் கல்வி கற்று அறிவை மேம்படுத்தியதுடன் என்னளவில் எனது முன்னேற்றம் குறிப்பிட்ட அளவில் தான் அமைந்தபோதிலும் இப் பாடசாலையில் இவர்கள் மூலம் பெற்ற ஆரம்ப கல்வி அறிவுடன் மேலும் பல்வேறு கல்விக் கூடங்களில் கல்வி கற்று இறுதியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமானிப் பட்டம் பெற்று இப்பெருந்தகைகளின் தடம் பற்றி நானும் ஆசிரியப்பணியையே அறப்பணியாக ஏற்று அகமகிழ்வுடன் சேவை ஆற்றினேன். 1984ம் ஆண்டு முதல் 2010ம் ஆண்டு வரையான 26 ஆண்டுகால ஆசிரிய சேவையை அவர்களின் வழி நின்று இலங்கையின் வடக்கு கிழக்கு மேல் மற்றும் மலையகம் .ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ், முஸ்லீம், சிங்களம் ஆகிய மூவினத்தவருக்கும் ஆற்றி இன்று ஓய்வு பெற்று இருக்கின்றேன். அது மட்டும் அன்றி எனது பிள்ளைகளையும் நல்ல முறையில் வழிகாட்டி கல்வி ஊட்டி கல்வியின் உச்சநிலைக்கு அதாவது ஒரு மகளை மருத்துவராகவும், ஒரு மகனை பொறியியளாலராகவும் மற்றொருவரை கணக்காளராகவும் ஆக்கி மனநிறைவு பெற்று வாழ்கின்றேன்.

அது மட்டும் அன்றி ஒரு மகனை இலங்கையில் முதல்தர விளையாட்டு வீரனாக Tennis விளையாட்டில் வளர்த்தெடுத்ததுடன் இன்று அவர் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று விளையாடி உலகத் தரவரிசையில் இடம் பிடிப்பதற்காக முயற்சி எடுத்த வண்ணம் உள்ளார்.

இவை எனது சேவைக்குக் கிடைத்த வெகுமதிகள் என அறிவறிந்தோர் கூறுவர். இதனை நான் சுயவிளம்பரத்திற்காகச் சொல்லவில்லை. மாறாக இதில் உள்ள உண்மையும் பெருமைக்குரிய விடயமும் என்ன என்றால், இங்கு வீற்றிருக்கும் இந்த ஆசான்களின் அத்திவாரம் தான் சிறந்த வழி காட்டலாக அமைந்து இன்று மூன்றாவது சந்ததியாக உலக அளவில் செயல்படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக 'யோகம்மா வாத்தியக்கா' என்மீது ஆசிரியை என்ற நிலையையும் தாண்டி பணம் உட்பட எனது எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றி எனக்குக் கல்வியூட்டியவர்.

அன்று நாம் ஆசிரியர்களை வாத்தியக்கா, வாத்தியார் எனத்தான் கூறுவோம்.

சறோஜினி வாத்தியக்கா, கமலா வாத்தியக்கா, கந்தையா வாத்தியார், பொன்னையா வாத்தியார் ஆகியோரும் குறிப்பிடக்கூடிய அளவில் தமது பங்கை ஆற்றியவர்கள்.

நான் மட்டும் அல்ல இங்குள்ள ஒவ்வொருவருக்கும் இது போன்ற பல அனுபவங்கள் இருக்கும்.

இந்த அறிவு அறிந்த பெரியோர்கள் ஒவ்வொருவரும் நம் ஒவ்வொருவரினதும் வாழ்வியலில் பின்னிப் பிணைந்தவர்களாக காலம் உள்ளவரை இருப்பார்கள் என்பது திண்ணம்.

இத்தகைய பெந்தகைகளை வாழ்த்திப் பாராட்டுவது என்பது நம் ஒவ்வொருவரினதும் கடமையறம் ஆகும். அந்த வகையில் அக்கடமையறத்தை இந்த மண்ணிலேயே நிறைவேற்றக் கிடைத்தமை மிகப்பெரிய பாக்கியம் ஆகும். மேலும் இந்த எண்ணத்தை உருவாக்கி அதனைச் செயல் உருவப்படுத்திய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி பாராட்டி,

'நான்மறை கற்றவன் ஞானியல்ல

நான்மறையக் கற்றவன்தான் ஞானி'

எனக்கூறி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து நிறைவு செய்கின்றேன்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

உலக நல வாழ்த்து

உலகமெலாம் பருவ மழை ஒத்தபடி பெய்யட்டும்
உழவர் எல்லாம் தானியத்தை உவப்புடனே பெருக்கட்டும்
பல தொழில்கள் புரிகின்ற பாட்டாளி உயரட்டும்
பகுத்துணர்வில் தொகுத்துணர்வு பண்பாட்டை உயர்த்தட்டும்
கலகங்கள் போட்டி பகை கடந்து ஆட்சி நடக்கட்டும்
கல்லாமை கடன் வறுமை களங்கங்கள் மறையட்டும்
நல் வாழ்வை அளிக்கும் மெஞ்ஞான ஒளி வீசட்டும்
நம் கடமை அற வாழ்வில் நாட்டத்தே சிறக்கட்டும்

**அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி**

அருள்நிதி ஆ.தங்கராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14.10.2015 - அருளமுதம் V ஆற்றிய உரை

# வேதாத்திரியத்தில்
# "கடவுளும் கர்ம யோகியும்"

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

குருவே துணை

☛ புதியதோர் உலகம் செய்ய புதியதோர் வேதம் தந்து,

☛ அறிவென்னும் விழியினிலே ஞானமெனும் ஒளி பெருக்கி, மாயை எனும் திரை கடந்து தன் நிலையைத் தான் அறியத் தக்க மார்க்கமாக மனவளக் கலை யோகா எனும் அரும் பெரும் பொக்கிசத்தை மனித குலம் வாழ்வாங்கு வாழ நமக்களித்த ஆசான் அருட் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் நம்முள்ளும் நம் மத்தியிலும் சூட்சுமமாக நின்று வழிநடத்த வேண்டி விழைகின்றேன்.

☛ சபையோர் விழிப்பு ........

☛ வேதாத்திரியத்தில் "கடவுளும் கர்ம யோகியும்" என்ற தலைப்பில் சிந்தனையுடன் கூடிய கருத்துப் பரிமாற்றம் இன்றைய அருளமுதம் நிகழ்வில் பரிமாறப்பட உள்ளது.

☛ இத்தலைப்பைப் பற்றி நான் யோசித்துப் பார்த்த போது இதில் உள்ள நான்கு தலைப்புக்கள் பற்றிய தெளிவும் புரிதலும் நமக்கு அவசியம் என என் மனதில்த் தோன்றியது.

☛ அவையாவன

1. வேதாத்திரியம் என்ற வாழ்வியல் அடிப்படைத் தத்துவம்.
2. கடவுள் என்ற எண்ணக் கருவை அருட் தந்தை அவர்கள் வாழ்வியலுடன் எவ்வாறு இணைத்து நோக்கியுள்ளார்.
3. கர்மம் என்பதை அருட் தந்தை வேதாத்திரிய நோக்கில் அறம் சார்ந்த வாழ்க்கை நெறியில் "கடமையறம்" என நோக்குவதைக் காணக்கூடியதாக உள்ளமை.
4. யோகம் என்ற கலையை ஒரு உளவியல் தொழில் நுட்பமாகக்கருதி கடமையறம் உளவியல் சார்ந்த ஒழுக்க நெறியாகக் கொண்டு வாழ்வில் நோக்கத்தை நிறைவு செய்யும் ஒரு வழியாக கர்ம யோகமாக கருதியுள்ளமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இந்தத் தலைப்புக்கள் ஒவ்வொன்றையும் பற்றிய தெளிவான புரிதலை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகவே இன்றைய கருத்துப் பரிமாற்றம் அமையும் என எதிர் பார்க்கின்றேன்.

- அந்த வகையில் வேதாத்திரியம் என்ற வாழ்வியல் அடிப்படைத்தத்துவம் விளக்கி நிற்பது

- வாழ்வின் மூலமாக இருப்பது உடல். அந்த உடலின் நலம் பேணுதல் எனும் ஆரோக்கியத்திற்கான வழிமுறைகளைத் தரும் பயிற்சிகள் பற்றிய தெளிவு பெற்று அவற்றை தினம் தோறும் கடைப்பிடித்து அதன் மூலம் உடல் ஆரோக்கியத்தை உறுதி செய்வது. இது உடற் பயிற்சி, காய கல்ப்ப பயிற்சி என்பவற்றின் மூலம் உறுதி செய்யப்படுகின்றது.

- ஆரோக்கியமான உடலில் உள்ள வளமான உயிரின் வெளிப்பாடாக வருவது தான் உடல் இயக்க ஆற்றலாக அமையும் ஜீவகாந்தம். இந்த ஜீவகாந்தம் நமது உடலில் பஞ்சதன் மாத்திரைகளாக மாறி ஐம்புலன்கள் வழியே இயங்குவதன் மூலம் நாம் பெறும் அனுபோகங்களே அனுபவப் பதிவுகள் ஆகி வினைப் பதிவுகள் ஆக நம்மில் பதிகின்றது.

- இப் பதிவுகள் தான் இருவினைகளாக நமது காந்தக் களத்தின் திணிவு பெற்ற மையமாகிய கருமையத்தில் பதிந்து நமது அறிவாட்சித் தரமாக அமைகின்றது.

- இந்த அறிவாட்சித் தரத்திற்கேற்ப பதிவுகள் எழுச்சி பெற்று எண்ணம், சொல், செயல் என வெளிப்படும் போது அதுவே நம்மை இயக்கும் "மனம்" எனப்படுகின்றது.

- இம் மனதின் செயலிற்கு ஏற்பவே நமது மதிப்பு உணரப்படுகின்றது. எனவே மனதின் குணாம்சங்களை மாற்றியமைக்கும் வல்லமையை மனதிற்குத் தரக்கூடிய பயிற்சியாக தியானப் பயிற்சியை நாம் மேற் கொள்கின்றோம்.

- அமைதி பெற்ற மனத்தின் மூலம் நம்மை நாமே ஆய்வு செய்யும் அகத்தாய்வுப் பயிற்சிகள் மூலமும் தத்துவ விளக்கங்களைப் பெறுவதன் மூலமும் பழக்கங்களை விளக்கங்களுக்கேற்ப மாற்றி குணங்களை மாற்றியமைத்து குணநலப்பேறு அடைந்து முழுமையை நோக்கிப் பயணிக்கக் கூடியதாக அமையும் பயிற்சிகளைப் பின்பற்றுகின்றோம்.

- ஈற்றில் முழுமைப் பேறு எனும் இறையுணர்வுப் பயிற்சியை இறை ஞானம் பெறும் பயிற்சியைப் பெற்று வாழ்வின் நோக்கத்தை நிறைவு செய்யக்கூடிய பிரம்மஞானம் எனும் தெளிவை நோக்கிப் பயணிக்க முடிகின்றது.

இது வேதாத்திரியம் பற்றிய சுருக்கமான விளக்கம் என நினைக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக இந்த வேதாத்திரியத்தில் கடவுள் என்ற எண்ணக்கருவை அருட் தந்தை எவ்வாறு கையாண்டுள்ளார் என நோக்கும் போது மகரிஷி அவர்கள் எந்த ஒரு இடத்திலும் கடவுள் என்பதை ஒரு நபராகக் கருதியதில்லை மாறாக "இறை நிலை" என்ற பதமே அவர் பயன்படுத்தியுள்ளார். அந்த இறைநிலை பற்றிய விளக்கத்தை விஞ்ஞான பூர்வமாகவும் மெஞ்ஞான அடிப்படையிலும் மிகவும் தெளிவு பட விளக்கியதோடு அந்த இறை நிலையின் வியாபகத் தன்மையை இப்பிரபஞ்சத்தோடு இணைத்து விளக்கியுள்ளார்.

- எல்லாம் வல்ல இறையாற்றல் "சுத்த வெளியாக" இப்பிரபஞ்சம் முழுவதும் பரவியுள்ளதுடன் இப்பிரபஞ்சத்தைக் கடந்து இப்பிரபஞ்சத்தைத் தாங்கும் பேராற்றலாகவும் பேரறிவாகவும் வற்றா இருப்பு காலம் எனும் வளம் நான்கைக் கொண்டதாகவும் இறையாற்றலை விளக்கியுள்ளார்.

- மேலும் இறையாற்றல் தன்மாற்றம் இயல்பூக்கம் கூர்தல் அறம் எனும் திறன்களுக்கேற்ப மாற்றம் அடைந்து இப் பிரபஞ்சத்தின் பஞ்ச பூதங்களாகவும் அவற்றின் சேர்க்கையால் உருவாகிய அனைத்துத் தோற்றப் பொருட்களாகவும் இறை நிலையைக் கண்டுள்ளார்.

- அதே பஞ்ச பூதங்கள் இணக்கமான விகிதத்தில் இணக்கமான சூழலில் ஒன்றிணைந்து உயிர்கள் ஆகி அவை ஓர் அறிவு முதல் ஆறு அறிவு மனிதன் வரை பரிணாம வளர்ச்சி பெற்று அனைத்து உயிர்களாகவும் இறை நிலையே இருக்கின்றது என்ற உண்மையை விஞ்ஞானக் கண் கொண்டு விளக்கியுள்ளார்.

இந்த விளக்கங்கள் வள்ளுவர், பாரதியார், சங்கராச்சரியார் போன்ற அனைவரது மெய் பொருள் பற்றிய கருத்துடனும் அம் மெய் பொருளே நிலையானது ஏனைய அனைத்தும் தோற்றப் பொருட்கள், மாயை என்ற கருத்துடனும் ஒன்றிணைவதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

சுருங்கக் கூறுவதாயின் இருப்பாக இருப்பது இறை நிலை மட்டுமே என்றும் ஏனைய அனைத்தும் அந்த இறை நிலையின் தன்மாற்றத்தால் ஏற்பட்ட நிகழ்வுகள் எனவும் கூறமுடியும். அந்த வகையில் பார்க்கும் போது இந்தப் பிரபஞ்சத்தின் இறை நிலையே எல்லாமாகவும் நானாகவும் இருக்கின்ற உண்மை நிலைத் தெளிவு கிடைக்கின்றது. இறை நிலையைத் தவிர்த்து வேறு எதுவும் இல்லை. / அத்வைத தத்துவம்

இறை நிலையே எல்லாத் தோற்றங்களிலும் அறிவாகவும் ஆற்றலாகவும் இருந்து அமைப்பு துல்லியம் இயக்க ஒழுங்கு உணர்தல், பிரித்தறிதல், துய்த்தல், மனிதனில் அறிவை அறியும் அறிவாகவும் இயங்குவதைத் தெளிவு படுத்தியுள்ளார். இது விஞ்ஞான, மெஞ்ஞானக் கண்ணோட்டத்தில் வேதாத்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகரிஷி அவர்கள் கடவுள் பற்றிய தெளிவான விளக்கத்தைத் தந்துள்ளதை வேதாத்திரியத்தில் நாம் காணமுடியும்.

இன்னும் தெளிவாக அருட் தந்தை அவர்கள் உயிரினங்களில் "கூர்தல் அறம்" எனும் செயல் விளைவுத் தத்துவ விளக்கத்தின் மூலம் இறை நிலை எந்த உயிரினத்திலும் அவற்றின் செயலுக்குத் தக்க விளைவாக வெளிப்பட்ட வண்ணம் இருப்பதைத் தெளிவு படுத்தியுள்ளார். இதுவே இயற்கை நீதி எனவும் இறைநீதி எனவும் இயற்கைச் சட்டம் எனவும் வலியுறுத்தி இறைநிலை எப்போதும் செயலுக் கேற்ற விளைவாகவே இருக்கும் என்பதை மிகவும் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்./ செயல் விளைவுத் தத்துவம்

இதுவே மனித வாழ்விலும் இறை நிலையின் வெளிப்பாடாக அமைகின்றது. இதனால் தான் கீதையிலும் "கர்ம யோகம்" எனும் சிறப்பு தெளிவு படுத்தப்பட்டுள்ளது. வாழ்க்கையில் ஒவ்வொருவரும் ஆற்றும் கடமை என்பது இறை நீதியை நீதி வழுவாமல் பின்பற்றி வாழ்க்கையை நடாத்துவது என்பது பொருளாகும். "கடவுளை உணர்ந்தவன் கடமையில் வாழ்வான்" என்பதற் கேற்ப ஒவ்வொருவரும் தாம் செய்யும் செயலுக் கேற்ப வெளிப்படும் விளைவுகளாக இறை நிலை வெளிப்படுவதை உணர்ந்து கொண்டால் அதுவே தெய்வம் என்ற புரிதல் ஏற்படும் போது நன்மையும் தீமையும் நம்மில் இருந்தே வெளிப்படும். அதாவது "நன்றும் தீதும் பிறர் தர வாரா" என்ற கனியன் பூங்குன்றனாரின் வார்த்தை இறை நிலையை செயலுக்கேற்ற விளைவு மூலம் வெளிப்படுத்தும் தெளிவு அல்லது ஞானம் கிடைக்கும் போது இறைநிலையுணர்வு இயல்பாகவே மலரும்.

மூன்றாவதாக கர்மம் என்பதை அருட் தந்தை அவர்கள் வாழ்க்கைத் தத்துவத்தின் அற நெறிகளில் ஒன்றாகிய கடமை மூலம் உணர்த்தியுள்ளார். வாழ்வியல் ஒழுக்க நெறிகளில் கடமையறம் என்பது அறத்தை வலியுறுத்தும் ஒரு வாழ்க்கை நெறி அதுவே கர்ம யோகம் எனும் இறை நிலையை அடையும் ஒரு வழி முறையாக முன்னோர்கள் வலியுறுத்தியுள்ளனர். கீதையின் சாராம்சமே "கடமையைச் செய் பலனை எதிர் பாராதே" எனக் கூறுகின்றது. அதுகூடி

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது.
எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றானவே நடக்கும்.

இங்கு கீதாச்சாரத்திலுள்ள நன்றாகவே என்ற சொல் சரியாகவே என மாற்றி உணரப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது நடந்ததோ அது சரியாகவே நடந்தது.
எது நடக்கின்றதோ அது சரியாகவே நடக்கின்றது.
எது நடக்க இருக்கின்றதோ அதுவும் சரியாகவே நடக்கும்.

"தப்புக் கணக்கிட்டு தான் ஒன்றை எதிர் பார்த்தால்
ஒப்புமோ இயற்கை விதி
ஒழுங்கமைப்பிற் கொத்தபடி
அப்போதைக் கப்போது அழிக்கும் சரி விளைவு"

சுதர்மம் - கர்மம் - விகர்மம் என்ற நிலைகள் கீதையில் விளக்கப்படும் முறை உதாரணங்களுடன் கூறப்பட்டுள்ளது.

வினோபாபாவே எழுதிய புத்தகம்

கீதைப் பேருரைகள் :

வாழ்க்கைத்தத்துவம் பற்றிக் கூறும் போது சுதர்மம் என்றொரு வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

**வாழ்க்கையின் பெரும் தத்துவங்கள் மூன்று**

1. ஆன்மாவின் அழியாத்தன்மை
2. உடலின் இழிதகமை
3. சுதர்மத்தின் தவிர்க்க இயலாமை.

இங்கு சுதர்மம் கடமையாய் அமைகின்றது.

எந்த அப்பா அம்மாவுக்குப் பிள்ளையாக பிறந்திருக்கிறேனோ அவர்களுக்கு பணிபுரிதல் எமது கடமை அப் பிறவியினாலேயே அமைத்துள்ளது. அது போல் எந்த சமூகத்தில் நான் பிறந்தேனோ அதற்குப் பணிபுரிதல் எமது கடமை இயல்பாகவே ஏற்பட்டுள்ளது. உண்மையில் நாம் பிறக்கும் போதே நமது சுதர்மமும் பிறந்துவிடுகிறது. அது மட்டுமல்ல பிறப்பதற்கு முன்பே அது நமக்காகக் காத்துநிற்கின்றது. சுதர்மம் தாய்க்கு ஒப்பிடக்கூடியது. ஏனெனில் என் தாய் யார் என்பது எனக்காக முன்னரே தீர்மானிக்கப்பட்டுவிட்டது. அது தவிர்க்கமுடியாதது. இந்த சுதர்மம் தான் நமது வாழ்க்கையின் ஆதாரம். அதனைத் தட்டிக்கழித்து வாழ்தல் தன்னையே புறக்கணித்தலுக்குச் சமமானது.

சுதர்மம் இயற்கையாகக் கிடைப்பது அதை நாமாகவே செய்ய வேண்டும். அவ்வாறு செய்தற்கு பல மோகங்கள் நம்மைச் சுற்றி நாமே ஏற்படுத்தித் தடை போடுவதால் அவை இழிந்த விகாரங்கள் என்ற நோய்க் கிருமிகள் கூட்டமாக மாறுவதால் சுதர்மம் என்ற ஆரோக்கியம் கெட்டுவிடுகிறது.

முதல் இரண்டு தத்துவங்கள் ஆகிய ஆன்மா என்ற நான் அழியக்கூடிய உடலல்ல என்பதும் உடல் இழிவான புறக்கூடு மட்டுமே. மேலும் நான் என்பது பரந்த ஆன்மா ஆவேன் என்பது இவை இரண்டும் இணைவது தான் ஞானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஞானம் மனதில் நன்கு பதிந்து விட்டால் சுதர்மம் நமக்குச் சிறிதும் பாரமாகவே தோன்றாது. மாறாக சுதர்மம் அல்லாத வேறு எதைச் செய்வதும் தான் பாரமாகத் தேன்றும். இந்த ஆன்ம தத்துவத்தின் சிதைவின்மையையும் உடலின் இழிவையும் புரிதல் சிரமம் ஆனது அல்ல இவை தான் உண்மைகள்.

☛ கணம் தோறும் மாறுவதும் அழிந்து கொண்டிருப்பதுமான உடல் தானா நீ?

☛ அல்லும் பகலும் பல மூத்திரக்குழாய்கள் ஓடிக் கொண்டிருப்பதும் விடாது தேய்த்துத் தேய்த்துச் சுத்தம் செய்யப்பட்டு வந்ததும் அழுக்கும் ஆபாசமும் அகலாததுமான அந்த உடல் தானா நீ?

☛ அது அசுத்தமானது நீ அதை கழுவுவோன்

☛ அது நோய் மலிந்தது நீ அதற்கு சிகிச்சை செய்வோன்

☛ அது எண்சாண் இடத்தை ஆக்கிரமித்திருப்பது நீ மூவுலகங்களிலும் சுற்றித்திரிவோன்

☛ அது தினமும் மாறுவது நீ அதன் மாறுபாட்டைப் பார்த்துக் கொண்டு இருப்போன்.

☛ அது சாகப் போவது நீ அதன் சாவுக்கு ஏற்பாடு செய்பவன்

இவ்வாறு உனக்கும் அதற்கும் உள்ள வேற்றுமைகள் மிகத் தெளிவானவை.

உடல் பற்று அகன்ற நிலையில் உடல் சேவைக்குரிய கருவியே என்பது புலன் ஆகவும் உடலுக்கு அதற்குரிய மதிப்புக் கிட்டும் ராட்டையைக் கொண்டு நூல் நூற்க வேண்டியுள்ளது எனவே அதற்கு எண்ணெய் போட வேண்டியுள்ளது. அதாவது உடலுக்குரிய குடிக்கூலியைச் செலுத்தி விடவேண்டும்.

வாழ்க்கையின் தத்துவங்களை நடைமுறைக்குக் கொண்டு வரும் கலை அல்லது யுக்தியே யோகம் எனப்படும். கர்மத்தைச் செய்வது யோகமாக அமையுமானால் தான் அதற்குப் பெயர் கர்மயோகம் ஆகும். கர்மத்தைச் செய்பவன் மனநிலையில் இருவகை பாவனைகள் இருக்கும்.

1. தாம் செய்யும் காரியத்தின் பயனை தாம் நிச்சயமாய்த்துய்ப்போம் என்பதும் இதற்கு நமக்கு உரிமையுண்டு.

2. நமக்கு அனுபவிக்க பயன்கிட்டாது எனில் நாம் காரியமே செய்யமாட்டோம் என்பது.

ஆனால் கீதை காரியத்தைச் செய்யும் போதே பயனிடத்து ஆசை வையாதே என்று சொல்வது காரியத்தை சிறப்பாகவும் திறமையடனும் செய்ய வற்புறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் பயனைவிரும்பும் போது அவனது கவனம் பயனில் சிதறுவதால் காரியம் முழுத்திறனுடன் அமையாது. இதுவே அருட் தந்தையின் பார்வையில் கடமை என்பது நாம் பட்ட கடன் ஆகவும் அதை நாம் செய்வது என்பது பட்ட கடனை மீளச் செலுத்துவது என்பதாகவும் அமைகிறது.

அது மாத்திரம் அன்றி செய்யும் செயலில் இறைநிலை இல்லை அந்த செயலுக்குரிய விளைவாக வருவதே இறைநிலை என வலியுறுத்துகின்றார் எனவே கர்மம் என்னும் சுதர்மத்தை ஆற்றுவதில் கர்மம் செய்வதற்கு மட்டும் உனக்கு பூரண சுதந்திரம் உண்டு எனவும் செய்யும் கர்மத்திற்கு இன்ன விளைவு தான் வர வேண்டும் என உரிமை பாராட்டுவதற்கு உரிமை இல்லை மாறாக இறை நீதிப்படி இறைநிலையே விளைவாக அமையும் எனவே கர்மம் ஆற்றுவது விகர்மம் அகர்மம் என்ற நிலைக்கு உயர்ந்து கருமம் ஆற்ற வேண்டும் என கீதை வலியுறுத்துகின்றது.

துகாராமின் பக்தியைப் பார்த்து சிவாஜி மன்னனுக்கு அவரிடம் மரியாதை ஏற்பட்டு அவரின் வீட்டுக்கு பல்லக்கு அனுப்பி அவரை அழைத்து கௌரவிக்க ஏற்பாடு செய்தார். ஆனால் துகாராமிற்கோ தம்மை வரவேற்பதற்குச் செய்யப்பட்ட ஏற்பாடுகளை பார்த்து மிக்க வேதனையுண்டாயிற்று.
அவரது மனதில் என்பக்திக்கா இந்த பயன்?
நான் இதற்காகவா பக்தி புரிகிறேன்?
என்று சொல்லிக் கொண்டார்.

பகவான் மதிப்பு, பெருமை என்ற பயனைத்தந்து அவரைத் தம்மிடம் இருந்து அகற்றிக் கொண்டிருப்பதாய் அவருக்குத் தோன்றியது

இறைவா இது உனக்கு நல்லதல்ல

பக்தியே பக்தனது சுதர்மம், பக்தியில் பயன் என்ற முட்கள் தோன்றாது பார்த்துக் கொள்ளல் அவனது வாழ்க்கைக் கலை.

புண்டலீகனது வரலாறு பயனைத்துறத்தலில் இதையும் விட ஆழமானது அவன் தனது பெற்றோருக்குப் பணிவிடை புரிந்து கொண்டு இருந்தான். அவன் பணிவிடையைக் கண்டு மகிழ்ந்த பாண்டுரங்கன் அவனுக்குக் காட்சியளிப் பதற்காக ஓடோடியும் வந்தார்.

ஆனால் அவன் பாண்டுரங்கனது வலையில் சிக்கவில்லை தான் செய்து வந்த பணிவிடையைக் கைவிடவில்லை. தன் பெற்றோருக்குச் செய்யும் பணிவிடை அவனுக்கு உள்ளம் கலந்த கடவுள் பக்தியாகவே அமைந்தது.

அவன் பகவானிடம் நீங்கள் எனக்குக் காட்சியளிக்க தாமே எழுந்தருளி யிருக்கிறீர்கள் ஆனால் நான் உங்களின் "உம்" தத்துவத்தை ஏற்பேன் அதாவது நீங்கள் ஒருவர் தான் பகவானென்று நான் நம்பவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நீங்க“ளும்” பகவான் தான் இவ்வென் தாய் தந்தைய“ரும்” பகவான் தான் இவர்களின் பணியில் ஈடுபட்டிருப்பதால் நான் உங்களைக் கவனிக்க முடியாது இருக்கிறேன் மன்னிக்க வேண்டும் என்று சொல்லி பகவான் நிற்பற்கு ஒரு செங்கல்லை அவர்பக்கம் தள்ளிவிட்டு அதே பணிவிடையில் முனைந்து விட்டான்.

எனவே கர்மயோகி தன் காரியத்தைச் சிறப்பாகச் செய்வான் காரணம் காரியமே அவனுக்குக் கடவுள் வழிபாடும் பூஜை நியமங்களும் ஆகம்.

சுதர்மத்தைத் தட்டிக் கழித்துவிட்டு பிறர் தருமத்தை ஏற்போமாயின் பயன் கருதாமை என்ற பயன் சாத்தியமில்லை சுதர்ம அனுஸ்டானம் இன்றியமையாதது.

உதாரணமாக அஹிம்சையின் பக்தனுக்கு இம்சை தவிர்க்க வேண்டியது ஆனால் இம்சை மனம் சார்ந்த ஒரு பண்பு வெளிப்பார்வைக்கு இம்சைச் செயல் செய்யாமல் இருப்பதாலேயே மனமும் அஹிம்சை மயமாய் இருக்கும் என்பதில்லை. கையில் வாளைத் தாங்குவோனின் இம்சைப் போக்கு பட்டவார்த்தனமாய் தெரிகிறது. ஆனால் அதைத் துறந்து விடுவதால் அஹிம்சை மயமாக மாறி விடுகின்றான் என்பது அர்த்தம் அல்ல.

“கர்மம்” என்ற சொல் சுதர்மம் என்ற பொருள்படுகின்ற போதும் சுதர்மம் என்ற கர்மம் புரிந்து பயன் கருதாமையை எய்துவதற்கு இன்னுமொன்றின் உதவி தேவைப்படுகின்றது. அதாவது காமம் வெகுளி என்பவற்றை வெல்லுதல் சித்தத்தின் தெளிவு. கர்மம் என்பதற்கு சுதர்மம் புரிதல் என்ற ஸ்தூலமான புறச் செயல் பொருளாகின்றது. இப் புறச் செயலுடன் சித்தசுத்தி எனும் சித்தத்தை புகுத்துதல் <u>அகர்மம்</u> எனப்படும்.

இந் நிலையே “பயன் கருதாக் கர்மயோகம்” ஆகும்

“பயன் கருதாக் கர்மயோகம்” சாத்தியமாவதற்கு கர்ம - விகர்மக் கூட்டு அவசியம் ஆகின்றது. இதன் விளைவு தான் அகர்மம் ஆகமுடியும்.

உடலும் மனமும் வெவ்வேறு பொருள்கள் ஆகையால் இவை இரண்டும் இணையும் போது தான் இலட்சியம் கைகூடும். அதாவது புறக்கர்மத்தில் இதயத்தின் கருணை நைப்பு இணைந்த அனுஸ்டானமே சுதர்ம அனுஸ்டானம் எனப்படும். இவ்வாறு மனம் கர்மத்துடன் இணையும் நிலையே விகர்மம் எனப்படும்.

**சுதர்மம் ஆற்றுதல்**

கர்மம் - விகர்மம் - அகர்மம் என ஆகும் போது தான் பயன் கருதா கர்மயோகம் சாத்தியம் ஆகும். இவ்வாறு கருமம் ஆற்றுதல் இறைநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்துவதற்கு அல்லது முழுமைப் பேறு அடைவதற்கான ஒருவழியாக கர்மயோகத்தை வகுத்துள்ளார்கள்.

இறுதியாக யோகம் இது ஒரு தொழில் நுட்பமான சொல் மனதின் நுட்பம் சார்ந்த உளவியல் தொழில் நுட்பம் எனலாம்.

இணைதல்/இனிமை காத்தல் என அர்த்தப்படும் இச் சொல் மூலம் வேதாத்திரியத்தில் உடல் உயிர், உயிர்மனம், தான் சமுதாயம், தான் இயற்கை என இந்த இனிமை காத்தல் அல்லது இணைதல் செயல்பாடுகள் நிறைவடைவதற்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.

நிறைவாக வேதாத்திரியத்தில் கடவுளும் கர்மயோகியும் என்ற எனது இந்தத் தலைப்பின் ஊடாக இறைநிலை உணர்வு பெற்று அதனூடாக இறை நிலைத் தெளிவு பெற்று கர்மம் ஆற்றுதல் எனும் கடமையறத்தை அறவழி நின்று அதுவே வாழ்க்கை நெறியாக அமைக்கப்படும் போது வாழ்க்கை தான் ஆன்மீகம் ஆன்மீகம் தான் வாழ்க்கை நெறி என்ற உண்மை உணர்ந்து பேரறிவாகிய இறை நிலையே உடலளவில் எல்லை கட்டி சிற்றறிவாக உள்ளது என்ற உண்மை உணர்ந்து பேரறிவு முழுமையாக உணரப்பெற்ற நிலையில் அதுவே இந்தப்பிரபஞ்சத்தில் எல்லாமாகவும் நானுமாகவும் இருக்கின்ற உண்மை நிலைத் தெளிவு கொண்டவன் சிறந்த கர்மயோகியாகவும் இறைநிலை உணர்வும் தெளிவும் பெற்றவனாகவும் முழுமையடைதல் என்ற வாழ்வின் நோக்கத்தை நிறைவு செய்தவனாகவும் வாழ வழியேற்படுத்துவதற்கு இந்த கடவுளும் கர்மயோகியும் என்ற கருத்துரை உதவியாக அமையும் எனக்கூறி நிறைவு செய்கிறேன்.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

மனவளக்கலை பேராசிரியர்

அருள்நிதி ஆ. தங்கராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் வேதாத்திரியம் தழுவிய

# " ஆன்மீகம் - ஒரு நோக்கு"

## " கடவுள் - மதம்" தொடர்பிலான மனிதனின் சிந்தனை இடைவெளி

ஆதியென்ற பிரம்மம் அது கடல் போல் ஒன்று
அதில் எழுந்த ஜீவன் எல்லாம் அலை போல் ஆகும்.
பேதமுடன் அலைகள் அது விரிந்த போதும்
பிரியாது கடலைவிட்டு - கடல் ஒன்றேனும்
வாதமிடும் பலகோடி அலைகள் ஊடு
வழுவாது நிறைந்து நின்று - முடிவில்
நீதமுடன் ஐக்கியம் கொள் தன்மை போலும்
நிலையற்ற ஜீவாத்மா பரமாய் ஒன்றும்.

- அருட் தந்தை வேதாத்திரி மகரிஷி -

"கடவுள்" என்ற கருத்துருவாக்கம் மனிதனால் ஏற்படுத்தப்பட்டது.

1. "தூணிலும் இருப்பான் - துரும்பிலும் இருப்பான்"
2. "எங்கும் நீக்கமற நிறைந்த இறைவன்"
3. "அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் ஈடு இணையற்ற அல்லாஹுஹ்" - இஸ்லாம்
4. "பரலோகத்தில் இருக்கும் பிதாவே" - கிறிஸ்தவம்
5. "எப்பொருளிலும் என்னைக் காண்பவன் எவனோ அவனில் நான் இருக்கின்றேன் என்னில் அவன் இருக்கின்றான்" - கிறிஷ்ண பரமாத்மா - கீதை
6. "இறையாட்சி உன்னுள்ளே" ( The kingdom of god within you) Jesus
7. "எப்பொருள் எத்தன்மையுடையதாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிது" - திருவள்ளுவர்
8. "உள்ளத்தின் உள்ளே பல தீர்த்தங்கள" - திருமூலர்
9. "பரமாத்மா - ஜீவாத்மா என்ற வேறுபாடற்ற, வேறுபாடு தெளிவாகக் காணமுடியாத அத்வைதநிலை" - வேதாந்தம் - ஆதிசங்கரர்
10. "அன்பே சிவம"
11. "அன்பு தான் தெய்வம" - புத்தர்
12. "கடவுளை உணர்ந்தவன் கடமையில் வாழ்வான்"
13. "எல்லாம் சிவமயம்" - சைவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. சத்தியம் - உண்மை
சிவம் - உண்மையில் வாழ்தல்
சுந்தரம் - அக அழகு பெற்று வாழ்தல்
15. கடவுள் - கட + உள் எனும் செயலைக் குறிக்கும்.
16. "உள்ளும் புறமுமாய் உள்ள தெல்லாம் தானாகும்
வெள்ளம் ஒன்றுண்டாம் அதனைத் தெய்வம் என்பார் வேதியர்" - மகாகவி பாரதியார்
17. "அறிவேதான் தெய்வம்" - தாயுமானவர்
18. "பிரம்மத்தை உணர்ந்தவன் பிரம்ம ஞானி"
19. "வெட்ட வெளியாய் அறிவாய் வேறு பல சக்திகளாய்" - மகாகவி பாரதியார்
20. "எல்லாம் வல்ல தெய்வம் அது எங்கும் உள்ளது நீக்கமற சொல்லால் மட்டும் நம்பாதே சுயமாய் சிந்தித்தே தெளிவாய்" - வேதாத்திரி மகரிஷி
21. "செயலுக்குத்தக்க விளைவு - இறைநீதி" - வேதாத்திரி மகரிஷி
22. "ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமமானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு" - நியூட்டனின் மூன்றாம் இயக்க விதி

இவை யாவும் கடவுள் நிலை எனும் பொதுவான "தன்மையை - ஆற்றலை" வலியுறுத்தும் பல்வேறு சிந்தனையாளர்களின் சிந்தனை வெளிப்பாடுகள்.

மதங்கள் பற்றி ......

மனிதனின் வாழ்வின் முடிவான நோக்கம்

- முக்தி அடைதல்
- முழுமை அடைதல்
- வீடு பேறு அடைதல்
- ஆன்ம விடுதலை பெறுதல்
- இறை நிலை உணர்வு பெறுதல்
- மோட்சம் அடைதல்
- ஜீவ சமாதி அடைதல்
- ஜீவ முக்தி அடைதல்
- ஞானம் பெறுதல்
- அறிவில் முழுமை அடைதல்
- வினை அறுத்தல்
- இறைநிலை யோடு ஒன்றுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இறைவன் திருவடி சரண் புகதல்
- இறைவனால் ஆட் கொள்ளப்படுதல்

மேற் கூறப்பட்ட அனைத்தும் வாழ்வின் நோக்கத்தைக் குறிக்கும் ஒரே பொருள் கொண்ட சொற்பதம் கடந்த இறை நிலை எனும் மெய்ப்பொருளை அடைந்து அதனுடன் சங்கமமாதல் அதாவது ஜீவாத்மா முடிவ்லி பரமாத்மாவுடன் இரண்டறக் கலத்தலைக்குறிக்கும்.

வாழும் போது - "எல்லைக்குள் இன்பம் துய்ப்பாய்
வாழ்வின் நிறைவில் - ஏகாந்தத்தில் கரைந்து எல்லை இழப்பாய்"

இது மிகவும் கடினமான முயற்சி என்பதால் அறிவில் முழுமையற்ற பாமர மக்களையும் மேற் கூறிய நோக்கத்தை நிறைவு செய்வதற்கு ஏற்றவாறு வழிநடத்துவதற்கு அறிவியல் தெளிவு பெற்ற ஞானிகளால் உருவாக்கப்பட்டு ஞானிகளால் வழிநடத்தப் பட்டவையே, மதங்களும் அவற்றின் கோட்பாடுகளும் ஆகும். காலப்போக்கில் அவை யாவும் நிறுவனமயப்படுத்தப்பட்டு விட்டன.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதற்கமைய ஒரே தெய்வத்தை உணர வைப்பதற்கு ஏன் பல மதங்களும் பல கோட்பாடுகளும் தோன்றின என்ற கேள்விக்கு விடை காண்பதற்கு முன்னராக

இன்று இந்த பலமதக் கோட்பாடுகள் தான் மனித குலரத்தை நாசம் செய்யும் கருவிகளாக மாறியுள்ளன என்பதை மனம் வருந்தி ஏற்றுக் கொள்ளக் கூடிய மனப்பக்குவம் மனிதனுக்கு வர வேண்டும்.

பல மதங்கள் தோன்றிய வரலாற்றுக் காலத்தையும் நியாயத்தையும் அறிவுபூர்வமாக அணுகி அறிவில் உயர்ந்ததோர் மதம் சார்ந்த வழிபாட்டு முறையில் உள்ள "தெய்வம் ஒன்று நாமங்கள் தான் பல" எனும் உண்மைத் தன்மையை மறுதலிக்கக் கூடிய வகையில், சுயநலவாதிகளால் இடைச் செருகலுக்கு உள்ளாக்கப்பட்ட, இறைநிலையில் பேதங்களை வலியுறுத்தி நிற்கின்ற மதச் சடங்குகள் சம்பிரதாயங்களை களைந்து, எல்லா மதங்களும் வலியுறுத்தும் பக்தி மார்க்கம் கடந்து ஞானம் பெறுவதற்கான ஞானப் போதனையை பக்தி மார்க்கத்தின் உச்சத்தில் எல்லோர்க்கும் உணர்த்த வேண்டியது ஒரு சமுதாயக் கடமை ஆகும்.

இதன் மூலம்

- அரசியல்
- ஆன்மீகம்
- சமூகம்
- பொருளாதாரம்
- தொழில்
- கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவை சார்ந்த பேதங்களை நீக்கி ஓர்மை, கூர்மை, நேர்மை, சீர்மை என்ற பண்புகளில் மேம்பட்ட, ஒரு நிலைப்பட்ட புதிள சமுதாயத்தை உருவாக்க முடியும். "தெய்வம் ஒன்றேு நாமங்கள் தான் பல" என்னும் அறிவு பூர்வமான சிந்தனையின் வளர்ச்சியை எல்லோரிடமும் ஏற்படுத்தக் கூடியவாறு அனைத்து மதக் கோட்பாடுகளிலும் இருக்கக் கூடிய வழி முறைகளை அவரவர் மனங்களில் தாக்கங்கள் ஏற்படாத வகையில் எடுத்துக் கூற வேண்டும்.

எல்லா மதங்களும் வலியுறுத்தும் இறைநிலையின் பண்புகளாகிய "அன்பும் கருணையும்" எல்லோரிடமும் இயல்பாக மலரக்கூடிய வழிமுறைகளைப் போதிப்பதன் மூலமே மத நல்லிணக்கம் ஏற்படுத்த முடியும்.

இதுவே கடவுள் என்ற கருத்துருவாக்கத்தின் மூலமும் மதங்கள் என்ற கோட்பாடுகளின் மூலமும் வலியுறுத்தப்படுகின்ற "இறை நிலையோடு இணைதல்" எனும் வாழ்வின் நோக்கத்தை ஏற்படுத்த, நிறைவு செய்ய உதவும் வழி ஆகும்.

இதன் மூலமே "ஆன்ம நேய ஒருமைப்பாடு" "மனிதநேய ஒருமைப்பாடு" என்பவற்றைக் கட்டி எழுப்ப முடியும். இதுவெ அறிவில் உயர்ந்தோர் ஆற்ற வேண்டிய சமுதாயக் கடமையாகும்.

"மாற்றம் ஒன்று தான் மாறாதது ஏனைய அனைத்தும் மாற்றத்திற்கு உள்ளாகும் நிகழ்வுகளே" எனும் இயங்கியல் கோட்பாட்டிற்கு அமைய காலத்திற்கு ஏற்றவாறு நாமும் நமது ஆன்மீக சிந்தனைகளில் மாற்றங்களைக் காண வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்

இறை நிலையாகிய மெய்ப்பொருள் ஒன்று தான் நிலையானது. ஏனைய அனைத்தும் மாயைத் தோற்றங்களே என்பதை உணர்ந்து,

"இருமை அழிந்த பின் எங்கிருப்பாய்  
அற்ப மாயையே  
ஒருமை தெழிந்தார் முனை மோடாது  
நிற்யைபோ அற்ப மாயையே"

எனும் பாரதியாரின் கவிதை வரிகளுக்கு ஏற்ப தெய்வ நிலை ஒன்றே, அதுவே ஈடு இணையற்றது, அன்பும் கருணையுமாக இருப்பது, வற்ற இருப்பாக இருப்பு நிலையிலும், பஞ்சபூதங்களின் முதற்பூதமாகிய "விண்" ஆக இயங்கு நிலையிலும், விண்ணின் தொகுப்பால் தோன்றிய திணிவு பெற்ற சடப் பொருளாகவும், அவற்றின் சேர்க்கையால் தோன்றி உணர்வு பெற்ற நிலையில் ஓர் அறிவு முதல் ஐயறிவு வரை மலர்ந்த உயிரினங்கள் ஆகவும், அவற்றை எல்லாம் அறிவால் அறியும் அறிவு பெற்ற மனிதனாகவும் உள்ளதை உணர்ந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை உணர்த்துவதே தத்துவ ஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களால் உருவாக்கப்பட்ட விஞ்ஞானத்துடன் இணைந்த மெஞ்ஞானத்தை வலியுறுத்தும் "வேதாத்திரிய மெய்யியல்" என்னும் பொக்கிஷம் ஆகும்.

இச்சிந்தனை "மனவளக்கலை யோகா" என்ற வடிவில் மனித குல மேம்பாட்டிற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனி மனிதனும் ஒழுக்கம், கடமை, ஈகை எனும் அறநெறிகளை வாழ்க்கை நெறிகளாகப் பின்பற்றி அன்பு கருணை வடிவான இறைத்தன்மையை தன்னுள்ளே உணர்ந்து, வாழ்க்கை முறைதான் ஆன்மீகம். ஆன்மீக செயற்பாடு தான் வாழ்வியல் ஒழுக்க நெறி என்பதை நடை முறையில் பின்பற்றி வாழ வழிகாட்டும் ஒரு அற்புதமான "யோக நெறி" தான் "மனவளக்கலை யோகா" ஆகம்.

தன்னை அறிதல் எனும் சுய தேடல் மூலம் தன்னை அறிந்து தன் குறை நிறைகளை உணர்ந்து அவற்றை திருத்துவதற்கான வழி முறைகளை வகுத்து வகுத்த வழி முறையில் வாழ்ந்து காட்டும் வகையில் அமைக்கப்பட்ட பயிற்சி நெறிகளை வழங்கும் வாழ்வியல் கல்வி தான் "மனவளக்கலை யோகா" எனும் அற்புதமான கல்வி முறையாகும். இது ஓர் உள்ளுணர்வுக்கல்வி முறையாகும்.

இதன் மூலம் மக்கள் மத்தியில் ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்தி உண்மையான ஆன்மீக சாதனையை நிலை நாட்டுவதன் மூலமே சமூகத்தின் சீர்கேடுகள் நீக்கப்பட்டு புதியதோர் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

எனவே சிந்தனையாளர்கள், அறிவறிந்தவர்கள், சான்றோர்கள் அனைவரும் ஒன்றிணைந்து சமுதாய சீர்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இது ஒரு சமூகப் பொறுப்பு என்பதை உணர்ந்து "விதித்தன செய்தலும் - விலக்கியன ஒழித்தலும்" எனும் அறத்தை வாழ்வியல் செயல்பாடுகள் ஆக்கி வாழ்வதன் மூலம்

"கடவுள் - மதம்" சார்ந்த சிந்தனை இடைவெளியைப் போக்கி முழுமை வாழ்வு வாழக்கூடிய ஆன்மீக சாதனையை ஏற்படுத்த வழிவகுப்போம்.

நன்றி

வாழ்க வளமுடன்

அருள்நிதி ஆ.தங்கராஜா
மனவளக்கலை பேராசிரியர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நீங்கா நினைவில் .....

நான் தினம் தோறும்
வணங்கும்
என் முற்பிறப்பாகிய
என் தந்தை
**அமரர்**
**இளையதம்பி ஆறுமுகம்**
அவர்களை
நினைவு கூருகின்றேன்

வஞ்சகர்களின்
வலையில் சிக்கி
1979 இல் அகால
மரணத்தைத் தழுவிய
என் சக உதிரம்
**அமரர்**
**ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தராஜா**
அவர்களை
நினைவு கூருகின்றேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் நீங்கா நினைவில் .....


அறியா பருவத்தில்
1972ல் அகால
மரணத்தை அரவணைத்த
என் சக உதிரம்
**அமரர்**
**ஆறுமுகம் விஜயராஜா**
அவர்களை
நினைவு கூருகின்றேன்

சிறு வயதிலேயே
நோய்வாய்ப் பட்டு
இறைநிலையடைந்த
அன்பு சக உதிரம்
**அமரர்**
**விஜயா ஆறுமுகம்**
அவர்களை
நினைவு கூருகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org